
தர்மசக்கரம்



நள ௵ பங்குனி ௴ சக்கரம் 26 ஆரம் 3

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை - 639 115 திருச்சி ஜில்லா

DHARMA CHAKRAM

Statement about ownership and other particulars about Newspaper 'Dharma Chakram' to be published in the first issue every year after the last day of February.

FORM IV

(See Rule 8)

1. Place of Publication : Tirupparaitturai
2. Periodicity of its Publication · Monthly
3. Printer's name : Swami Yogananda
   Nationality : Indian
   Address : Tapovanam Printing School, Tirupparaitturai-639115, Tiruchi Dt.
4. Publisher's name : Swami Yogananda
   Nationality : Indian
   Address : Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639115, Tiruchi Dt.
5. Editor's name : Swami Nithyananda
   Nationality : Indian
   Address : Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639115, Tiruchi Dt.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : Sri Ramakrishna Tapovanam. Tirupparaitturai-639115, Tiruchi Dt.

I, Yogananda, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Yogananda
Signature of the publisher

Date: 14—3—77

முத்தமிழ் ... 14.3.77

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 26	நள ஹு பங்குனி மீ	ஆரம் 3

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

1. ஆண்டு சந்தா ரூ. 10

ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

2. சகாய சந்தா ரூ. 5

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்து செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்து செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

3. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

உள்நாடு தனி இதழ். ரூ 1-00 வெளி நாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—பவானியில் 20—3—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பவானி-ஈரோடு மெயின் ரோட்டில் உள்ள ராஜாராம் அய்யர்-குட்டி செட்டியார் தோப்பு (காளிங்கராயன் வாய்க்கால் பாலத்திற்குத் தென்புறம்)

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

ராமநாதபுரம் ஜில்லா—சாத்தூரில் 20—3—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சாத்தூர் இந்து நாடார் எத்தல் ஆர்.வி உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

சேலம் ஜில்லா—ராசிபுரத்தில் 27—3—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சிவானந்த பிரார்த்தனை மண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 3—4—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: லாயல் மில் துவக்கப்பள்ளி (லாயல் மில் சமீபம்)

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

மதுரை ஜில்லா—மேலூரில் 8—4—77 வெள்ளிக்கிழமை

இடம்: சபரிமலை அய்யப்ப சுவாமி பிரார்த்தனை மண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 10—4—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 26 || நள ஞூ பங்குனி மீ || ஆரம் 3

பிரார்த்தனை

स्वप्ने स जीवः सुखदुःख भोक्ता स्वमायया कल्पितजीवलोके ।
सुषुप्तिकाले सकले विलीने तमोऽभिभूतः सुखरूपमेति

— कैवल्योपनिषत्

ஸ்வப்னே ஸ ஜீவ: ஸுகதுக்க போக்தா
ஸ்வமாயயா கல்பிதஜீவலோகே ।
சுஷுப்திகாலே ஸகலே விலீனே
தமோऽபிபூத: ஸுகரூபமேதி ॥

— *கைவல்யோபநிஷதம்*

சொப்பனவஸ்தையில் தன்னுடைய மனதைக்கொண்டு சிருஷ்டிபண்ணிய மாய உலகில் ஜீவாத்மன் இன்பதுன்பங்களை உணருகிறான். அயர்ந்த உறக்கத்தில் மனதானது காரணநிலையில் ஒடுங்கியிருக்கிறபொழுது அவனுடைய ஜீவவியக்தி தமோகுணத்துக்கு உட்பட்டதாகிறது. ஆத்மாவாகிய அவன் பிரம்மானந்தத்தில் திளைத்திருக்கிறான்.

நித்திரையிற் செத்த பிணம் நேருமுடற்கிச்சை வையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

நாளைக்கு நிகழ்வது யாது என்பதைக் கடவுள்தான் அறிகிறார்.

தீமையை அகற்றுபவன் யாண்டும் இன்பத்தில் திளைத்திருக்கிறான்.

இயற்கைத்தாய் எடுத்துள்ள வடிவங்களை யாண்டும் பண்படுத்தி வருகிறாள்.

மகிழ்வுடன் நிறைவேற்றுகிற பணிவிடையே யாண்டும் இன்பம் நல்குகிறது.

உண்மை மனிதனைச் சார்ந்ததன்று. மனிதன் உண்மையைச் சார்ந்துள்ளான்.

காமத்தைக் காய்ந்திடு. அப்பொழுது காரிகையர் கடவுள் சொரூபமாகத் தென்படுவர்.

உள்ளத்தை இறைவனுக்குரியதாக்கினால் அதனுள் துன்பம் நுழைவதற்கு இடமில்லை.

பண்பட்டுள்ள உள்ளத்தினுள் கவலை, ஏமாற்றம், பதைபதைப்பு முதலியன இடம் பெறமாட்டா.

இயற்கையில் அமைந்துள்ள சூழ்நிலைகளனைத்தும் மனிதனை நன்னெறியில் திருப்புதல் பொருட்டேயாம்.

கடவுளின் மகிமையை உணருபவன் தன் மதம் மேலானது என்றும் மற்றவர்கள் மதம் மட்டமானது என்றும் மொழியான்.

ஆபத்தான சூழ்நிலையினின்று பறவை வானத்தில் உயரப்பறந்து போவதுபோன்று மட்டமான எண்ணங்களினின்று உன் மனதை உயர்நிலைக்கு உயர்த்திக்கொள்.

பிறருடைய நலனைக் கருதாது உணவுப்பொருள் போன்றவைகளில் கலப்பை உண்டுபண்ணுவது செல்லுபடியாகாத போலிப் பணத்தைச் சம்பாதிப்பதற்கு நிகராகும்.

மனிதனை மனிதன் வற்புறுத்துதலின் வாயிலாகத் திருத்தியமைக்க முடியாது. அவனுடைய மனப்பான்மையை மாற்றுவதன் வாயிலாக அவனைத் திருத்தியமைக்க முடியும்.

சான்றோனை எச்செயலும் துன்புறுத்த மாட்டாது. சாவு என்பது பயன்படாத உடையைப் புறக்கணிப்பதற்கு நிகர். ஆதலால் நண்பன் ஒருவன் மடிந்துபோனான் என்று அறிஞன் ஒருவன் அடித்துப் புடைத்துக்கொண்டு வருந்துவதில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பக்தர் ஒருவர் பரமஹம்சதேவரிடம் கேள்வி ஒன்றைக் கிளப்புகிறார்.

சென்னையில் அடையாற்றில் தலைமை ஸ்தானம் வகித்துவரும் Theosophical Society என அழைக்கப்படுகிற பிரம்மஞானசபையைப் பற்றித் தங்கள் கருத்து யாதோ?

பரமஹம்சதேவர்: ''மானுடனாகப் பிறந்திருக்கிற ஒருவனுக்குப் பக்தி முற்றிலும் அவசியமானது. சர்வேசுவரனிடம் மாறாத அன்பு பூண்டிருப்பது பக்தியாகும். Theosophical Society எனப் பகரப்பெறுகிற பிரம்மஞான சபையைச் சேர்ந்தவர்கள் பக்தியை நாடுகிறார்களா? இறைவனிடம் பக்தியை வளர்த்து வருவார்களாகில் அது பாராட்டத்தக்க சீரிய செயலாகும். Theosophy எனப் பகரப்பெறுகிற பிரம்மஞான மார்க்கம் ஈசுவர சாக்ஷாத்காரம் பண்ணுவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதில் நம்பிக்கை வைக்குமாகில் அது மிக நன்று. மானுடனொருவன் சந்திரலோகம், சூரியலோகம், நட்சத்திர லோகம் ஆகியவைகளில் கருத்து மிகச் செலுத்துவானாகில் அவனுக்கு ஈசுவரனிடம் பக்தியுண்டாகாது. சூட்சும சரீரத்தில் இலங்கிக்கொண்டிருக்கிற மகாத்மாக்களைப்பற்றி அவர்கள் எண்ணிக்கொண்டிருப்பார்களாகில் அப்பொழுதும் அவர்கள் பக்தியை வளர்க்கமாட்டார்கள். மானுடன் ஒருவன் கண்ணும் கருத்துமாக ஆத்ம சாதனம் புரியவேண்டும். சர்வேசுவரனுடைய தாமரைத் திருவடிகளில் அன்பை வளர்த்தல் பொருட்டு அவன் அருள்தாகம் பிடித்திருப்பானாகில் அச்செயலும் பாராட்டத்தக்கது. ஆத்ம சாதகனொருவன் தன்னுடைய எண்ணங்களையெல்லாம் தெய்வத்திடத்தே செலுத்தவேண்டும். இவ்வுலகம், அவ்வுலகம் என்பதில் கருத்தைச் செலுத்துவதும் ஆங்கு மகாத்மாக்கள் வசித்து வருகிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பதும் பக்தி சாதனத்துக்குப் பேரிடைஞ்சலாகும்.''

பரமஹம்சதேவர் பாடலொன்றைப் பாடலாயினர். சர்வேசுவரனுடைய மகிமையை அறிந்து கொள்ளுதற்கு ஓ மனமே, நீ எத்தகைய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறாய்? பித்துப் பிடித்துள்ள ஒருவனை இருட்டறை ஒன்றில் அடைத்து வைத்துவிட்டால் அவன் எத்தகைய பதைபதைப்புடன் இருப்பானோ அத்தகைய பதைபதைப்பை ஓ! மனமே, உலக நாட்டத்தில் வைத்திருக்கிறாய். பாரமார்த்திகப் பெருநாட்டம் படைத்திருப்பவனுக்கே கடவுளின் மகிமை ஓரளவு எட்டுகிறது. பக்தியின் மூலமாக அன்றிக் கடவுளின் மகிமையைச் சிறிதளவாவது நீ எப்படி அறிந்துகொள்ள முடியும்? அத்தகைய பக்தியைப் பெறுவதற்காக யோகீசுவரர்கள் பல யுகங்களில் யோக சாதனங்கள் புரிந்து வருகிறார்கள். சாதகனொருவனிடம் பக்திவடிவெடுக்குமாகில் பரம்பொருளானவர் அத்தகைய பக்தனைத் தன்னிடத்துக் கவர்ந்து இழுக்கின்றார். ஓர் உபமானத்தின் மூலம் அவருடைய அனுக்ரஹத்தை விளக்கலாம். பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள இரும்புத் துண்டுகளைக் காந்தக்கல் எப்படிக் கவர்ந்திழுக்கிறதோ அப்படி உள்ளன்போடுகடவுளை நாடுகிறவர்களை அவர் தம்பால் கவர்ந்திழுக்கின்றார்.

இப்பாடலைப் பாடியானபிறகு மேலும் பரமஹம்சதேவர் மொழிந்ததாவது: ''சாஸ்திரங்களைப்பற்றி ஏராளமாகப் பேசலாம். வேதாந்த விசாரம் பண்ணலாம். ஆனால் இவைகளின் வாயிலாக நீ கடவுளின் அனுபூதியைப் பெற மாட்டாய். சர்வேசுவரனை அடைய வேண்டும் என்று நீ அருள் தாகம் ஏராளமாகப் படைத்திருந்தாலொழிய ஈசுவரானுபூதியை நீ ஒருபோதும் பெறமாட்டாய்.

''நான் பாபி நான் பக்தியற்றவன் என்னும் எதிர்மறை முறைகளைக் கையாளும் வரையில் சாதகனொருவன் தெய்வத்தை அடையமாட்டான். நான் இறைவனுடைய செல்வன், நான் இறைவனுக்கே உரியவன். அவருக்கும் எனக்கும் உள்ள இணக்கம் மிக மேலானது. அவர் எனக்குரியவர். நான் அவருக்குரியவன் என்னும் உடன்பாட்டு முறையிலேயே சாதகனொரு

வன் தெய்வத்தை அடையப் பெறுகிருன். வேதம் ஓதுதல், தந்த்ர சாஸ்திரங்களை ஆராய்ச்சி பண்ணுதல், ஆறு தர்சனங்களை ஆழ்ந்து கற்பது ஆகிய முறைகளைக்கொண்டு தெய்வத்தை அடைய முடியாது. தூய அன்பு என்னும் ஸ்பரிசவேதி மார்க்கத்தின் வாயிலாகவே சாதகனெருவன் தெய்வத்தோடு இணக்கம் பூண்டு பரமானந்தத்தில் திளைத்திருக்கிருன். ஓ மனமே, நீ நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள். மானுட சரீரம் என்னும் தேவாலயத்தின் கர்ப்பக் கிருஹத்திலேயே தெய்வம் யாண்டும் வீற்றிருக்கிருர். அவரிடத்திருந்து பேரானந்தம் பொங்கித் ததும்பிக் கொண்டு வருகிறது.

“ஈசுவரானுபூதியைப் பெறுதல் பொருட்டு ஒருவன் பேரார்வம் பூண்டவனுக இருக்க வேண்டும். மற்றும் ஒரு பாடலைப் பாடுகின்றேன். ஆழ்ந்து செவிசாய்த்துக் கேளுங்கள். ஸ்ரீமதி ராதை பெற்றுள்ள பரக் காட்சியை ஒவ்வொருவனும் பெறமுடியுமா? அவள் படைத்திருந்த பேரன்பை ஒவ்வொருவனும் ரசிக்க முடியுமா? பொக்கிஷங்களுள் அரிதிலும் அரிதாயிருப்பது பராபக்தி. பூலோக செல்வத்தைக்கொண்டு இதை ஒருபொழுதும் விலைக்கு வாங்கமுடியாது. பக்தி சாதனங்களை ஆத்ம சாதகனெருவன் ஆழ்ந்து பயின்று வரவேண்டும். அதைத் தவிர வேறு எந்த உபாயத்தைக் கொண்டும் ஒருவன் தன் ஒப்பற்ற செல்வத்தைப் பெருக்க முடியாது.

“சுவாதிநட்சத்திரம் உச்சத்திலிருக்கின்றபொழுது பெய்கின்ற மழைத்துளியானது சிப்பி ஒன்றனுள் வீழும்பொழுது அதை அந்தச் சிப்பியானது தன்னுள் மூடிவைத்துக்கொண்டு ஆழ்கடலில் ஆழ்ந்து மூழ்கி ஆங்கு அதை விலையுயர்ந்த முத்தாக மாற்றியமைக்கிறது. மற்ற வேளைகளில் எங்கெங்கேயோ விழுகின்ற மழைத்துளியானது அத்தகைய முத்தாக மாற முடியுமா?

“தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளை மடியில் வைத்துக்கொண்டு அக்குழந்தைகளோடு உறவாட வரவேண்டுமென்று வானத்திலிருக்கும் சந்திரனை வரவழைக்கிருர்கள். அப்படிச் செய்வதன்மூலம் குழந்தைகளுக்கு வெறுமனே சமாதானம் ஊட்டுகிருர்கள். வானத்தில் இலங்கும் சந்திரன் பூமிக்கு வரமுடியுமா? சாதகனெருவன் தீவிரமாக ஆத்மசாதனம் புரியவேண்டும். தன்னை நன்கு பக்குவப்படுத்தாத ஒருவன் தெய்வக்காட்சியைத் திடீரென்று பெறமுடியுமா?

“மானுடனெருவன் கேட்ட கேள்வியாவது?

“நான் ஏன் கடவுள் காட்சியைக் காண்பதில்லை? அப்பொழுது என் மனதுக்குத் தோன்றியதை அம்மனிதனிடம் தெரிவித்தேன். ‘பெரிய மீனென்றைப் பிடிக்க நீ விரும்புகின்ருய். அதன் பொருட்டு முதலில் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள். கவர்ச்சிகரமான இரையை நீருக்குள் வீசிப்போடு. ஆழத்திலிருக்கும் பெரிய மீன் அந்த இரையை வந்து கௌவிப் பற்றிக்கொள்கிறது. பிறகு தூண்டிலும் அதற்குரிய கழியையும் தேடிக்கொள். அத்தூண்டிலில் அதேவிதமான கவர்ச்சிகரமான இரையை மாட்டு. நீரினுள் அதை வீசிப்போடு. ஆழத்திலிருக்கும் மீன் அவ்விரையைக் கௌவுவதற்கு மேலே வருகிறது. அது வருகிற வருகையை நீரில் உண்டாகிற சுழல்களைக் கொண்டு நீ அறிந்துகொள்ள முடியும். சிறிது நேரம் காத்திரு. அப்பொழுது மீன் தூண்டிலில் மாட்டிக்கொள்ளும். அதைப் பிடிக்க உனக்கு இயலும்.

‘வெண்ணெய் அருந்த நீ விரும்புகின்ருய். ஆனல் பாலில்வெண்ணெய்இருக்கின்றதென்று நீ வெறுமனே பகர்ந்து கொண்டிருந்தால் நீ பெறுவது யாது? அவ்வெண்ணெயைப் பெற நீ முயற்சி மிக எடுத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் வெண்ணெயைப் பாலினின்று பிரித்தெடுக்க உனக்கு இயலும். கடவுள் இருக்கிருர் என்று வாயால் மொழிந்து கொண்டு இருப்பவன் அக்கடவுளின் காட்சியைப் பெற முடியுமா? கடவுள் காட்சியைப் பெற விரும்புகிறவன் அதற்கேற்ற சாதனங்களைப் புரியவேண்டும்.

“மானுட வர்க்கத்துக்கு முன்மாதிரியாக இருந்து பாடம் புகட்டுதற்பொருட்டு அன்னை பராசக்தி தானே கடுந்தவம் புரிந்தாள். பரப்பிரம்மமே மானுட வடிவு எடுத்து வந்திருந்த ஸ்ரீ கிருஷ்ணனும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாயிருந்து பாடம் புகட்டுதற்பொருட்டு ஆத்ம

சாதனம் பயின்றான்.

"ஸ்ரீ கிருஷ்ணன் புருஷ தத்துவமாகவும், ஸ்ரீமதி ராதை பிரகிருதி தத்துவமாகவும் இலங்குகின்றார்கள். சித் சக்தியின் சொரூப மாயிருப்பவன் கிருஷ்ணன். ஆதிசக்தி சொரூப மாயிருப்பவள் ராதை. முக்குணங்கள் சொரு பிணியாகப் பிரகிருதி தத்துவமாக இருக்கிற ராதை இலங்குகின்றாள். சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களும் அவளிடத்து அடங்கி யிருக்கின்றன. வெங்காயம் ஒன்றை உரிக்கிற பொழுது முதலில் கருப்பு, சிவப்பு ஆகிய நிறங்களின் அறிகுறிகள் தென்படுகின்றன. பிறகு அது முற்றிலும் சிவப்பு நிறமாய் முற்று கிறது. கடைசியில் அது முற்றிலும் வெள்ளை நிறமாய் இருக்கிறது. ஸ்ரீமதி ராதையை வைஷ்ணவ சாஸ்திரங்கள் 'காம ராதை', 'பிரேமை ராதை', 'நித்திய ராதை' என இயம்புகின்றன. காம ராதைக்குச் சந்திரவலி என்பது பெயர். பிரேமை ராதைக்கு ஸ்ரீமதி என்று பெயர். நித்திய ராதை கோபாலனைத் தன் கரங்களில் தாங்கியிருப்பதாக நந்தன் காட்சி கண்டான். காம ராதையாகப் பிரகிருதி யானவள் வடிவெடுத்திருந்த பொழுது ஆட வரை வசீகரப்படுத்தும் வடிவினளாக இலங் கினாள். அதே பிரகிருதியானவள் பிரேமை ராதையாக இலங்கியபொழுது பாரமார்த்தி கப் பேரன்பே வடிவெடுத்தவளாக இலங்கி னாள். மகோன்னத நிலையாகிய நித்திய ராதை யாக அவள் இலங்குகின்ற பொழுது அவள் முற்றிலும் ஆதிசக்தி சொரூபமாக வடிவெடுத் திருக்கிறாள். கோபிமார்களுள் ஸ்ரீமதி ராதை உச்சஸ்தானம் பெற்றிருக்கிறாள். நந்தன் கிருஷ்ணனுடைய வளர்ப்புத் தந்தையாக இலங்கினான்.

"வேதாந்தம் புகட்டுகிற பிரம்மமும் சித்சக்தி யும் ஒன்றே. உபமானம் ஒன்றைக்கொண்டு இவ்வுண்மையை விளக்கவேண்டுமாயின் தண் ணீரும், அதனுடைய நனைக்கும் தன்மையும் ஒன்றேயாம். தண்ணீரைப் பற்றி மானுடனொரு வன் நினைக்கும் பொழுது அதனுடைய நனைக் கும் தன்மையையும் அவன் நினைத்தாகவேண் டும். நனைக்கும் தன்மையை முதலில் மனிதன் நினைத்தால் பிறகு தண்ணீரைப் பற்றிய எண் ணமும் அவன் உள்ளத்தில் உதிக்கிறது. மற்றும் ஓர் உபமானத்தைக் கொண்டு புருஷ தத்துவத்தையும் பிரகிருதி தத்துவத்தையும் விளக்கலாம். பாம்பைப் பற்றி நினைக்கிற பொழுது அதனுடைய வளைந்து வளைந்து போகும் பாங்கையும் நினைத்தாகவேண்டும். வளைந்து வளைந்து போகும் பாம்பை நினைக்கிற பொழுது பாம்பைப் பற்றிய நினைவும் அப் பொழுது வருகிறது. முடிவாயுள்ள மெய்ப் பொருளைப் பிரம்மம் என்று நாம் எப்பொழுது மொழிகிறோம்? அது செயலற்றதாய் அல்லது நிஷ்கிரியையாய் இருக்கிறபொழுது அதற்குப் பிரம்மம் என்று பெயர் வருகிறது. மானுடன் ஒருவன் உடையணிந்திருக்கிற பொழுதும் உடையணியாது நிர்வாணமாயிருக்கிறபொழு தும் அவன் மானுடனே. ஒருவேளையில் அவன் உடையற்றிருந்தான். மற்றொரு வேளையில் உடையணிந்தவனாயிருக்கிறான். அணிந்திருக் கிற உடையை நீக்கிவிட்டு அவன் மீண்டும் நிர் வாணமாயிருக்கலாம். இரண்டு நிலைகளிலும் அவன் ஒரே மூர்த்தியாயிருக்கிறான். பாம்பின் பல்லில் விஷமிருக்கிறது. ஆனால் அவ்விஷம் பாம்புக்கு ஒரு தீங்கும் செய்வதில்லை. அப் பாம்பினால் தீண்டப் பெற்றவனுக்கு அது விஷம். அங்ஙனம் பிரபஞ்சத்தைத் தனக்குப் புறம்பாகக் காண்பவனுக்கு அது நலம் கேடு இரண்டும் நிறைந்த மாயப் பிரபஞ்சமாயிருக் கிறது. பிரபஞ்சத்தைத் தனக்குப் புறம்பான தாகக் கருதி அதனிடத்து விருப்பும் வெறுப் பும் பூணுகிறபொழுது அது இன்பதுன்பத்தை உண்டுபண்ணுகிறது. பிரம்மம் செயல் எதனி லும் கட்டுப்படாது இருப்பது போன்று ஞானி யொருவன் பிரபஞ்சத்தில் எதனிலும் கட்டுப் படாதிருக்கிறபொழுது அவன் அப்பிரம்மத் தில் ஒடுங்கியவனாயிருக்கிறான்.

(மகேந்திரரைப் பார்த்து பரமஹம்சர் இப் பொழுது மொழிகின்றார்) "இப்பொழுது நான் இயம்பியதை நன்கு கிரஹித்துக்கொள். வேதங்கள், புராணங்கள் ஆகிய சாஸ்திரங் கள் பகருவதை ஒருவன் சிரவணம் பண்ண வேண்டும். அடுத்தபடியாகக் கேட்டறிந்தமெய்ப் பொருளை மனனம் பண்ணவேண்டும். அப் படி மனனம் பண்ணுவதே நல்ல தியான மாகிறது. அது சமாதியில் அல்லது நிதித்யா சனத்தில் சாதகனைக் கொண்டு சேர்க்கிறது."

பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

307. நேசத்தால் நின்னை
நினைக்கும் நினைவுடையார்
ஆசைக் கடலில்
அழுந்தார் பராபரமே.

உலக விஷய ஆசைகளும் கடவுளை அடைய வேண்டும் என்னும் ஆசையும் ஒன்றோடொன்று ஒவ்வா. உலக விஷய ஆசை மனிதனை மேலும் மேலும் இவ்வுலகிலுள்ள இன்பதுன்பங்களில் ஆழ்த்துகிறது. அத்தகைய ஆசை அதிகரிப்பதற்கேற்ப மனிதனுக்குச் சஞ்சலம் மிக உண்டாகிறது. மன அமைதி கலைகிறது. நவீன உலக வாழ்க்கை என்பது இவ்வுலக ஆசைகளை மேலும் மேலும் வளர்த்தலேயாம். அதன் விளைவாக மனிதனுக்கு மனச்சஞ்சலமும் அமைதியின்மையும் அதிகரிக்கின்றன. மனிதனுக்குச் சொந்தமாயுள்ள மேலான தெய்விகப் பண்புகள் மறைந்துகிடக்கின்றன. நவீன வாழ்க்கையில் மோஹம் கொண்டுள்ள மக்களுக்கு உலக வியவஹாரங்களே நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன.

அதற்கு நேர்மாறாகத் தெய்வத்திடத்து அன்பை வளர்த்து வந்தால் அது உலக ஆசைகளை ஒதுக்கித் தள்ளுகிறது. உலக ஆசைகள் நிலையற்றவைகள் என்றும் துன்பத்துக்கு ஏதுவானவைகள் என்றும் பக்தன் ஒருவன் அறிய வருகிறான். தெய்விக நாட்டமும், உலக ஆசைகளும் வெளித்தோற்றத்துக்கு அவாவாகத் தென்படுகின்றன. ஆனால் அவை இரண்டுக்குமிடையிலுள்ள வேற்றுமை விளைவினின்று வெளியாகிறது. உலக ஆசைகள் மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகின்றன. தெய்விக ஆசை மனிதனைப் படிப்படியாக மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்லுகிறது. உலக ஆசைகளை நிறைவேற்றுவதன் மூலமாக உண்டாகிற இன்பம் துன்பமாக வடிவெடுக்கிறது. கடவுள் நாட்டத்தை வளர்ப்பதால் வருகிற மனத்திட்பம் மனிதனை மேலோனாக்குகிறது. ஆசை வடிவினனாயிருக்கும் மனிதன் உலக ஆசைகளை ஒதுக்கித்தள்ளிவிட்டுத் தெய்விக ஆசையையே வளர்த்துவருவானாகில் அவன் எடுத்துள்ள மானுட ஜன்மம் மேன்மையுறுகிறது. 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்பது வள்ளுவர் வாக்கு. தெய்வப்பற்று வளர்கின்றளவு உலகப்பற்று குறைகிறது. தெய்வச் சிந்தனையும், தெய்வ சம்பந்தமான பேச்சும், தெய்வப்பணியும் தெய்வப்பற்றை வளர்க்கின்றன. அறிஞனொருவன் இவ்விரண்டு நிலைகளையும் சீர்தூக்கிப் பார்த்துவிட்டு உலக ஆசைகளை ஒதுக்கவும் பரநாட்டத்தை வளர்க்கவும் வேண்டும் என்பது இக் கண்ணியின் கோட்பாடு ஆகும்.

308. கள்ளாது கட்டுணவுங்
காரியமோ நான் ஒருசொல்
கொள்ளாத தோடமன்றோ
கூறாய் பராபரமே.

கட்டுணவுதல் - கட்டுமானத்தில் வைப்பது. நெறிபிறழாதிருக்கும் நேர்மையான மானுடன் ஒருவனைச் சிலவேளைகளில் அதிகாரவர்க்கத்திலிருப்பவர்கள் ஏதோ ஒரு திருட்டுச் செயலில் சம்பந்தப்பட்டவனாகச் சந்தேகித்து அவனைப் பிடித்துக் காவலில் வைத்து நெடுநாளாகத் துன்புறுத்துகிறார்கள். உண்மையில் அம் மனிதன் குற்றவாளி அல்லன். திருடுதல் போன்ற தீச்செயலில் ஈடுபடும் பாங்குக்கும் அவனுக்கும் வெகுதூரம். அத்தகைய ஒழுக்கம் உடையவனை எவ்வளவுதான் துன்புறுத்தினாலும் அவனுடைய மனசாட்சி தூயதாகவே இருக்கும். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்ளுவோம். திருவாதவூரர் பாண்டியனுடைய செல்வத்தைத் தம் சொந்தக் காரியத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை. சிவபக்தி மேலோங்கப் பெற்றவராகச் சிவ சேவையில் அந்தச் செல்வம் முழுதையும் செலவழித்துவிட்டார். தாம் செய்தது தகாத செயல் என அவர் ஒருபொழுதும் உணரவில்லை. பாண்டிய மன்னனால் துன்புறுத்தப்பட்டபொழுதும் தாம் செய்த செயல் சிவன் சேவை என்றே மனத் தெளிவுற்று இருந்தார். வாய்த்த தண்டனையையும் மனம் நோவாது ஏற்றுக்கொண்டார். அவருடைய மனத்தகத்துப் பாண்டிய மன்னனை நொந்துகொள்ளும் பான்மை ஏதும் உதிக்கக் கிடையாது. அதிவிரைவில் அவர் செயலுக்கு

ஆமோதிப்பும் சிவனாரின் அனுக்கிரஹமும் அவருக்கு வாய்த்தன. பாண்டியனுடைய மனதும், சிவ பக்திக்கு உரியதாக அடியோடு மாறிவிட்டது. நல்லாருக்கு வரும் தீங்கு அதி விரைவில் அவர்களை மகோன்னத நிலைக்கு எடுத்துச் செல்லுகிறது. ஆத்மசாதகனொருவன் அடிப்படைத் தத்துவத்தை எடுத்த எடுப்பி லேயே தெரிந்துகொள்ளவேண்டும். அதைத் தெரிந்துகொள்வானாகில் பிராரப்த கர்மத்தின் விளைவாக உடலுக்கு வரும் கேடு எதுவானாலும் அது அவனைப் பாதிக்காது. இவ்வுண்மையை 'நானொரு சொல் கொள்ளாதது தோஷமன்றோ' எனத் தாயுமானவர் இயம்புகின்றார். அந்த ஒரு சொல் யாது? ஜீவாத்மன் உடல் சொருப மல்லன். அவன் ஆத்ம சொருபம். அதைக் கேட்டறிந்து அதில் உறுதி பெற்றிருக்கிறவர் கள் பிரபஞ்ச சம்பந்தமான துன்பங்கள் எவ் வளவு வந்தாலும் அவைகளில் அவர்கள் தாக் குண்ணார்கள். 'கள்ளனறிவூடு மெள்ளமெள்ள கலக்க வரு நல்ல உறவே' எனத் தாயுமான வர் மற்றோர் இடத்தில் இயம்புகிறார். கள்ள னல்லாதவர் தம்மைக் கள்ளனென்று கூறு வதில் பொருள் உண்டு. தம் நெஞ்சத்தில் உறைவது பரம்பொருள் என்னும் பேருண்மை வாசா ஞானத்தின் மூலமாக அவருக்குத் தெரிந்திருந்தது. அப்படியிருந்தும் பரமனைப் பொருள்படுத்தாது மறந்திருந்தது கள்ள னுடைய செயலுக்கு நிகராகிறது. தனக்குக் கிடைத்த பொருளை இல்லையென்று மறைத்து வைப்பது திருட்டுச் செயல் ஆகிறது. இறை வனைப்புறக்கணித்ததைக்கள்ளனுடையசெயல் என்றே அவர் தம்மீது குற்றம் சாட்டுகிறார். கள்ளாது கட்டுண்ணவும் அவர் தம்மைத் தாமே செய்துகொண்டார். இனி ஆத்ம சாதகனொருவன் அப்படிச் செய்யலாகாது. இறைவனுடைய சாந்நித்தியத்தை இடை யறாது உள்ளத்தில் உணரவேண்டும். இதுவே இக்கண்ணியில் அடங்கியிருக்கும் கருத்து ஆகும்.

309. சென்றவிட மெல்லாந்
திருவருளே தாரகமா
நின்றவர்க்கே ஆனந்த
நிட்டை பராபரமே.

தாரகம்-ஆதாரம்;

கடலில் வசித்துவந்த மீன் ஒன்றுக்குத் தான் வசித்திருந்த இடம் பிடிக்கவில்லை. வேறு ஓர் இடத்துக்கு அது நீந்திச் சென்றது. சென்ற விடத்தில் அது கண்ட காட்சி பழைய கடல் நீர்ப்பெருக்கே. எத்தனை மைல் தூரம் போனா லும் அது வாழ்ந்திருக்கும் இடம் கடலே. ஜீவாத்மனொருவன்தான் எடுத்திருந்த தேகத் தில் அதிருப்தி அடைந்து மரணத்தின் மூல மாக மற்றொரு தேகத்தை எடுத்தான். இப் படி அனந்தங்கோடி தேகங்களை ஜீவாத்மன் எடுத்து அவைகள் வாயிலாக அவன் படிப் படியாக மேல் நிலைக்கு வருகிறான். எந்த லோகத்தில் எத்தகைய ஜீவனாக அவன் பிறப் பெடுத்திருந்தாலும் அவன் தன் நிஜசொரு பத்தைவிட்டு இடம் மாறியவனல்லன். இடம் மாறிப்போவது கால தேச நிமித்தத்தில் கட் டுண்டிருக்கும் உடலே. அதனுள் ஒளிரும் ஆத்ம தத்துவம் அத்தனைகோடி பிறவிகளில் எந்தவிதமான மாறுதலும் அடையவில்லை. அது தன்னில் தானாய் யாண்டும் இருந்து வரு கிறது. பரபோதம் அடையப்பெறும் சாதக னொருவனுக்கு இவ்வுண்மை உள்ளபடி வெளி யாகிறது. ஆக, ஆத்மசொருபம் இடம் மாறிப் போதல் என்பது வெறும் மனோ கல்பிதமாம். இடமனைத்தையும் தன்னகத்தே அடைத்து வைத்திருக்கிற பரமாத்ம தத்துவத்துக்குப் போக்கு வரவு இல்லை. 'போக்கும் வரவு மில்லாப் புண்ணியனே' என்கின்றார் மணி வாசகப் பெருமான். அதனோடு சம்பந்தப் பட்டிருப்பதை ஜீவாத்மன் அறிந்துகொள்ளு கிறபொழுது அவன் யாண்டும் திருவருளி லேயே திளைத்திருக்கிறான். தனக்குத் தாரக மாக அல்லது இருப்பிடமாக அமைந்திருப்பது அந்தப் பரமாத்ம சொருபமே. இவ் உண் மையை அனுபூதியில் உணருகிற ஆத்மசாதக னுக்குப் பேரானந்தம் உண்டாகிறது. இறைவா, நான் எங்குச் சென்றாலும், எத்தகைய சூழ்நிலை யிலிருந்தாலும், எத்தகைய உடலைப் படைத் திருந்தாலும், எத்தகையவர்களோடு இணக் கம் வைத்திருந்தாலும், உன்னுடைய சாந்நித்தி யத்திலேயே நிலைபேறு உடையவனாக நிலைத் திருக்கிறேன் என்பதை உணர்ந்து பரமானந் தத்தில் திளைத்திருப்பேனாக என்பது இக் கண்ணியின் கருத்து.

பரபோதம்

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்செல்வரான சுவாமி பிரமானந்தரின் போதனை)

மனதை அடக்கும் உபாயம் அறியாது பலர் திண்டாடுகின்றனர். மனதை அடக்குவதற்கு நீ உபாயத்தை அறிந்துகொள்ளவேண்டும். யாண்டும் மனம் கடவுள் சிந்தனையில் ஈடுபட்டிருக்கும்படி மனதுக்குப் பயிற்சி தரவேண்டும். மனதில் எழும் எண்ணங்களை அவற்றிற்குப் புறம்பாகவிருந்து கவனித்து வா. பொருந்தாத எண்ணங்கள் மனதில் எழாமல் இருக்கும்படி கவனித்துக்கொள். தகாத எண்ணங்கள் உன் மனதில் எழுமானால் கடவுள் துணையை நாடி அவைகளின் வேகத்தை அடக்கு. மனப்பூர்வமாகக் கடவுளின் துணையை நீ நாடினால் கடவுள் நிச்சயம் உனக்குத் துணைசெய்வார். ஆரம்பத்தில் சிறிது காலத்துக்குத் தகாத எண்ணங்களை ஒதுக்கவும், மனதைக் கடவுள்பால் திருப்பவும் நீ சிரமப்பட்டாகவேண்டும். முயற்சியை நிறுத்திவிடாது சிரமப்பட்டுச் சிறிது காலத்துக்கு நீ சிரத்தையோடு பாடுபட்டால் மனம் உன் கைவசத்துக்கு வரும். மனதுக்குத் தெய்வச் சிந்தனையை அடிக்கடி ஞாபகமூட்டி வரும்பொழுது மனம் தூய்மையடைகிறது.

உலகத்தில் யாரும் உனக்கு உதவமாட்டார்கள் என்றும், கடவுள் ஒருவர்தான் கதி என்றும் நீ அறிந்து கடவுளைத் தவிர வேறு ஒன்றும் வேண்டாம் என்ற உணர்வு உனக்கு உண்டாகும்பொழுதுதான் உன் உள்ளத்தில் கடவுள் பக்தி உண்டாகிறது. தாகம் எடுத்தவனுக்கு நீர் ஒன்றுதான் தேவைப்படுகிறது. அத்தகைய உணர்வு கடவுள் விஷயத்தில் உண்டாக வேண்டும். கடவுள் ஒருவர்தான் உனக்குத் தேவை என்னும் உணர்வு உன் உள்ளத்தில் உண்டாகும்பொழுது நீ பக்திமான் ஆகின்றாய். கடவுளிடம் பக்தி ஓங்குவதற்கு ஏற்ப நீ பாக்கியவான் ஆகின்றாய்.

பகவன் நாமத்தை இடைவிடாது ஜபம் செய்து வருவது சிறந்த எளிய சாதனையாகும். நீ மூச்சுவிடுவது இடைவிடாது உன்னிடம் நிகழ்கிறது. அங்ஙனம் ஜபம் செய்வது உன்னிடம் இடைவிடாது நிகழ்ந்துவரவேண்டும். ஜபம் செய்வது உன் இயல்பாக மாறிவிட வேண்டும். உறங்கப் போவதற்கு முன்பு உன் மனதில் ஜபம் நிகழ்ந்துகொண்டிருப்பதையும், தூங்கி எழுகின்றபொழுது உன் மனதில் ஜபம் நிகழ்ந்துகொண்டிருப்பதையும் நீ உணரவேண்டும். இடைவிடாத நாம ஜபம்செய்யும் பயிற்சியானது உன் உள்ளத்தை அத்தகைய நிலைக்குத் தயாராக்கிவிடும். கடவுளைக் காண்பதும், அவரோடு பேசுவதும் சாத்தியமாகும். இது முற்றிலும் உண்மை. இதைப்பற்றி நீ ஐயப்பட வேண்டியதில்லை.

இடைவிடாது தீவிரமாக ஆத்மசாதனை செய்து வா. சாதனையில் ஆழ்ந்து போகும்பொழுது உன் உள்ளம் புதுப்புது அனுபவங்களைப் பெறும். தெய்வீகக் காட்சிகள் பலவற்றை நீ காணவும் கூடும். உன் உள்ளம் ஞான ஒளி நிறைந்ததாக மாறி அமையும். பேரறிவும், பேரானந்தமும் உன் உள்ளத்தில் உண்டாகும். ஆழ்ந்து சாதனை செய்து இவ்வரிய அனுபவங்களை நீ பெறுவாயாக. பகவன் நாமத்தைப் பேரார்வத்துடனும், ஆழ்ந்த உணர்ச்சியுடனும் ஓதிப் பழகு.

உயிர்கள் அனைத்தும் கடவுளின் சொரூபங்களாகின்றன. ஆகவே உன் அன்பும், அனுதாபமும் எல்லாவுயிர்களிடத்தும் இருக்கட்டும். பிறரிடம் குறை காண்பதை நிறுத்திவிடு. பிறரிடம் குறை காண்பதில் பிறருக்கோ, உனக்கோ எவ்வித நலனுமில்லை. குறை காண்கின்றவளவு நீ கீழ்மையுறுகின்றாய். துன்மார்க்கத்தில் செல்லுகின்ற ஒருவனைச் சன்மார்க்கத்தில் திருப்புவதற்கு உன் வாழ்வு அவனுக்குத் துணைபுரியாவிட்டால் நீ வாழ்கின்ற ஆன்மீக வாழ்வினால் என்ன பயன்? உண்மையான ஆன்மீக வாழ்வு நீ வாழ்கின்றபொழுது நீ உன்னதநிலையை அடைவதோடு, மற்றவர்களையும் மேல் நிலைக்கு எடுத்துச் செல்வதற்கு உன் ஆன்மீக வாழ்வு உதவவேண்டும்.

'பொறுமை கடலினும் பெரிது.' பொறுமையாக இருக்கப் பழகிக்கொள். கோபம் பொல்லாதது; கோபத்துக்கு நீ வசப்படும்பொழுது உன் உடல் முழுவதும் விஷம் பரவுகிறது. உன் உள்ளம் குழப்பமடைகிறது. உன் அறிவு தடுமாற்றமடைகிறது. ஆகவே கோபத்துக்கு

இடம் தராதே. பொறுமையாக இருக்கப் பழகிக்கொள்வாயானல் கோபத்தை அடக்குவதும் உனக்குச் சுலபமாகிவிடும். பொறுமையும், சகிப்புத்தன்மையும், பணிவும் மிகவும் அவசியமானவை. எல்லார்க்கும் நன்ரும் பணிதல் என்பது கோட்பாடு. பணிவு பண்பை வளர்க்கிறது. எனவே பணிவுடையவனுக இரு. "பள்ளமான பகுதியில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. மேடாகவிருக்கும் தரைப்பகுதியில் தண்ணீர் நில்லாது ஓடிவிடுகிறது. மனிதன் பணிவுடையவனுகும்பொழுது அவனிடத்தில் இனிமையான இயல்பும், நல்ல குணங்களும் இயல்பாகவே வளர்கின்றன.'' இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார்.

உன் உள்ளத்தில் கடவுள் சிந்தனை யாண்டும் இருக்கவேண்டும். நீ கர்மத்தில் ஈடுபட்டிருக்கும்பொழுதும் கடவுள் சிந்தனை செய்து கொண்டிருக்க வேண்டும். ஆரம்பத்தில் அது சிறிது கஷ்டமாகத்தானிருக்கும். ஆனல் பயிற்சியின் மூலம் மனதை அங்கிலேக்கு ஆயத்தப்படுத்திவிடலாம். மனதோடு போராடியாக வேண்டும். போராட்டமில்லாது அதை வெல்ல முடியாது. கெட்ட சம்ஸ்காரங்கள் இருக்கும் வரையிலும் நீ மனதோடு போராடித்தான் ஆக வேண்டும். கெட்ட சம்ஸ்காரங்கள் அழியும் வரை நீ போராட்டத்தை நிறுத்திவிடாதே. பொருளற்ற கட்டுத் திட்டங்களை ஏராளமாக விதித்துக் கொள்வதில் பயன் இல்லை. ஓரளவுக்குக் கட்டுத் திட்டம் அவசியம். ஆத்ம சாதனையில் முன்னேறுவதற்கு உண்மையான ஆர்வமும், நேர்மையான முயற்சியும் அவசியமானவை. உன் பிரார்த்தனை ஆர்வமும், நேர்மையும் உடையதாக இருக்குமானல் அதற்குக் கடவுள் செவிசாய்த்தாக வேண்டும். நீ சொல்லுகின்ற சொல் கடவுள் சம்பந்தமானவைகளாக இருக்கலாம். ஆனல் உன் உள்ளம் உலக விஷயங்களில் ஓடிக்கொண்டிருக்குமாகில் நீ கடவுளுடைய அருளைப் பெறமுடியாது. கடவுள் உன்உள்ளத்தைத்தான் கவனிக்கிருர். கடவுள் நாமத்தை உச்சரிப்பதோடுஉன் உள்ளத்தையும் அவரிடம் கொடுத்துவிடு. உள்ளத்தை அவருக்குரியதாக்கும்பொழுதுதான் நீ சாதனையில் முன்னேற்றமடைகின்ருய்.உள்ளம் நாம உச்சாரணையில்ஈடுபடும்பொழுது அதனிடமுள்ள கீழான உணர்வு மேலாம் உணர்வாக மாறியமைகின்றது.

மக்கள் உலக இன்பத்தை அனுபவிப்பதாகப் பேசிக் கொள்கிருர்கள். உலக இன்பத்தை எப்படி அனுபவிப்பது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆற்றில் மூழ்கிப் போகாதிருக்கத் தெரிந்து கொண்டவனே ஆற்றை நன்கு அனுபவிக்க முடியும். ஆற்றில் நீந்தத் தெரிந்து கொண்டவன் அதில் குதித்து ஆனந்தமாக நீந்தி விளையாடுகின்ருன். நீந்தத் தெரியாதவன் ஆற்றை அனுபவிக்க முடியாது. அவன் ஆற்றுக்குள் வீழ்ந்தால் ஆற்றை அனுபவிப்பதற்குப் பதிலாக அதில் மூழ்கி அழிந்து போவான். ஆற்றை அனுபவிப்பதற்கு முன்பு நீந்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அங்ஙனம் அகத்தில் உலகப்பற்றை நீக்கத் தெரிந்து கொள்ளாதவர்கள் உலகை அனுபவிக்க முடியாது. உலகப்பற்று நீங்கிய உள்ளம் படைத்தவர்களே உலகை நன்கு அனுபவிக்கிருர்கள். உலகப்பற்று உடையவர்கள் உலக இன்பத்துக்கு உள்ளத்தில் இடங்கொடுப்பார்களானல் அவர்கள் அதில் மூழ்கி அழிந்து போவார்கள். விலங்கனைய இன்பத்தைத்தான் உலகப் பற்றுடையவர்கள் உலகத்திலிருந்து பெறுகின்ருர்கள்.உள்ளத்தில் கடவுள் பற்றை வளர்த்து நீ கடவுள் மயமாகும்பொழுது உலகை நீ நன்கு அனுபவிக்கலாம். மனம் எவ்வளவுக்கெவ்வளவு தூய்மை அடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தூய எண்ணங்கள் உள்ளத்தில் இடம் பெறுகின்றன. உன் உள்ளத்தில் தூய்மை வலுக்கும் பொழுது அது தீமையால் பாதிக்கப்படுவதில்லை. உன் உள்ளம் தூய்மையடையும்பொழுது அது உறுதி படைத்தது ஆகின்றது. நலம் தரும் செயல்களை அது திறம்படச் செய்ய வல்லதாகின்றது.

சர்க்கரையாக விரும்பவில்லை. சர்க்கரையைச் சுவைக்க விரும்புகின்றேன் என்னும் கோட்பாடு உள்ளது. சர்க்கரையைச் சுவைக்காதவனுக்கு இந்தக் கோட்பாடு பொருந்தும். சர்க்கரையைச் சுவைத்தவன் சர்க்கரையைச் சுவைக்கத்தான் விரும்புவான். பக்தன் கடவுள் இன்பத்தைச் சுவைக்கவே விரும்புகின்ருன். அப்படி அவன் சுவைப்பதன்மூலம் கடவுளோடு லயம் ஆகிவிடுகின்ருன்.

பக்தியும் பண்பாடும்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1971ஆம் ஆண்டு திருவேடகம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்தபொழுது அவருடைய பண்புகள் யாவும் வெளியாயின. பாண்டவர்கள் பதின்மூன்று ஆண்டுகள் செய்த வனவாசத்தில் தங்களைப் பண்படுத்தினார்கள். வாழ்க்கையில் பக்குவப் படுத்துவதற்கென்று ஒதுக்கி வைக்கின்ற காலம்தான் மிக முக்கியமானது. பண்பாட்டை வளர்ப்பதுதான் கல்வியின் பயனாகும். தற்கால கல்வி முறை மனிதன் அடைய வேண்டிய பண்பாட்டைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. புஸ்தகங்களிலுள்ள புள்ளி விபரங்களைச் சேகரிப்பது தற்காலக் கல்வி முறையாக அமைந்திருக்கிறது. ஜீவிதத்தை மேலான ஜீவிதமாகத் திருத்தி அமைப்பதைப் பற்றி தற்காலக் கல்விமுறை கருத்துச் செலுத்துவதில்லை. வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதுதான் தவமாகிறது. கல்வி பயிலும் காலமெல்லாம் தவமயமாயிருந்து கற்று வரவேண்டும். அப்படிக் கற்கின்ற மனிதன் பண்பட்ட பெரு மனிதனாகின்றான். கிருஷிகன் பூமியை நல்ல பூமியாகத் திருத்தி அமைக்க முயலுகின்றான். அங்ஙனம் மனிதன் தன்னை மேலானவனாகத் திருத்தி அமைக்கவேண்டும். மா, பலா, வாழை ஆகிய கனிகளை முக்கனிகள் என்று கூறுகின்றோம். அவை நன்றாகக் கனிந்த பிறகு அவற்றைக் கொண்டு இன்னும் பல பக்ஷணங்கள் செய்யலாம். அம்மூன்றும் காயாகவிருக்கும் பொழுதும் பக்ஷணம் செய்யலாம். முக்கனிகளைக் கையாளுபவர்களுடைய திறமையைப் பொறுத்து அவற்றைக் கொண்டு எத்தனை விதமான பக்ஷணங்கள் வேண்டுமென்றாலும் செய்யலாம்.

ஜீவன் தன்னைத் திருத்தி நல்ல மனிதனாக அமைக்கவேண்டும். அதன் பிறகு பரத்துக்குரியவனாகத் தன்னை மேலும் திருத்தி அமைக்கலாம். சீதா பிராட்டியை ஜீவாத்ம சொரூபம் என்று சொல்லலாம். வனவாசகாலத்தில் சீதா பிராட்டியார் பண்பாடு அடைந்தார்கள். அசோகவனத்தில் சிறையிருந்த பகுதி சீதா பிராட்டியாரின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாகும். சீதை தம்மைத் திருத்தி அமைப்பதற்கு அதனை நன்கு பயன்படுத்தினார். சீதை சிறையிருந்த காலம் வாழ்க்கையில் பெறுதற்கரிய பேறு என்பதை ஆத்ம சாதகர்கள்தான் அறிந்துகொள்ள முடியும். உலகத்தவர்களுடைய காட்சியில் அது தௌர்ப்பாக்கியமாகத் தோன்றும். ஆனால் சீதாபிராட்டியார் ஆங்கு பெற்ற பண்பாட்டை வேறு எந்தச் சூழ்நிலையிலும் பெறமுடியாது. சீதா பிராட்டியார் அடைந்த பண்பாட்டை ஒவ்வொருவரும் அடைந்தாக வேண்டும். பக்தியின் மூலம் எத்தகைய பண்பாடு அடையலாம் என்பதைத் தாயுமானவர் ஒரு பாடலில் விளக்கியுள்ளார். அப்பாடலை ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம்.

பண்பாடு அடைந்த பக்தனுக்குப் பகவான் எளியவராகின்றார். பண்பாடு அடையாத பக்தனுக்குப் பகவான் எளியவரல்லர். 'உடல் குழைய' என்று தாயுமானவர் பகர்கின்றார். நாம் உடலை முறையாக வளர்த்து வருகின்றோம். உடல் தேஜஸ் நிறைந்ததாகவும், பலம் நிறைந்ததாகவும் இருக்கவேண்டும். அப்படிப் பண்பட்ட உடல் பரமனை நாடிக் குழையவேண்டும். உலக வாழ்க்கையில் ஏற்படும் துயரங்கள், விபத்துக்களைக் குறித்து உடல் குழைவதுண்டு. பரமனை நாடியும் உடல் குழைவதுண்டு. உடல் குழைவது இவ்விரண்டுக்கும் பொதுவான நிகழ்ச்சி எனினும் அவற்றால் விளையும் பயன்கள் வடதுருவம் தென்துருவம் போன்று நேர்மாறாக இருக்கின்றன.

ராமனை மணம்புரிந்து மிதிலையிலிருந்து வெளியேகிய சீதையையும், அசோகவனத்திலிருந்து சிறைமீட்டு எடுக்கப்பட்ட சீதையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். மிதிலையிலிருந்து வெளியேகிய சீதை பூலோக வாழ்க்கையை முறையாக நடாத்தியதால் உண்டான பண்புகள் எல்லாம் வாய்ந்தவராகஇருந்தார்.அசோக வனத்திலிருந்து சிறைமீட்டு எடுக்கப்பட்ட சீதை தவத்தின் விளைவாக அடையக் கூடிய பண்பாட்டின் உச்சநிலையை உடையவராக

இருந்தார். உலகத்துயரத்தில் மூழ்கி மெலிந்து தேய்ந்து போனவர்களை உலகில் காணலாம். அசோக வனத்திலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட சீதையும், மெலிந்து எலும்பும் தோலுமாக இருந்தார். ஆனால் அவருடைய உள்ளம் ஆத்மப்பிரகாசம் உடையதாக இருந்தது. சீதையினுடைய உள்ளம் ஆத்மப் பிரகாசம் உடையதாக ஆனதற்குக் காரணம் அவர் உடல் குழைகின்ற சூழ்நிலையில் வைக்கப்பட்டிருந்ததே யாகும். பரத்தை நோக்கி உடல் குழைகின்ற சூழ்நிலையில் நாம் வைக்கப்பட்டாலும், நம் உள்ளம் ஆத்மப் பிரகாசமுடையதாக ஆகிவிடும். சரீரத்தில் கட்டுண்டு கிடக்கின்ற ஜீவன் சிறை கிடந்த சீதைக்கு நிகராகின்றான். சரீர வாழ்க்கையில் கட்டுண்டு கிடக்கிறபொழுது சீலம் நிறைந்த வாழ்வு வாழ்ந்து உள்ளொளியைப் பெறுவதற்கான பரிபாகம் அடையவேண்டும். பூலோக சம்பத்துக்காக உடல் குழையுமானால் உடல் தேய்கின்றது. அதனிடத்துள்ள தேஜஸ் மறைகின்றது. பரமனை நாடி உடல் குழைகிற பொழுது உடல் மெலிந்தாலும் தேஜஸ் குறைவதில்லை. உள்ளத்தில் ஓஜஸ் பன்மடங்கு அதிகரிக்கிறது. இரும்பைத் தீயிலிட்டு உருக்குகின்ற பொழுது இரும்பிலுள்ள அழுக்கு நீங்கி அது எஃகாக ஆகின்றது. இரும்பை நெருப்பில் உருக்குவது போன்று ஜீவன் தவத்தின் வாயிலாகத் தன்னை உருக்குகின்ற பொழுது பரசொருபமாகத் திருந்தி அமைகின்றான். அப்பொழுது அவனது மேனி மெலிவுற்றிருந்தாலும் அதன் பொலிவு எல்லாருடைய உள்ளத்தையும் கவர்வதாக இருக்கின்றது. பரத்தினிடமிருந்து பிரிந்திருக்கிறோம் என்ற துயரம் பெரும் துயரமாகவேண்டும். உலகை நாடி படும் துயரம்வேறு; பரத்தைப் பிரிந்திருந்துபடுகின்ற துயரம் வேறு. உலகுக்காகத் துயரப்படக் கூடாது. பரத்துக்காகத் துயரப்படவேண்டும். ஸ்ரீ இராமகிருஷ்ணர் பகர்வதாவது : ''பொருளுக்காக உலக மக்கள் குடம் குடமாகக் கண்ணீர் சிந்துகின்றனர். பரமனைக்குறித்து யாராவது ஒரு சொட்டுக் கண்ணீர்விடுகின்றார்களா? மேலும் போகத்துக்காகவும், பதவிக்காகவும், பேர் புகழுக்காகவும், உலக மக்கள் குடம், குடமாகக் கண்ணீர் சிந்துகின்றனர். பரமனைக் குறித்து யாராவது ஒருசொட்டுக் கண்ணீர் விடுகின்றார்களா ?'' உலக சம்பத்துக்காகக் கண்ணீர் சிந்துபவர்கள் பந்தபாசத்தில் அழுந்திப் போகிறார்கள். பரத்துக்காகக் கண்ணீர் சிந்துபவர்கள் பந்தபாசத்தினின்றும் விடுபடுகின்றனர். உலகைக் குறித்துக் கண்ணீர் சிந்துவது சித்தமலத்தை அதிகப்படுத்துகிறது. பரத்துக்காகக் கண்ணீர் சிந்துவது சித்தமலத்தை அறுக்கிறது. ஆகையால் பரத்தை நோக்கி உடல் குழைபவர்கள் பாக்கியவான்கள். பரத்தை நோக்கி உடல் குழைபவர்களுக்குப் பரத்தினிடம் இருந்து ஆறுதல் வருகிறது.

''என்பெலாம் நெக்குருக'' என்கிறார் தாயுமானவர். உலகைக் குறித்து விசனப்பட்டு எலும்பு உருகுகின்றவர்கள் இருக்கிறார்கள். உடலுக்கு விருத்தாப்பியம் வரவர உடல் சிறுத்துப் போய்விடும். அது எலும்பு உருகுவதற்கு நிகராகின்றது. உலக வாழ்க்கை இங்ஙனம் முடிவு பெறுகிறது. பரத்தை நாடுவதன் விளைவாக எலும்பு உருகுவது உண்டு. பரத்தை நாடி எலும்பு உருகுகின்ற அளவு, உருகுகின்ற ஜீவனிடம் தெய்வீகம் பொலிகின்றது.

''விழிநீர்கள் ஊற்றென வெதும்பி ஊற்ற''— என்கிறார் தாயுமானவர். பரமனை நாடிக் கண்ணீர் மல்குதல் கிடைப்பதற்கரிய பேறு ஆகும். ''யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்'' ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே''— என்கிறார் மாணிக்கவாசகர். ஞானமார்க்கத்தில் போகின்றவர்களுக்கும், அழுகைக்கும் வெகு தூரம். ஞானி அழுகையை அறியாதவன் ஆகின்றான். பக்தி மார்க்கத்தில் போகின்றவர்களுக்கும் அழுகைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பக்தி மார்க்கத்தில் செல்கின்றவர்கள் பரமனை நோக்கி அழுகின்றார்கள். பிரபஞ்ச சம்பந்தமானவற்றைக் குறித்து அழுகின்றவர்களும் உண்டு. பிரபஞ்சம் சம்பந்தமானவற்றைக் குறித்து அழுகின்றவர்களை மூக்கால் அழுகின்றார்கள் என்று சொல்லுவது உண்டு. அது பாராட்டத்தக்க அழுகை அன்று. அப்படி அவர்கள் அழும்பொழுது கண்ணீர் மூக்கின் அருகில் உள்ள விழி ஓரத்தில் இருந்து சிந்தும். பரத்தை நாடி அழும்பொழுது காதுப் பக்கம் உள்ள விழி ஓரங்களில் இருந்து கண்ணீர் சிந்தும். பிரபஞ்ச அழுகை அஞ்ஞானத்

தில் ஆழ்த்துகின்றது. பரத்தைக் குறித்து அழும் அழுகை ஞானத்தெளிவை உண்டு பண்ணுகிறது. பிரபஞ்ச அழுகைக்கு ராவணாகார அழுகை என்று பெயர். பரத்தைக் குறித்து அழும் அழுகைக்கு ருத்ராகார அழுகை என்று பெயர். ருத் என்னும் அடிச்சொல்லில் இருந்து ராவணன் என்ற சொல்லும், ருத்ரம் என்ற சொல்லும் வருகின்றன. அழச் செய்பவைகள் என்று அவை பொருள்படுகின்றன. ருத்ராகார அழுகை ஜீவனைப் பண்படுத்திப் பரத்திடம் சேர்க்கிறது. ராவணாகார அழுகை ஜீவனைப் பந்த பாசத்தில் மேலும் ஆழ்த்துகிறது. பரத்தை நாடிக் கண்ணீர் சிந்துவது பக்தனிடத்துள்ள அலாதி மகிமையாகின்றது. உள்ளத்தில் உள்ள அழுக்குகளை எல்லாம் பரத்தை நாடிச் சிந்துகின்ற கண்ணீர் கழுவிக் கொண்டு போகிறது. மனபரிபாகத்துக்கு அவ்வழுகை பயன்படுகிறது. ஆனால் அவ்வழுகை எல்லார்க்கும் வந்து வாய்ப்பதில்லை. பரமனை நாடி அழுகின்ற அழுகை ஜீவன் பண்பட்டு வருகிறான் என்பதற்கு அறிகுறியாக அமைகின்றது. அவ்வழுகையைக் குறித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "சூரியன் உதயமாவதற்கு முன்பு கீழ்வானம் வெளுத்து வருகிறது. கீழ்த் திசையில் செவ்வானம் உண்டாகிறது. அவ்விரண்டும் சூரியோதயத்துக்கு அறிகுறிகளாகின்றன. கடவுட்சிந்தனையில் மூழ்கிக் கண்ணீர் பெருக்கும்பொழுது அந்த ஜீவனுக்கு அது கடைசி ஜென்மம் என்பதற்கு அக்கண்ணீர் அறிகுறியாகிறது. ஞானோதயம் வரப் போகிறது என்பதற்கும் அது அறிகுறியாகும்."

நாம் தனிமையாக இருந்துகொண்டு நம்முடைய உள்ளத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டும். உலகத்தில் நாம் விரும்பியது நமக்கு வாய்க்கவில்லையே என்று நாம் எத்தனையோ முறை விசனப்பட்டு இருக்கிறோம். கடவுளின் அனுக்கிரஹத்துக்கு வேற்றானாக இருக்கிறோமே என்று எப்பொழுதாவது நாம் விசனப்பட்டு இருக்கின்றோமா?

"ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போலவே ஓர் உறவும் உன்னி உன்னி" என்கின்றார் தாயுமானவர். காந்தத்திற்குச் சற்று தூரத்தில் இருக்கின்ற ஊசி, காந்தத்தை நாடுகிற நாட்டத்தில் இருக்கிறது. இன்னும் காந்தத்தினிடத்து அணுகுதல் அதற்குச் சாத்தியமில்லை. அசோகவனத்தில் சிறையிருந்த சீதாபிராட்டியின் உள்ளம் இராமன் இருந்த திசையை நோக்கிக் கவர்ந்திழுக்கப்பட்டது. காந்தத்தின் கவர்ச்சிக்கு வசப்படுகிற தூரத்தில் ஊசியை வைத்தால், ஊசி சர்வகாலமும் அதனிடத்து நாட்டமுடையதாக இருக்கிறது. காந்த ஊசி வடதிசையையே நோக்கி இருக்கும். வடதுருவத்தில் காந்தம் அலை அலையாக இருக்கிறது. அதை நாடும் நாட்டத்தில் காந்த ஊசி வடதிசையையே பார்த்துக்கொண்டிருக்கும். கப்பலில் திசையை அறிந்துகொள்வதற்குக் காந்த ஊசியைப் பயன்படுத்துகின்றார்கள். சுழல் காற்றில் அகப்பட்டுக் கப்பல்சுழன்று சுழன்று வந்தாலும் காந்தஊசி வடதிசையையே நோக்கிய வண்ணமிருக்கும். ஜீவாத்மா எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு அது நல்ல எடுத்துக்காட்டாகிறது. நம் சிந்தனை சர்வகாலமும் பரமாத்மனிடத்துச் சென்றுகொண்டிருக்க வேண்டும். இராவணன் அசோகவனத்தில் சீதைக்குப்பலப்பல சூழ்நிலைகளை அமைத்துத் தருகின்றான். வசதிகள் பல செய்து தருகிறேன் என்று கூறுகின்றான்; சிற்சில சமயம் பயமுறுத்துகின்றான். இராவணன் எத்தகைய சூழ்நிலையை உண்டுபண்ணிய பொழுதும் சீதையினுடைய உள்ளம் பந்தப்படவில்லை. சீதாபிராட்டி அல்லும் பகலும் இராமனுடைய சிந்தனையிலேயே இருக்கின்றாள். இராமனைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் சீதைக்கு இல்லை. அதுபோன்ற ஸ்திரமான இடையறாத சிந்தனை ஜீவாத்மனுக்குப் பரமனை நாடி வந்துவிடுமாகில், பண்பாட்டில் அதிவிரைவில் அவன் மேலே போய்க்கொண்டிருப்பவன் ஆகின்றான்.

"படபடவென நெஞ்சம் பதைத்து உள் நடுக்குற" என்கிறார் தாயுமானவர். அச்சம் அல்லது பயம் உண்டாகின்றபொழுது நெஞ்சம் படபடவென அடிக்கும். மகிழ்ச்சி உண்டாகும்பொழுதும் நெஞ்சம் படபடவென அடிக்கும். பாரமார்த்திக உணர்ச்சிகளினாலும் நெஞ்சம் படபடவெனப் பதைப்பது உண்டு. நெஞ்சம் துடிப்பது ஒரு வரம்புக்கு மேலே போய்விட்டால் நெஞ்சு வெடித்துப் போய்விடும். நெஞ்சு வெடித்தவன் நுரைநுரையாக இரத்தம் கக்கி

இறந்துபோவான். சிலர் பயத்திற்குள்ளாகும் போது சிலசமயம் இத்தகைய மரணத்திற்குள்ளாகிவிடுகிருர்கள். இதைப்பற்றிய உண்மையையறியாத மக்கள் அப்படி மரணம் அடைந்தவனைப் பேயடித்துக் கொன்றுவிட்டதாகப் பொருள்படுத்துகிருர்கள். ஈண்டு பாரதியார் கூறியுள்ள சிறு கதையை ஞாபகமூட்டுவது அவசியம்: மக்கள் மாரியம்மன் திருவிழாவிற்குப் பெருங்கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். காலரா தேவதையும் அந்த மாரியம்மன் திருவிழாவிற்குப் போய்க் கொண்டிருந்தது. வழியில் பத்திரிகை நிருபர் ஒருவர் காலரா தேவதையைப் பார்த்து, ''மக்கள் மாரியம்மன் விழாவைப் பார்ப்பதற்காகப் போகின்ருர்கள். உனக்கு அங்கு என்ன வேலே?'' என்று கேட்டார். ''மக்கள் ஆங்கு சுகாதாரத்தைக் கவனிக்கமாட்டார்கள். அந்தச் சூழ்நிலே எனக்குப் பொருத்தமாக இருக்கும். அங்கு என்னுடைய லீலேகளே நடத்தி சில உயிர்களேக் கொன்று விடுவேன்'' என்றது காலரா தேவதை. விழா முடிந்து எல்லாரும் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். காலரா தேவதையும் திரும்பி வந்தது. பத்திரிகை நிருபர் விழாவிலிருந்து திரும்பி வந்த காலரா தேவதையைப் பார்த்து ''விழாச் சமயத்தில் நீ எத்தனே பேர்களுடைய உயிர்களே வாங்கினுய்?'' என்று கேட்டார். ''பதினேரு பேரைக் கொன்றேன்'' என்று காலரா தேவதை சொன்னது. செய்தித்தாளில் எழுபத்தைந்துபேர் என்று போட்டிருக்கிறது'' என்ருர் பத்திரிகை நிருபர்.''காலரா நோயினுல் மாண்டவர்கள் பதினேரு பேர்கள்தான்; பாக்கியுள்ளவர்கள் எல்லாரும் பீதியினுலேயே மாண்டுபோனுர்கள்''என்றது காலராதேவதை. இங்ஙனம் பயந்து சாகிறவர்கள் பலர் இருக்கின்றனர். மனிதன் பயப்படுவதற்கு ஒரு முடிவே இல்லே. கடவுளே நெருங்கும்பொழுது பயப்படாத நிலே வருகிறது. பயப்படாத நிலே கடவுள்பால் போய்க்கொண்டிருப்பதற்கு அறிகுறியாகும். தெய்வ வடிவங்களெல்லாம் அபய கரம் படைத்தவைகளாக இருக்கின்றன.

பயத்தினுல் மரணமடைகிருர்கள் என்பதற்கு ஒரு நிகழ்ச்சி. இங்கிலாந்தில் சிந்தனேயாளர் ஒருவர் ஆராய்ச்சி செய்து பேய் இல்லே என்பதைக் கண்டார். பேயைப் பற்றிய பயமில்லாமல் அவர் இருந்தார். உலகில் எல்லாச் சமுதாயத்தாரிடத்திலும், எல்லாக் காலத்திலும் பேயைப் பற்றிய பயம் இருந்து வருகிறது. ஆகையால் மக்கள் பேய் இல்லே என்று சொல்லி வந்த அந்த மனிதரைப் பார்த்து, ''நீங்கள் நள்ளிரவில் சுடுகாட்டுப் பக்கம் போய் வர முடியுமா?'' என்று கேட்டார்கள். அவரும் போய் வரமுடியும் என்று ஒப்புக்கொண்டார். அப்படியானுல் சுடுகாட்டுக்குப் போய் வருவதற்கு அடையாளமாக அங்குள்ள கல்லறை ஒன்றில் ஆணி அடித்து வரவேண்டும் என்று கூறி அவர் கையில் ஆணியும், சுத்தியும் கொடுத்தார்கள். அவர் அவற்றை வாங்கிக் கொண்டு சுடுகாட்டுக்குச் சென்று அவர்கள் கூறியிருந்த கல்லறையில் அமர்ந்து தாம் கொண்டு சென்ற ஆணியை அங்கு அடித்தார். ஆணி அடித்துவிட்டு அவர் எழுந்திருக்கும் பொழுது அவருடைய சட்டையை யாரோ பிடித்து இழுப்பதுபோன்றிருப்பதை அவர் உணர்ந்தார். உடனே அவருக்குப் பேயைப் பற்றிய எண்ணம் வந்துவிட்டது. அவ்வமயமே அங்கு கீழே விழுந்து உயிர் நீத்தார். அடுத்த நாள் காலேயில் சுடுகாட்டுக்குப் போனவரைக் காணுேமே என்று மக்கள் அவரைத் தேடிச் சுடுகாட்டுக்குச் சென்ருர்கள். சுடுகாட்டில்அவர் செத்துக்கிடந்தார். அவரைப் பேய் அடித்து விட்டதாக எண்ணினுர்கள். ஆனுல் உண்மையில் நிகழ்ந்தது என்னவென்ருல் இருட்டில் அவர் தரையில் அமர்ந்து ஆணி அடிக்கும் பொழுது தமக்குத் தெரியாமல் தம் சட்டையின் நுனியையும் சேர்த்து அடித்துவிட்டார். ஆகையால் அவர் எழுந்திருக்கும்பொழுது அவர் சட்டை ஆணியோடு தரையில் மாட்டிக்கொண்டது. அதை அறியாத அவர் பேய் இழுப்பதாகப் பொருள்படுத்திப்பயந்து தமக்குத்தாமே மரணத்தையுண்டுபண்ணிக்கொண்டார். உண்மையில் பேய் அவரைக் கொல்லவில்லே. இங்ஙனம் பலர் பயத்தினுல் சாகிருர்கள். பயத்துக்கு ஆளாகும்பொழுது நெஞ்சு துடிக்கின்றது. பரமனே நாடி நெஞ்சு துடிக்கும்பொழுது அது அபயத்தில் கொண்டுசேர்க்கிறது. உலக சம்பந்தமான அச்சம் அதில் இல்லே. பரமனே நாடி உள்ளம் நடுங்கும்பொழுது அது பயத்தை வெல்லுகிறது. பரமனே நாடி உள்ளம் நடுங்குவ

தானது பண்பாட்டின் அறிகுறியாகிறது. பரமனை நாடி நெஞ்சம் துடிப்பதும், நடுங்குவதும், உலகப் பொருளுக்காக நெஞ்சம் துடிப்பதும், நடுங்குவதும் வெளித் தோற்றத்துக்கு ஒன்று போல் தென்படினும் அவற்றின் விளைவுகள் முற்றிலும் வெவ்வேறானவை. சீதாபிராட்டி அசோக வனத்தில் சிறையிருந்தபொழுது தம் நாயகனான ராமனைக் குறித்து நினைத்து நெஞ்சம் படபடவெனத் துடிக்கப் பதைபதைத்து நடுக்குற்றார். அச்செயல் அவரைத் தெய்வீக சொருபமாகத் திருத்தியமைத்தது. பரத்தைக் குறித்துப் பதைபதைத்து நெஞ்சம் நடுக்குறுபவர்கள் பரசொருபமாக மாறியமைகிறார்கள்.

"பாடி ஆடிக்குதித்து" என்று தாயுமானவர் பகர்கின்றார். பக்தனுக்குப் பாடும் திறமை இருக்குமானால் அதைப் பரம்பொருள் விஷயத்தில் நன்கு பயன்படுத்தலாம். ஞானமார்க்கத்திலும், யோக மார்க்கத்திலும் பாடுவதற்கு வாய்ப்பு அமையலாம், அமையாதும் போய்விடலாம். ஆனால் பக்தி மார்க்கத்தில் பாடுதல் முக்கிய இடம்பெறுகிறது. அறுபத்து நான்கு கலைஞானங்களையும் கடவுள் வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாம். ஆரண்யத்தில் பறவைகள் தங்கள் போக்கில் பாடுகின்றன. அவை பாடுவதைக் கேட்டால் நம் மனம் அதீதத்துக்குப் போய்விடும். இன்னிசைக் கருவிகளைக் கொண்டு இனிய கீதத்தையுண்டுபண்ணலாம். இன்னிசையின் மூலமாகவும் பரமனையடையலாம். இவ்வுண்மையைக் கண்ணபிரான் குழலோசையின் மூலமாகக் காட்டுகின்றார். கிருஷ்ணவதாரத்தில் பக்தி தத்துவத்தை எட்டு வயது பூர்த்தியாவதற்குள் விளக்கிக் காட்டுகின்றார். அவருடைய இளம் பிராயத்தில் நிகழ்ந்த அதிசயச் செயல்கள் யோகசித்தியின் மூலமாக என்னென்ன நிகழ்த்தலாம் என்பதைக் காட்டுகின்றன. வாழ்வு ஒரு போராட்டம். நல்ல வீரன் ஒருவன்தான் அதைச் சிறப்பாகக் கொண்டு செலுத்தமுடியும். இந்தச் செய்தியை அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் போர்க்களத்தில் வைத்துத் தருகின்றார். வீரனுக்குத்தான் வாழ்வு. அவனுக்கு வாழ்க்கையில் ஒருதடவைதான் மரணமுண்டு. கோழை ஒருவன் பயப்படும்பொழுதெல்லாம் செத்ததற்கு நிகராகின்றான். ஆகவே வாழ்க்கையில் கோழை பலமுறை செத்துப் பிழைக்கின்றான். வீரனாக இருந்து வாழ்க்கையைக் கொண்டு செலுத்த வேண்டும் என்பது கிருஷ்ணனுடைய போதனைகளில் ஒன்றாகும்.

பரம்பொருள் ஒருவரே நாயகன் ஆகின்றார். அவரை நாடிப்போகும் ஜீவாத்மாக்கள் யாவரும் பெண்பாலர் ஆகின்றனர். இதையொட்டிய ஓர் நிகழ்ச்சியைக் காண்போம். மீராபாய் கிருஷ்ண பக்தி உடைய அம்மையார், முற்றும் துறந்தவர். கிருஷ்ணபக்தியில் திளைத்தவராகப் பிருந்தாவனம் சென்றார். ஆங்கு வாழ்ந்து வந்த சான்றோர் ஒருவரைச் சந்திக்க விரும்பி அவருக்குச் செய்தி சொல்லியனுப்பினர். அப்பெரியவர் பெண்பாலர் யாரையும் தாம் சந்திப்பதில்லை என்று பதில் சொல்லியனுப்பினர். மீராபாய் மீண்டும் "பிருந்தாவனத்தில் கிருஷ்ணனைத் தவிர மற்றொரு புருஷன் இருக்கிறாரா?" என்று அவரிடம் கூறும்படி சொல்லியனுப்பினர். மீராபாயின் அக்கூற்றைக் கேட்டதும் அப்பெரியவர் உடனே புறப்பட்டு மீராபாய் இருக்குமிடம் வந்து அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தார். பரமன் ஒருவர்தான் நாயகர் என்றும் மற்றவர்களெல்லாரும் பெண்பாலர்கள் என்றும் அவர் அறிந்திருந்தமையால் அவர் அங்ஙனம் செய்தார். கிருஷ்ணவதாரத்தில் ரிஷிகளே கோபியர்களாக வந்து கிருஷ்ணனிடம் பக்தி பூண்டிருந்தார்கள் என்பது ஐதிகம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "நான் மறுபிறப்பு எடுக்க வேண்டி வந்து பெண்ணாகப் பிறந்தால் இளமையிலேயே விதவையாக விரும்புகிறேன். உலகத்தவர்கள் பெண்ணாகப் பிறந்தால் மணமுடித்து வைத்துவிடுவார்கள். உலகப்போக்கு அத்தகையது. மணமான பிறகு கணவனை இழந்துவிட்டால் உலகக் கட்டுப்பாட்டிலிருந்து நான் தப்பித்துக்கொள்வேன். விதவையான பிறகு அல்லும் பகலும் நான் கடவுள் வழிபாட்டிலேயே ஈடுபட்டிருப்பேன். என்னை யாரும் அப்பொழுதுகுறைகூறமாட்டார்கள்." விதவையாவது உலகத்தவர் காட்சியில் தௌர்பாக்கியம். கடவுள் வழிபாட்டில் ஈடுபடுபவர்களுக்கு அது சௌபாக்கியம். ஆத்ம சாதகர்களுக்கு எல்லாச் சூழ்நிலையும் அனுகூலமான சூழ்நிலையே ஆகிறது. (தொடரும்)

உலகப் பேராசிரியர்கள்

(சுவாமி விவேகானந்தர் 1900ஆம் ஆண்டில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பகாடினியாவிலுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[57ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமயநம்பிக்கை இல்லாதவர்கள் சமயத்தைப் பற்றி அதிகம் நினைக்கவும், சமயத்தாலாவதென்ன என்பதைப்பற்றிக் கவலைப்படவும் செய்கிறார்கள். ஆகையால் அவர்கள் செயல்படுகிறார்கள். சமயநம்பிக்கையுடைய நீங்கள் சமயத்தைப்பற்றி ஏதாவது சிந்தனை செய்யுங்கள். சமயத்துறையில் கடவுளை நோக்கி அரும்பாடுபடுங்கள். தோல்வியைப் பொருட்படுத்தாதீர்கள். விசித்திரமான கொள்கையைப் பற்றிப் பிடித்திருப்பதற்காகக் கவலைப்படாதீர்கள். உங்களுடைய கொள்கை விசித்திரமானதென்று மற்றவர்கள் பேசுவார்கள் என்று பயப்படுவீர்களானால் அதை உங்களுடையமனதிலேயே வைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்குச் சென்று அதைப் பிரசாரம் செய்யாதீர்கள். ஆனால் சிந்தனை சக்தியை வளருங்கள். கடவுளை நோக்கிச் செல்ல முயலுங்கள். காலக்கிரமத்தில் உங்களுக்கு ஞான ஒளி உண்டாகும். எனக்கு நாள்தோறும் ஒருவன் உணவு ஊட்டி வருவானாகில் நாள் ஆக ஆக என் கை வலிவு இழந்துவிடும். நமக்காக மற்றொருவர் வேலை செய்தால் நம்மிடம் ஆற்றல் வளராது; நாம் முன்னேற்றமடைய முடியாது. நம்முடைய முன்னேற்றத்துக்கு நாம் உழைத்தாக வேண்டும். ஆட்டுக் கூட்டம் ஒன்றைப் பின்பற்றி மற்றொன்று போவது போன்று சமயத்துறையில் ஒருவரைப் பின்பற்றி மற்றொருவர் செல்லுவது சமய வளர்ச்சிக்கு அறிகுறியாகாது. சமயத்துறையில் அது மரணமாகும். செயலற்றிருப்பது செத்துக் கிடப்பதற்கு நிகராகிறது. சுறுசுறுப்பாக இருங்கள். எங்குச் சுறுசுறுப்பான இயக்கம் இருக்கிறதோ அங்கு வேற்றுமை இருக்கத்தான் செய்யும். வேறுபாடுதான் வாழ்வுக்குச் சுவைதருகிறது. வேறுபாடு அழகுதருகிறது. வேறுபாடே இங்கு எல்லா அழகையும் செய்து வருகிறது. வாழ்க்கையில் தென்படும் இத்தனை வேறுபாடுகளும் வாழ்வு இருக்கிறது என்பதற்குச் சின்னங்களாகின்றன. அப்படியிருக்க வேறுபாட்டைக் கண்டு நாம் ஏன் அஞ்சவேண்டும்?

தத்துவ ஞானிகளைப் பற்றி அறிந்துகொள்ளும் நிலைக்கு நாம் இப்பொழுது வந்திருக்கின்றோம். சமயத்திலிருக்கும் விலங்குத் தன்மை போன்ற செயலுக்கு அப்பால் சரித்திர சான்று கொண்டு சமயத்தைக் காண்போம். உண்மையான சிந்தனை சக்தியும், மெய்யன்பும் எங்கு இருக்கிறதோ அங்குக் கடவுளை நோக்கி முன்னேறி கடவுளை அடைந்திருக்கிற காட்சியைக் காண்கின்றோம். கடவுளை நேரிடையாகக் காணும் காட்சியை வாழ்க்கையில் ஒரு க்ஷண நேரமாவது சிலர் பெற்றிருக்கின்றனர். அத்தகைய அருள்பேறு பெற்றவர்களுக்கு உடனே ஐயங்கள் சாசுவதமாக அகன்று போய்விடுகின்றன. அவர்களிடத்திலிருந்தகோணல் புத்தி நீங்கி சரியான புத்தி அவர்களுக்கு வருகிறது. கடவுள் காட்சி பெற்றவர்கள் பந்தத்திலிருந்து விடுபடுகின்றனர். கர்மபலன்கள் யாவும் அவர்களிடமிருந்து பறந்து விடுகின்றன. புறத்தார்க்குச் சேயோனாகவிருப்பவனையும், பக்தனுக்கு அண்மையிலிருப்பவனையும் கண்ட பிறகு கர்ம பலன் ஏது? சமயம் என்பது அனுபூதியாகும். அனுபூதியில்லாததெல்லாம் வெறும் கொள்கையும் கோட்பாடுமேயாம். கடவுளை நேரே தரிசிப்பதற்குச்சரியான பாதைகள் பலஇருக்கின்றன. கனிகளைச் சாக்கடையில் எறிந்துவிட்டுக் கனியிருந்த கூடைக்குச் சண்டை போடுவது போன்று தத்துவத்தைப் புறக்கணித்துவிட்டுச் சடங்குகளுக்குச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம்.

சமயத்தைக் குறித்து இரு அன்பர்கள் வழக்காடிக்கொண்டிருப்பார்களானால் அவர்களிடம் "நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா? நீங்கள் கடவுளாகப் போற்றப்படுபவர்களைக் கண்டிருக்கிறீர்களா?" என்னும் கேள்வியை எழுப்புங்கள். இயேசு ஒருவரே தத்துவ ஞானி என்று சொல்லுபவரைப் பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள். "உங்கள் தந்தையார் இயேசுநாதரைப் பார்த்திருக்கிறாரா?" அதற்கு

இல்லை என்ற பதில்தான் அவரிடமிருந்து வரும். "உங்கள் பாட்டனர் இயேசு நாதரைப் பார்த்திருக்கிருரா?" இல்லை என்ற பதில்தான் வரும். "நீங்கள்தான் இயேசு நாதரைப் பார்த்திருக்கிறீரா?" அதற்கும் இல்லை என்ற பதில்தான் வரும். "உங்கள் பாட்டனரோ, உங்கள் தந்தையாரோ, நீங்களோ பார்க்காத ஒருவரைக் குறித்துச் சர்ச்சையில் ஏன் இறங்கு கிறீர்கள்?" இத்தகைய சண்டையைத் தான் "பழத்தைச் சாக்கடையில் போட்டு விட்டுக் கூடைக்காகச் சண்டை போடுவது" என்று சொல்வதாகும். இத்தகைய பொருளற்ற சமயச் சழக்குகளில் ஈடுபடுவதைக் குறித்து அறிவுடைய ஆண்களும், பெண்களும் நாணமடைய வேண்டும்.

தேவ தூதர்களும், தீர்க்கதரிசிகளும் பெரியோர்களாவார்கள் என்பது முற்றும் உண்மை. அவர்கள் ஒவ்வொருவரும் சிறந்த கருத்தை உலகுக்குப் போதிப்பதற்காகவே வந்தவர்களாவார்கள். இந்திய தீர்க்கதரிசிகளை எடுத்துக்கொள்வோம். சமயத்தை ஏற்படுத்திய சான்ருேர்களுக்குள் அவர்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவர்கள். இந்திய தீர்க்கதரிசிகளுள் முதலாவதாகக் கிருஷ்ணனை எடுத்துக் கொள்வோம். கீதையைப் படித்த ஒவ்வொருவருக்கும் அக்கீதை முழுவதும் தியாகம் அல்லது பற்றற்றநிலையைப் போதிக்கிறது என்பதை அறிவார்கள். பற்றற்று வாழ்ந்திரு; இதயத்தை ஒருவருக்கே அர்ப்பணித்து விடு; அழியாத நித்தியப் பொருளாகவிருக்கும் கடவுளுக்கே உன் இதயத்தைக் கொடுத்து விடு. ஓயாது மாறி அமையும் உலகப்பொருள் எதனிடத்தும் உன் இதயத்தைக் கொடுக்கும் தவறு செய்து விடாதே. ஏனென்ருல் உன் உள்ளத்தை உலகப் பொருள்களிடத்து வைத்தால் அதன் மூலம் நீ துன்பத்தையே பெறுவாய். ஒரு மனிதனை நேசிக்கிருய் என்று வைத்துக் கொள்வோம். அவன் மரணமடையும் பொழுது அது உனக்குத் துன்பத்தைத் தரும். உன் நண்பனிடம் நீ பற்றுதல் வைக்கிருய் என்று வைத்துக் கொள்வோம். இன்று நண்பனுகவிருப்பவன் நாளைக்கு விரோதியாகிவிடுவான். பெண் ஒருத்தி கணவன்மீது பற்றுக் கொண்டிருக்கலாம். ஆனல் அவன் ஒரு நாளைக்கு அவள் மீது சண்டைக்குத் திரும்புபவனுக மாறிவிடலாம். கணவன் ஒருவன் மனைவிமீது பற்றுதல் வைக்கலாம். இன்றைக்கு மனைவியாகவிருப்பவள் நாளைக்குப் பிணமாகி விடலாம். இத்தகைய போக்கில் உலகம் சென்றுகொண்டிருக்கிறது.

ஆகையால் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் பகர்வதாவது: இறைவன் ஒருவன்தான் மாருத பொருளாகிருர். அவருடைய அன்பு பொய்த்துப் போவதில்லை. நாம் எங்கிருந்தாலும், எதைச் செய்தாலும்அவர் நம்மிடம் யாண்டும் மாருத கருணையுடையவராக இருக்கின்ருர். நம்மிடத்தில் அவர் யாண்டும் மாருத அன்பு செலுத்தி வருகிருர். அவர் மாறுவதில்லை; நாம் என்ன செய்தாலும் நம்மீது அவர் கோபித்துக் கொள்வதில்லை. நம்மீது அவர் எப்படிக் கோபம் கொள்ளமுடியும்? உங்களுடைய குழந்தைகள் பல குறும்புகள் செய்கின்றன. அதற்காக அவைகள் மீது நீங்கள் கோபித்துக் கொள்கிறீர்களா? நாம் என்ன நிலையை அடைவோம் என்பதைக் கடவுள் அறிந்திருக்கிருர். எல்லாரும் முன்னும் பின்னுமாகப் பூர்ணநிலையை அடைந்தாக வேண்டும் என்பதைக் கடவுள் அறிகின்ருர். ஆகையால் அவர் எல்லையற்ற பொறுமையுடையவராக இருக்கிருர். நாம் அவரை நேசிக்கவேண்டும். அவரை நேசிப்பதன் மூலமாகத்தான் மற்ற பொருள்களை நாம் நேசித்தாக வேண்டும். மனைவிக்காக நீங்கள் மனைவியை நேசிப்பதில்லை. அதேபோன்று கணவனுக்காகக் கணவன் நேசிக்கப்படுவதில்லை. கணவனை நேசிப்பதாக மனைவி நினைத்துக் கொண்டிருந்தாலும் கணவனிடத்துள்ள ஆத்மாவே மனைவியால் நேசிக்கப்படுகிறது. கடவுள் ஒருவர்தாம் நேசத்துக்குரியவராகிருர். ஆனல் மனைவி ஆத்மாவை நேசிப்பதாக அறிவதில்லை என்ருலும் அவள் கணவனிடத்திலுள்ள ஆத்மாவை அவனை அறியாது நேசித்து வருகிருள். இத்தகைய அறியாமையிலிருக்கும் வரையில் கணவன் மனைவி இணக்கத்தில் துன்பம் வந்துகொண்டிருக்கும். மனைவி கணவனிடத்திலுள்ள ஆத்மாவையும், கணவன் மனைவியினிடத்திலுள்ள ஆத்மாவையும் நேசிக்கின்ற உண்மையை அறிந்து கொள்வார்களாகில் அவர்கள் பந்தத்

திலிருந்துவிடுபடுகின்றனர். சாஸ்திரங்கள் இவ்வுண்மையைத்தான் விளக்குகின்றன. எங்கு கவர்ச்சி இருக்கிறதோ, எங்கு ஆனந்தம் இருக்கிறதோ அங்கு இறைவனுடைய சாந்நித்தியம் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவர் ஆனந்த சொரூபமாகவும், அருள் வடிவமாகவும், அன்பு சொரூபமாகவும் இருக்கின்றார். அன்பே கடவுள் என்பது ஆப்தவாக்கியம். அவர் இல்லாது அன்பு மலராது.

கிருஷ்ணனுடைய போதனை இந்தப் போக்கில் அமைந்திருக்கிறது. இந்துக்களுடைய உள்ளத்தில் கடவுளின் நம்பிக்கையை வேரூன்றும்படி அவர் செய்துவிட்டார். இந்து ஒருவன் எச்செயலில் ஈடுபட்டாலும் அதை இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய்வான். நீர் பருகும் பொழுதும் "இதில் ஏதாவது நன்மை இருக்குமாயின் அது இறைவனுக்கு உரியதாகட்டும்" என்று பகர்வான். பௌத்தன் ஒருவனே ஏதாவது ஒரு நல்ல செயலைச் செய்வானானால் "இந்தச் செயலினால் விளையும் நற்பயன் உலகுக்கு உரியதாகட்டும். நான் செய்யும் செயலில் ஏதாவது நலம் உண்டாகும் ஆகில் அது உலகுக்கு உரியதாகட்டும். உலகில் உள்ள கேடு என்னை வந்து அடையட்டும்" என்று பகர்வான். தான் கடவுள் நம்பிக்கையுடையவன் என்று இந்து ஒருவன் பகர்வான். கடவுள் சர்வ சக்திமான் என்றும், எல்லா இடங்களில் உள்ள உயிர்களுக்கு உயிராக இருக்கிறார் என்றும் இந்து பகர்கின்றான். "நான் செய்யும் நலன் அனைத்தையும் கடவுளுக்குக் கொடுத்து விடுகிறேன். அது நான் செய்யும் பெரிய தியாகமாகும். கடவுளிடம் நான் சமர்ப்பித்த நலன்கள் யாவும் உலகுக்குப் போய்ச் சேருகின்றன" என்று அவன் சொல்லுகின்றான். இது கிருஷ்ணனுடைய போதனையின் ஒரு பகுதியாகும். அவருடைய போதனையின் மற்றொரு பகுதி யாது?, "இவ்வுலகத்தில் வாழ்கின்ற எவனொருவன் கடவுளுக்காகக் கர்மம் செய்து கர்மபலனைக் கடவுளுக்குக் கொடுத்துவிடுகிறானோ அவனை உலகத் தீமைகள் சார்வதில்லை. எங்ஙனம் தாமரை இலை தண்ணீருக்கடியில் தோன்றித் தண்ணீரில் வளர்ந்து, தண்ணீரின் மேற்பரப்பில் மலர்கிறதோ, அங்ஙனம் மனிதன் கருமம் மயமாக இருக்கின்ற பிரபஞ்சத்தில் இருந்துகொண்டே கர்மங்களின் பலன்களை யெல்லாம் கடவுளுக்குச் சமர்ப்பித்து விடவேண்டும்." இது கிருஷ்ணனுடைய போதனையின் மற்றொரு பகுதியாகும்.

தீவிரமான கர்மத்தைப்பற்றிப் பேசும் குருவாக இருந்துகொண்டு கிருஷ்ணன் மேலும் பேசுகின்றார். கர்மம் செய். கர்மம் செய். இரவும் பகலும் விடாது கர்மம் செய் என்று கீதை போதிக்கிறது. "கர்மம் செய்துகொண்டே இருந்தால் அமைதி எங்கே கிடைக்கும்? வாழ்க்கை முழுவதும் செக்குமாடு போன்று உழைத்து மரணமடைவதற்காகவா, நான் இவ்வுலகத்திற்கு வந்திருக்கின்றேன்?" என்று நீ கேட்கலாம். அதற்குக் கிருஷ்ணன் பகர்வதாவது: "கர்மத்தின் மூலம் நீ அமைதியைப் பெற முடியும். கர்மத்தைவிட்டு ஓடுவதனால் நீ எந்த வழியிலும் அமைதியைப் பெறமுடியாது." உங்களுக்கு அமைந்த கடமைகளை எல்லாம் வீசி எறிந்துவிட்டு மலையின் உச்சிக்குச் செல்லுங்கள். அங்கு உங்களுடைய மனம் அலைய ஆரம்பிக்கும். உங்களுடைய மனம் பேதலித்துக்கொண்டு உலகத்தைப்பற்றிச் சுழன்று சுழன்று ஓடிக்கொண்டே இருக்கும். "ஐயனே, உங்களுக்கு அமைதியான இடம் கிடைத்ததா? இமயமலைப் பகுதிகளில் நீங்கள் எத்தனை ஆண்டுகள் சஞ்சாரம் செய்திருக்கிறீர்கள்?" என்று ஒரு மனிதன் துறவி ஒருவரைக் கேட்டான். "நாற்பது ஆண்டுகளாக நான் இமயமலைச் சாரலில் அலைந்து கொண்டு இருக்கிறேன்" என்று துறவி பதிலளித்தார். "இமயமலைப்பகுதியில் ரம்மியமான இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவ்விடங்களில் ஏதாவது ஒன்றில் நீங்கள் தங்கிச் சாதனை செய்யலாம் அல்லவா? நீங்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை?" என்று அம்மனிதன் துறவியைக் கேட்டான். "என்னுடைய மனம் அதற்குச் சிறிதும் இடம் தரவில்லை, அதற்கு நான் என்ன செய்வேன்?" என்றார் துறவி. நாம் அனைவரும் அமைதியை நாடுகின்றோம். ஆனால் நாம் அமைதியாக இருப்பதற்கு நம் மனது இடந்தருவதில்லை. மனதில் அமைதி இல்லையெனில் உலகில் அமைதியைக் காணமுடியாது. (தொடரும்)

நிறை ஞானம்

இயற்கையை ஆராய்ந்து இயற்கையில் உள்ள ரகசியத்தையெல்லாம் அறிந்துகொள்ளுதற்கு விஞ்ஞானம் முயலுகிறது. உண்மைப் பொருளை ஆராய்ந்து உண்மையை அறிந்து கொள்ளுதற்கு மெய்ஞ்ஞானம் முயலுகிறது. விஞ்ஞான அறிவை மெய்ஞ்ஞானம் பூர்த்தி செய்கிறது. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் முரண்படுபவைகள் அல்ல. விஞ்ஞானம் மனிதனை ஓர் எல்லைவரைக்கும் எடுத்துச் செல்லுகிறது. எங்கு விஞ்ஞானம் முடிவு பெறுகிறதோ அங்கு மெய்ஞ்ஞானம் ஆரம்பமாகிறது. விஞ்ஞான அறிவுள்ளவர்கள்தான் மெய்ஞ்ஞானத்தின் மகிமையை நன்கு அறிந்து கொள்ள முடியும். மெய்ஞ்ஞானத்துக்குச் சரியான விளக்கமும் அவர்களால் தரமுடியும். மெய்ஞ்ஞானத்தில் கண்ட உண்மைகள் யாவும் விஞ்ஞான அறிவின் மூலம் நிரூபிக்கப்பட்டு வருகின்றன. மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் இணைப்பதற்கே ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ஸ்ரீ விவேகானந்தரும் மண்ணுலகிற்கு வந்தார்கள் எனப் பகரலாம். நவீனக் கல்வியை அறவே ஒதுக்கிவிட்டு நேரிடையாக மெய்ஞ்ஞானம் பெற்றவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். நவீனக் கல்வி முழுவதும் பெற்று அதன்பின் மெய்ஞ்ஞானம் பெற்றவர் சுவாமி விவேகானந்தர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் பெற்ற மெய்ஞ்ஞானத்தை உலகுக்கு எடுத்து வழங்குதற்குச் சுவாமி விவேகானந்தரைப் பயன்படுத்தினர். மெய்ஞ்ஞானம் விஞ்ஞானத்தின் மூலமாக உலக மக்களுக்கு வழங்கப்படவேண்டும். இவ்வுண்மையை விளக்குவதாக ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்வும், ஸ்ரீ விவேகானந்தரது வாழ்வும் அமைந்துள்ளன.

பிரகிருதியைப் பற்றிய அறிவுக்கு விஞ்ஞானம் என்றும் புருஷனைப்பற்றிய ஞானத்திற்கு மெய்ஞ்ஞானம் என்றும் பெயர். பிரகிருதி தத்துவத்தை அறிபவன் பிரகிருதியை நன்கு பயன்படுத்துகிறான். புருஷ தத்துவத்தை அறிபவன் பிரகிருதியின் மாயா ஜாலத்திலிருந்து விடுபடுகின்றான். பிரகிருதி விகாரப்பட்டுக்கொண்டு இருக்கிறது. பிரகிருதியின் விகாரங்களால் பிரம்மத்தினிடத்து நலம் கேடு ஒன்றும் உண்டாவதில்லை. பிரம்மம் அல்லது புருஷன் யாண்டும் ஆனந்தமயமாக இருந்து வருகிறது. பிரம்மத்தை அறிபவன் பிரம்மமாகின்றான். பிரகிருதியின் தோற்றம் கானல் நீர் போன்றது. நிறைஞானம் படைத்தவர் பிரகிருதியின் தோற்றத்தைப் போற்றிப் பாராட்டுவதற்கிடையில் அதில் பற்று வைக்காதிருக்கின்றார். நிறைஞானி பிரகிருதியை மித்தை என்று ஒதுக்குகின்றார்; அங்ஙனம் அவர் அதைப் புறக்கணிப்பதால் அவருக்கு நஷ்டமொன்றுமில்லை. பிரகிருதியின் கூறாக இருக்கின்ற தம் உடல்மீதும் நிறைஞானி பற்று வைக்காது வாழ்கின்றார். பிராரப்தத்திற்கு ஏற்றவாறு உடல் வாழ்க்கை நிகழ்கிறது என்று உடல் வாழ்க்கையில் பற்று வைக்காது வாழ்பவர் நிறைஞானி ஆகின்றார். தாமரை இலை நீரில் இருந்தாலும் நீர் அதன்மீது ஒட்டுவதில்லை. அங்ஙனம் நிறைஞானி உலகத்தில் இருந்தாலும் உலகப்பற்று அவருடைய உள்ளத்தில் இடம் பெறுவதில்லை. புளியம்பழம் ஓட்டிற்குள் இருந்தாலும் ஓட்டில் ஒட்டாது அது இருக்கிறது. ஓடு இருப்பதை முன்னிட்டு அதற்கு லாபமோ, ஓடு உடைவதை முன்னிட்டு அதற்கு நஷ்டமோ இல்லை. புளியம்பழம் போன்று நிறைஞானி தம் சரீரத்தில் இருக்கின்றார். சரீரம் இருப்பதை முன்னிட்டு நிறைஞானிக்கு அனுகூலமோ அல்லது இன்பமோ, சரீரம் போவதை முன்னிட்டு நிறைஞானிக்குத் துன்பமோ இல்லை. சரீர சுகதுக்கத்திலிருந்து விடுபட்டு யாண்டும் நிறைஞானி பிரம்மத்தை யறிந்து பிரம்மானந்தத்தில் திளைத்திருக்கின்றார். நிறைஞானம் பெற்றவர்கள் விருப்பு வெறுப்பற்ற நிலையை அடைந்து இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்னும் பெருநிலையில் இருப்பவர்கள் ஆகிறார்கள்.

நிறைஞானி தெளிந்த உள்ளமும் தூய மனமும் படைத்தவராக இருந்து யாண்டும் ஆத்மதரிசனம் பெற்று வருகிறார். அவர் கர்மங்களை விளையாட்டுப்போன்று செய்து கர்மத்தில் கட்டுப்படாதவராகவும் உலகுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறார். பக்தியின் முதிர்ந்தநிலை பிரேமை பக்தி எனப்படுகிறது.

மற்ற மூன்று யோகங்களைக் காட்டிலும் பக்தி யோகம் பின்பற்றுதற்கு எளியது. பக்தி யோகத்தில் செல்பவர்களுக்குச் சாஸ்திர ஆராய்ச்சி அதிகம் தேவையில்லை. கல்வியறிவின்றி நூல் ஆராய்ச்சியின்றி தூய பக்தியினால் மட்டும் ஆயர்குலப் பெண்கள் கண்ணனை அடைந்தார்கள். ஞானம், பக்தி, கர்மம், யோகம் ஆகிய நான்கும் சமரசமடைவது சாலச் சிறந்தது. கர்மயோகமும் ராஜயோகமும் நம்மிடத்திலுள்ள ஆற்றலையும், பக்தியோகம் அன்பையும், ஞானயோகம் அறிவையும் வளர்க்கின்றன. அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய மூன்றும் பூரண நிலையில் நிறைஞானம் பெற்றவரிடத்து இருக்கின்றன.

ஞானி சிந்தனைசக்தியை வளர்க்கின்றார். விவேக வைராக்கியத்தோடு கூடிய மனதைக் கொண்டுசிந்தித்துப்பார்த்தால் மெய்ப்பொருள் எது என்பது விளங்கும். அன்னப்பறவை பாலையும் நீரையும் கலந்து வைத்தால் நீரினின்று பாலைப் பிரித்தெடுத்துவிடும். ஞானியினுடைய தெளிந்த உள்ளம் பொய்யிலிருந்து மெய்யைப் பிரித்தெடுத்து விடுகிறது. சேதனம், அசேதனம் ஆகிய இரண்டின் கலப்பைப் பிரபஞ்சத்தில் காண்கிறோம். சுத்தச் சைதன்யம் பரப்பிரம்மம் ஆகின்றது. சுத்தச்சைதன்யம் சுத்தத் தங்கத்திற்கு நிகராகின்றது. சுத்தச் சைதன்யத்தில் செயல் இல்லை. சுத்த தங்கம் நகை செய்ய உதவாது. நகையாக இருக்கும் தங்கத்தில் செம்பு கலந்திருக்கிறது. பிரபஞ்சமாக இருக்கும் சைதன்யத்தில் அசேதனம் அல்லது ஜடம் சேர்ந்திருக்கிறது. நகையில் செம்பு கலந்திருந்தாலும் அதைத் தங்க நகை என்றே அழைக்கின்றோம். அங்ஙனம் ஜீவனிடத்து அசேதனம் சேர்ந்திருந்தாலும் அவனை ஜீவாத்மன் என்றே அழைக்கின்றோம். அறிவு ஆத்மாவிற்கு உரியது. தோன்றுவதும் மறைவதும் பிரகிருதியின் குணங்களாம். பிறப்பதும் இறப்பதும் ஆத்மாவிற்கு இல்லை. பிரகிருதியின் செயல் ஆத்மாவினிடத்து நிகழ்கிறது என்று அக்ஞானி நினைக்கின்றான். பிரகிருதி எத்தகையது என்றும் ஆத்மா எத்தகையது என்றும் நிறைஞானி அறிகின்றார்.

ஜாலவித்தைக்காரன் மேடையின் மீது நின்றுகொண்டு கை ஜாலத்தால் பல அதிசயங்களைக் காட்டுகின்றான். கையில் மாங்கொட்டையொன்றை எடுக்கின்றான். சிறிதுநேரத்திற்குள் அதை மரமாக்குகின்றான். கையில் மணலையெடுக்கின்றான். அதைச் சர்க்கரையாக மாற்றிக் காட்டுகிறான். இவை போன்ற மாயாஜாலங்களை அவன் மக்களுக்குக் காட்டுகின்றான். மக்கள் அவன் மாயாஜாலத்தில் மதி மயங்கி அவன் காட்டுவதெல்லாம் உண்மையென எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கு ஜாலவித்தைக்காரன்தான் உண்மையில் இருக்கின்றான். அவன் காட்டும் ஜால வித்தைகளெல்லாம் பொய்யானவை. கடவுள் ஒரு பெரிய ஜாலவித்தைக்காரர். உலகம் என்னும் பெரிய ஜாலவித்தையை அவர் காட்டிக்கொண்டிருக்கிறார். அவர் காட்டும் ஜால வித்தையை மெய்யென்று எண்ணுபவர்கள் அக்ஞானிகள். நிறைஞானியோ ஜால வித்தைக்காரராகிய கடவுளைமட்டும் மெய்யென்றறிகிறார். அவரில்லாது உலகம் இல்லையென்பதை நிறைஞானி நன்கு அறிகின்றார். பொய்த்தோற்றமாகிய உலகைப் புறக்கணித்து விட்டுக் கடவுளைமட்டும் பார்ப்பவர் நிறைஞானியாகின்றார்.

ஆத்மா ஆனந்த சொரூபமாக இருக்கின்றது. ஆனால் உலகில் இன்பம் துன்பம் இரண்டும் இருக்கின்றன. உலகில் வாழ்ந்திருப்பவர்களுக்கு இன்பதுன்பமுண்டு. ஆத்மாவில் நிலைத்திருப்பவருக்கு யாண்டும் இன்பம் உரியதாகின்றது. ஆத்மஞானமுடையவர் கேட்டைக் காண்பதுவும் இல்லை; கேட்டைச்செய்வதும் இல்லை. நன்றுடையானை அணுகுமளவு நலமே ஓங்குகிறது. அக்ஞானம் அல்லது அறியாமைக்கு வசப்பட்டிருப்பவர்கள் கேட்டைத் தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். தன்னைச் சரீரமயமாக நினைப்பது கேடுகளிலெல்லாம் பெரியகேடு ஆகிறது. தன்னைச் சரீரமயமாக நினைப்பவன் மற்ற உயிர்களைத் தனக்கு வேறானவைகளாகக் கருதுகின்றான். அப்பொழுது அவைகளுக்குத் தீங்கு செய்யவும் முயலுகின்றான். மற்ற உயிர்களையெல்லாம்ஞானி தம்சொரூபமாகக்கருதுவதால் அவைகளுக்கு அவர் எந்தத்தீங்கும் செய்வதில்லை. சரீர உணர்வைக் கடந்து செல்வதற்கேற்பமனத்தெளிவுஏற்பட்டுப் பரஞானம்உண்

டாகிறது. மனம் சரீர உணர்வை விட்டு நீங்கினல் அது ஆத்ம சொருபத்தில் எளிதில் லய மாகிறது.''குருவியின் கூண்டு அழிந்துபோனல் அக் குருவி ஆகாயத்திற்குப் பறந்து போய் விடுகின்றது. அதுபோல சரீர உணர்ச்சியும் உலக உணர்ச்சியும் மனத்தைவிட்டு நீங்கினல் ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய ஆகாயத் திற்குப் பறந்து சென்று சமாதி நிலேயில் பர மாத்மாவோடு ஐக்கியமாகிவிடுகின்றது.'' இங் ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார்.

பசி இருப்பதால் உண்கின்ருேம். உண்ப தற்கு உணவு தேவைப்படுகின்றது. உணவை உற்பத்தி பண்ணுவதற்கு உழைத்தாகவேண் டும். உண்பது, உணவு உற்பத்தி பண்ணுவது ஆகிய இவைகளெல்லாம் கர்மங்கள். பிரகிருதி யும், பிரகிருதியைச் சார்ந்துள்ள உயிர்களும் குறைபாடுடையவைகள். அக் குறைபாட்டைப் போக்கிக் கொள்வதற்குக் கர்மம் செய்தாக வேண்டும். குறை உள்ளளவும் ஆசை இருந்து கொண்டேயிருக்கும். ஆசை ஒவ்வோர் உயிரை யும் கர்மத்தின்கண் தூண்டிக்கொண்டே இருக் கிறது. நிறைஞானி நிராசையில் நிலேபெற்ற வராக இருக்கின்ருர். ஆகவே எவ்வித ஆசை யும் குறையும் அவருக்கு இல்லே. விறகைத் தூக் கிச்செல்பவன் தன்னே விறகுமயமாகத் தாற்கா லிகமாகக் கருதிக்கொள்கின்ருன். விறகு தூக் கிச்செல்பவனே 'விறகு' என்று அழைத்தால் அவன் தன்னே அழைப்பதாகக் கருதி ஓடி வருவான். விறகைச் சுமந்திருப்பதை முன் விட்டு அவன் தன்னே விறகாகக் கருதிக் கொள்கின்ருன். சரீரத்தைப் பெற்றுள்ள மனிதன் தன்னேச் சரீரமயமாகக் கருதிக் கொள்கிருன். சரீரத்தின் மூலம் நிகழ்கின்ற செயல்களே யெல்லாம் தன்னுடைய செயலாக எண்ணி பந்தத்தைப் பெருக்கிக்கொள்கின் ருன். நிறைஞானியோ கருவிகரணங்களேச் செயலில் ஈடுபடுத்தி அவைகள் செய்கின்ற செயல்களேச் சாட்சிமயமாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கிருர். தம்முடைய பூர்ணநிலேயில் இருந்து ஞானி ஒருபோதும் கலேவதில்லே.

களிமண்ணேக்கொண்டு குயவன் பாத்திரங் களே வனேகின்ருன். சட்டி, பானே, மிடா போன்ற வடிவங்களேக் களிமண்ணிலிருந்து உண்டாக்குகின்ருன். வடிவங்களில் அவை வெவ்வேருக இருப்பினும் அவையாவும் ஒரே மூலப் பொருளானகளிமண்ணுலானவையாகும். வடிவங்களில் கருத்துச் செலுத்தி அவை வெவ் வேருனவை என்று சொல்லுகின்றவர்கள் அக் ஞானிகள். சர்க்கரையைக் கொண்டு யானே, குதிரை, ஒட்டகம், மான் போன்ற வடிவங்க ளில் மிட்டாய்கள் செய்து மிட்டாய்க் கடைக் காரன் விற்பனேக்காகக் கடையில் வைத்தி ருக்கின்ருன். குழந்தைகள் அவ்வடிவங்களேப் பார்த்து மயக்கம் கொள்ளுகின்றன. எந்த வடிவத்திலுள்ள மிட்டாயைச் சுவைத்தாலும் அது சர்க்கரையைச் சுவைத்ததற்கு நிகரா கிறது. இந்த உண்மையை அறியாத குழந்தை தனக்குப் பிடித்த வடிவம்தான் வேண்டும் என அடம் பிடிக்கும். பரப்பிரம்மம் பிரபஞ்சத்தி லுள்ள அத்தனே தோற்றங்களாகத் தம்மை விளக்கிக் கொண்டிருக்கிருர். ஒரே பொருள் இத்தனேயாக வடிவெடுத்திருக்கிறதென்பதை அறியாது ஒன்றினிடத்து விருப்பும் மற்றதனி டத்து வெறுப்பும் அக்ஞானிகள் கொள்ளுகின் றனர். ஆனல் நிறைஞானம் படைத்த ஞானி தோற்றங்களுக்கு மதிப்புத் தராது உண்மைப் பொருளே அறிந்து சமநோக்கோடு அனேத்தை யும் காண்கின்ருர்.

பரப்பிரம்மத்தினிடத்திலுள்ள சக்திக்கு மாயாசக்தி என்று பெயர். மாயாசக்தியின் துணேகொண்டு பரப்பிரம்மம் தம்மை இத்தனே யாகத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிருர்.சூரி யனுடைய வெப்பத்தால் நீர் ஆவியாகி வானத் தில் அது மேகமாக வடிவெடுக்கிறது. சூரியனு டைய சக்தியால் தோன்றிய மேகம் சூரிய னேயே சிறிது நேரத்திற்கு மறைக்கிறது. அங்ங னம் பரப்பிரம்மத்தினுடைய மாயா சக்தி பரப் பிரம்மத்தையே மறைத்து வைத்திருக்கிறது. பரப்பிரம்மத்தின் துணேகொண்டுதான் மாயை யைக் கடந்து போகமுடியும். மாயையினேக் கடப்பது எளிய செயலன்று. மாயையின் மயக் கத்திற்குட்பட்டவர்களாக மக்கள் வாழ்கின்ற னர்.வெறும் சாஸ்திரஞானமும் வாய்வேதாந்த மும் மாயையினே வெல்லுவதற்குப் பயன்படா. வெளிச்சம்வந்ததும் இருள் அகல்வதுபோன்று நிறைஞானம் வந்ததும் மாயையின் மயக்கத்தி லிருந்து நாம் விடுபடுகின்ருேம். நிறை ஞானம் நிறை வாழ்வை நல்குகிறது.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

பரமாத்மாவே ஜீவாத்மாவாகத் தோன்றுகிறது என்பதை அவச்சின்னபக்ஷம் மூலமும் பிரதிபிம்பபக்ஷம் மூலமும் அறிந்து கொண்டோம். இனி சூக்ஷ்மமான ஆராய்ச்சி ஒன்று ஆரம்பிக்கிறது. ஜீவாத்மா உண்டாக்கப்பட்டது, கல்பிதம். எது உண்டாக்கப்பட்டதோ அது உண்மைப் பொருளன்று, பொய்யானது. அதற்குச் சாஸ்வதமான இருப்பு இல்லை. அப்படியிருக்க உண்மையான சத்பொருளான பரமாத்மாவும், கல்பிதமான ஜீவாத்மாவும் ஒன்றுதான் என்று எப்படிச் சொல்கிறீர்கள் என்கிற சந்தேகம் வருகிறது. இதை மிக அழகாக விளக்குகிறார்கள். நாம் ஜாக்கிரத, சொப்பன, சுஷுப்தி என்கிற அவஸ்தைகளில் மாறி மாறி ஏதோ ஒரு அவஸ்தையில் இருக்கிறோம். (ஒரு நோயாளியைப் பார்த்து அவன் படுகிற அவஸ்தையைப்பார்க்கச் சகிக்கவில்லை என்று பச்சாதாபப்படுகிறோம். அங்கு அவஸ்தை என்பதற்குச் சிரமம், துன்பப்படுகிறான் என்று பொருள். இங்கு கதி, நிலை, தன்மை, இன்னவிதமாக இருக்கிறோம் என்று பொருள்.) சொப்பன அவஸ்தையில் இருக்கிறவரையில் அது உண்மையானது போன்றும், அவ்வின்பதுன்பங்களில் நாம் சம்பந்தப்பட்டிருப்பது போன்றும் தோன்றுகிறது. ஆனால் நாம் சொப்பனத்திலிருந்து விழித்துக் கொண்டதும் நாம் கண்டது எல்லாம் வெறும் கல்பிதம், உண்மையல்ல, அது வாழ்க்கையைத் திருத்தியமைக்காது, மேன்மைப்படுத்தாது என்பது நமக்கு நன்கு விளங்குகிறது. ஜாக்கிரத அவஸ்தையை மிகவும் உண்மையானதாகவும், திடமானதாகவும் உணர்கிறோம். பலபேர் சேர்ந்து விவகாரம் செய்கிறோம். அதில் சம்பவங்களின் தொடர்ச்சி சரியாக இருக்கிறது. அனைவரும் ஒரேவிதமாக உணர்கிறோம். கனவில் நாம் கண்ட பேர்வழிக்கு நம்மைச் சந்தித்ததுபற்றி, நம் கனவு விவரம் ஒன்றும் தெரியாது. ஆனால் ஜாக்கிரத அவஸ்தையை நம்மால் கனவைப் போன்று தள்ளிவிட முடிவதில்லை. ஆனால் சிந்தித்துப் பார்த்தால் ஒரு உண்மை புலப்படும். கடந்துபோன நம் ஜீவிதத்தைப் பற்றி எண்ணிப் பாருங்கள். அது பத்து முதல் நூறு வருஷங்கள் வரை எத்தனை வருஷங்கள் கொண்ட நீண்ட வாழ்வாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதனால் என்ன? கடந்த கால சம்பவங்கள் கனவுக்கு நிகர்தான். இன்பதுன்பங்கள், பெருமை சிறுமைகள் யாவும் அடிபட்டுப் போய் விடுகின்றன. கனவில் வலுவான சம்ஸ்காரம் இல்லை. மனம் அங்கு அரைகுறையாக வேலை செய்கிறது. ஜாக்கிரத அவஸ்தையில் வாழ்வின் சம்பவங்கள் மனதில் நன்கு பதிகின்றன, சம்ஸ்காரங்கள் ஆகின்றன. அவைகள் நமது சுபாவம், குணம்ஆகின்றன. வினைப்பயன் உண்டாகிறது, அவ்வினைப்பயனைச் சங்கிலி போன்ற, தொடர்ந்த பிறப்பு இறப்பு மூலம் அனுபவித்துத் தீர்க்க வேண்டியதாகிறது. எத்தனையோ பிறவிகளுக்குப் பிறகு வினையின் வேகம் தீர்ந்து மனிதன் தன் நிஜமான நிலைக்குப் போகிறான்; வீடு பேறு அடைகிறான். அப்போது அவனுக்குக் கடந்துபோன வாழ்வு முழுவதும் கனவு போன்று தோன்றுகிறது. ஜாக்கிரத அவஸ்தையின் நிலைமையும் இத்தகையதே. இந்த உயர்ந்த நிலை, வீடுபேறு மனதற்றநிலை என்றும், துரிய அவஸ்தை என்றும், துரிய நிலை என்றும், யோக நித்திரை என்றும், தூங்காத தூக்கம் என்றும் பல பெயர்களால் சொல்லப்படுகிறது. இந்த நிலையில் ஜீவன், ஜீவபோதம், ஜீவ உணர்வுகள் எல்லாம் போய் பரபோதம், பரமாத்மாவில் ஒன்றுபட்டு விடுகின்றான். ஜீவநிலையில் இந்த உயர்ந்த நிலை அஞ்ஞானத்தால் மூடி மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. நூலில் பாசிமணிகள் கோர்க்கப்பட்டிருப்பது போன்று இந்த நிஜ நிலையில் யாண்டும் இருந்து கொண்டுதான் மற்ற மூன்று அவஸ்தைகளையும் ஜீவனால் அனுபவிக்க முடிகிறது. இருட்டில் கட்டை ஒன்று இருந்தால் தான் அதை அவரவர் மனம்போல் பேய் என்றோ, நண்பன் என்றோ, திருடன் என்றோ, காவல்காரன் என்றோ பொருள்படுத்துதல் சாத்தியமாகும். இந்தக் கட்டை போன்றது துரிய நிலை. அதன்பேரில் மற்ற மூன்று அவஸ்

தைகளும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. துரிய நிலேயின் ஒரு சாயை, நிழல் போன்று நமது சுஷுப்தி அவஸ்தை இருக்கிறது.

ஆழ்ந்த கனவற்ற உறக்கத்துக்குச் சுஷுப்தி அவஸ்தை என்று பெயர். இதுபற்றிய ஆராய்ச்சி உயர்ந்த வேதாந்த கருத்துக் களுக்கு, முடிபுகளுக்கு நல்ல விளக்கமாகிறது. பிரக்ஞானம் பிரம்மம்என்னும் மஹாவாக்கியத் துக்குச் சுஷுப்தி அவஸ்தையேநல்லவிளக்கமா கிறது. பேரறிவே, பேருணர்வேமெய்ப்பொருள் என்பது அந்த மஹாவாக்கியத்தின் பொரு ளாகும். பேரறிவு, பேருணர்வு என்ருல் என்ன என்பதை நன்கு விளக்குதற்கு, புரிந்து கொள்வதற்குச் சுஷுப்தி அவஸ்தை பயன்படு கிறது. நன்ருகத் தூங்கினேன், ஆனந்தமாகத் தூங்கினேன், ஒன்றும் தெரியாமல் தூங்கி னேன் என்று சொல்லுகிருேம். நாம் நன்ரு கத் தூங்கும்போது மனது வேலே செய்வ தில்லே. இந்திரியங்கள் வே லே செய்வ தில்லே. பிரபஞ்ச சம்பந்தமான எந்த உணர்வும் அப்பொழுது இல்லே.பகலில் நம்மைப்பற்றி நாம் கொண்டுள்ள ஆண், பெண், ஏழை, பணக் காரன், ஆரோக்கியமானவன், நோயாளி, இளேஞன், முதியோன் ஆகிய எந்த உபாதியும் இல்லே. இன்பம் துன்பம், பெருமை சிறுமை, மானம் அவமானம் ஆகிய அனுபவம் ஒன்று மில்லே. பின்பு நன்ருகத் தூங்கியதாகவும், ஆனந்தமாகத் தூங்கியதாகவும், ஒன்றுமே தெரியவில்லே என்றும் சொல்வதுயார்? அதைப் பார்த்துக்கொண்டிருந்தது யார்? அந்த அனு பவத்தை நுகர்ந்தது யார்? எது மனதையும் இந்திரியங்களேயும் பயன்படுத்தி உலகைப் பார்த்ததோ, அனுபவித்ததோ, தன்மேல் அநேகம் உபாதிகளே எது ஏற்றுக்கொண் டதோ அப்பொருளே பிரக்ஞானம் என்றும் ஆத்மா என்றும் சொல்லப்படுகிறது. அதுவே ஆனந்தமாகத் தூங்கியதையும், ஒன்றுமே தெரியாததையும் சாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருந்தது. மனதற்ற நிலேயிலும் ஓர் உணர்வு, பிரக்ஞை, அறிவு இருக்கிறது என் பதை நாம் ஆழ்ந்த தூக்கத்தின் மூலம் உணர் கிருேம். மனதற்ற நிலேயில் உணர்தல், அறி தல் இருக்கக்கூடும் என்பதற்கு ஆழ்ந்த உறக்கமே சான்று. மனது ஜடப்பொருள். சூரியனிடத்திலிருந்து சந்திரன் வெளிச்சம் பெறுவது போன்று ஆத்மாவின் சன்னிதியில் மனது அறிவைப்பெறுகிறது. மனதற்றநிலேயில் அனுபவிக்கிற ஆனந்தத்துக்கு எதிர்ச் செயல், துன்பம் என்பது இல்லே. அந்த அறிவே மாயை என்னும் திரை, அக்ஞானம் என்னும் திரை அகற்றப்பட்ட பூரண அறிவு ஆகிறது. அந்த நிலேயில் உள்ள ஜீவாத்மாவும் பரமாத் மாவும் ஒன்று ஆகிறது. ஆனுல் அது ஜீவ வியக்தியோடு கூடியிருப்பதால் கால தேச வர்த்தமானம் என்கிற போர்வையால், மாயை யால் மூடப்பட்டதாகித் தன் சுய நிலேயினின்று கீழிறங்கியது போன்று தோன்றுகிறது. மாணுக்கன் ஒருவன் தினம் பள்ளிக் கூடத்துக் குப் போய் படித்துவிட்டு வீட்டிற்கு வருகிருன். அவனது வீடுதான் அவனது சொந்த இடம், யதாஸ்தானம். தன் யதாஸ்தானத்துக்குத் தினம் வந்து போவது பள்ளிக்கூடத்தில் சுறு சுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருக்க உதவு கிறது. அதுபோல பிரக்ஞானமே நமது நிஜ நிலே. அதனுடன் ஆழ்ந்த உறக்கத்தின் மூலம் தினம் நம்மை அறியாமலேயே நாம் தொடர்பு கொண்டு வருகிருேம். அதனுல் எத்தகைய ஓய்வும், புத்துணர்ச்சியும் உண்டாகிறது! ஆகையால் ஆழ்ந்த தூக்கம் இறைவனுல் நமக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய வரப்பிர சாதமாகும். குழந்தை ஒன்று அகங்காரம் மமகாரமற்று கெட்ட குணம் ஏதும் இல்லாமல் தெய்வநிலேயில் இருக்கிறது. பெரியவன் ஆகும்போது அவன் தன் நிஜ உள் இயல்பைக் காட்டுகிருன். அக் குழந்தையின் தெய்வநிலே போன்றது நாம் தூக்கத்தில் அனுபவிக்கும் தெய்வநிலே. அவ்வனுபவம் ஜாக்கிரத அவஸ்தையில் அனுபவத்துக்கு வரவேண்டும். அப்போது அது பிரம்மநிர்வாணம், ஜீவன் முக்தி எனப்படுகிறது. சுஷுப்திக்கு நித்தியப் பிரளயம் என்று ஒரு பெயர். அங்கு ஒரே அபேத நிலே. சிருஷ்டி பேதம் மயம். எல்லா உயிர்களும் தூக்கத்தில் பேதங்களே மறந்து, உபாதிகளே இழந்து, பேதமற்ற, இரண்டற்ற தெய்வநிலேயில் இருக்கின்றன. இது வேற்று மையில் ஒற்றுமை என்றும் விளக்கப்படுகிறது.

இனி இந்த நமது நித்திய அனுபவத்தை வைத்து ஜீவன் மூன்று நிலேகளில் இருக்

கிறன் என்று விளக்குகிறர்கள். பாரமார்த்தி **கன்** (முற்றிலும் உண்மையானது) வியவஹாரி **கன்** (காரிய காலத்தில் இருப்பது)பிராதிபாஸி **கன்** (தோன்றும் காலத்தில் மட்டும் இருப்பது) என்று மூன்று நிலைகளில் ஜீவன் இருக்கிறது. கனவு நிலையில் உள்ள ஜீவனைப் பிராதிபாசி கன் என்கிறர்கள். கனவு கண்டுகொண்டி ருக்கும் பரியந்தம் அது உண்மை. விழித்த பிறகு அது வெறும் தோற்றம், பொய் ஆகி விடுகிறது. கனவு நிலையில் இருக்கிற ஜீவனைப் பிராதிபாசிகன் என்கிறர்கள். அதாவது தோன்றும் காலத்தில் மட்டும் உண்மையானது போன்று விளங்குகிறது. ஜாக்கிரத அவஸ் தையில் விவகாரம் செய்யும் ஜீவனை வியவ ஹாரிகன் என்றும் ஆழ்ந்த கனவற்ற உறக்கத் தில்உள்ள ஜீவனைப் பாரமார்த்திகன் என்றும் சொல்கிறர்கள். இனி ஒரு நுண்ணிய விஷ யத்தை விளக்க ஆரம்பிக்கிறர்கள். நமது இயல்பான உடலின்மேல் பல வேஷங்களைப் புனைந்து கொள்கிறேம். பல வேஷங்களில் நாம் தோன்றுவதற்கு ஏதுவாக, அடிப்படை யாக இயல்பான சரீரம் இருக்கிறது. சுஷுப்தி அவஸ்தையைப் பற்றிய உண்மையை மீண்டும் இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ளுதல் நலம். நன்ருகத் தூங்கியது யார்? ஒன்றும் தெரியா மல் தூங்கியதற்கு யார் சாக்ஷியாய் இருந் தது? எது மனதையும் இந்திரியங்களையும் பயன்படுத்தி உலகை அனுபவித்ததோ, தன் மேல் அனேக உபாதிகளை எது ஏற்றுக் கொள்கிறதோ அப்பொருள் பிரக்ஞானம் என்றும் ஆத்மா என்றும் சொல்லப்படுகிறது. விதவிதமான சினிமாப்படக்காட்சிகள் தோன்று வதற்குத் திரை எப்படி ஆதாரமாக இருக் கிறதோ அப்படி பிரக்ஞானத்தின் பேரில் கோடானுகோடி ஜீவ வியக்திகள் தோன்று கின்றன. எல்லாப் பிறவியிலும் வியவஹாரி கன், பிராதிபாசிகன் நிலைகள் மாறி மாறி அமைகின்றன. ஒரு பிறவியிலேயே மாறி மாறி அமைகின்றன. ஆனல் எல்லா மாற்றங்களுக் கிடையிலும், எல்லாப் பிறவிகளிலும் பாரமார்த் திகன் நிலை ஒன்றுபோலவே இருக்கிறது. மற்ற எல்லாக் கோளங்களின் சுழற்சிக்கிடை யிலும் துருவநக்ஷத்திரம் எப்படித் திசைமாருது வடதிசையிலேயே இருக்கிறதோ அது போலவே மாறி மாறி அமைகின்ற ஜீவவியக்தி கள், சரீரபேதங்கள், அதற்கேற்ற உணர்வு கள், இன்ப துன்ப அனுபவங்கள் ஆகிய யாவற்றுக்கும் ஆதாரமாகப் பேரறிவு அல்லது பிரக்ஞை இருக்கிறது. அது பாரமார்த்திக சத் என்றும் சொல்லப்படுகிறது. எல்லா ஜீவர்களிடத்திலும் இப் பிரக்ஞை ஒரேநிலை யில் இருக்கிறது. ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீ ரம் ஆகிய இரண்டிற்கும் ஆதாரமாய் அக் ஞானம் என்னும் காரண சரீரம் இருக்கிறது. சூக்ஷ்ம சரீரமாகிய மனது மாறி அமைய மாறி அமைய ஸ்தூலசரீரமும் மாறி அமைகிறது.இவ் விரண்டின் மாற்றங்களுக்கும்அடிப்படையாய்க் காரண சரீரம் இருக்கிறது. அலங்காரமான சப்பரம் ஒன்று இருக்கிறது. வருஷந்தோறும் விழாக்காலங்களில் அதில் கிழிந்து போன பழைய காகிதங்களைக் கிழித்து விட்டுப் புதிய வர்ணக் காகிதங்கள் ஒட்டி அழகுபடுத்து கிறேம். அது அழகாக இருக்கிறது. அந்தப் புதிய அழகுகள் உண்டாகக்காரணமாய்,அடிப் படையாய் மரச்சப்பரம் இருக்கிறது. அதே போல ஜீவன் பிறவிதோறும் அனுபவத்தி ஞல் அதிக அறிவு பெற்ற ஜீவனுகிப் பரிணமித் தில் மேல் நிலைக்குப் போகிறது. புதிய மேற் பிறப்புகளை அடைகிறது. எல்லாவற்றுக்கும் அடிப்படையாய்க் காரணசரீரம் இருக்கிறது. அதே போல எல்லாப் பிறவிகளிலும், எல்லா அவஸ்தைகளிலும் ஜீவன் பாரமார்த்திக சத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கி வருகிறது. பாரமார்த்திக சத்தும் பரமாத்மா வும் ஒன்றே. ஜீவன் கல்பிதம் என்பது ஒரு வியவகாரத்துக்காகச் சொல்லப்பட்ட வாதம். அது ஒருநிலையில் கல்பிதமாகவும் மற்ரெரு நிலையில் பரமாத்மாவாகவும் விளங்குகிறது.கட லில் அலைதோன்றுவதுபோன்றும், சூரியனிடத் திருந்து கோடானு கோடி கிரணங்கள் கிளம்பு வது போன்றும், பரமாத்மாவிடத்திருந்து ஜீவ கோடிகள் தோன்றுகின்றன. அலை கடலுக்கு அன்னியமானதன்று. கிரணம் சூரியனுக்கு அன்னியமானதன்று. அலைக்கு நாமரூபம் இருந்தாலும் அது கடலே. கிரணத்திற்கு நாம ரூபம் இருந்தாலும் அது சூரியனேஆகிறது.

இதைவிட சூக்ஷ்மமான உதாரணம் ஒன்று உள்ளது. அதன் முடிவும் ஆச்சரியமானது.

மஹா ஆகாசம், கட ஆகாசம் உதாரணத்தில் ஆகாசம் ஒரு மாறுதலும் அடையவில்லை. கடம் இருந்த போதும், இல்லாதபோதும் ஆகாசம் ஒரு மாறுதலும் அடையவில்லை. கட ஆகாச மாக அது வடிவு எடுக்கவில்லை. அதேபோன்று பரமாத்மா பிரபஞ்சமாக, ஜீவர்களாக வடிவு எடுக்கவே இல்லை. பழுதை—பாம்பு உதார ணத்தில் பழுதை பாம்பாக வடிவெடுக்கவில்லை. பாம்பு தோற்றம் மாத்திரமே, பிரமையே, மாயையே, கனவு போன்றதே ஆகும். அங்ங னம் பரமாத்மா யாண்டும் தன் சொருப லக்ஷ ணத்தில் நிலைத்திருக்கிறது. அது ஆதி அந்த மற்றது, பிறப்பு இறப்பு அற்றது, மாறுதலற் றது, தேய்வு வளர்ச்சி இல்லாதது, கால தேச வர்த்தமானத்தைக் கடந்தது. ஆயினும் வியவகாரிகசத்தில் நாம் உழன்று தவிப்பது நமக்குப் பிரத்யக்ஷம். அதைக் கல்பிதம் என்றோ மாயை என்றோ தள்ள முடியாத பலத்த உணர்வு வாய்ந்தவர்களாக இருக் கிறோம். எவ்வளவு உதாரணம் சொன்னாலும் நமது அறிவின் அளவில் அவற்றைச் சரிதான் என ஒப்புக்கொள்கிறோமானாலும் பாம்பு, புலியைப் பார்த்து நமக்குப் பயம் உண்டா கிறது. இன்பதுன்பங்களில் மனம் தோய்ந்து போகிறது. கோபதாபங்களில் மனம் வீழ்ச்சி யடைந்து விடுகிறது. இது என்ன கீழான நிலைமை! இதை மாற்றி அமைக்கும் முயற்சியே ஆத்ம சாதனம் எனப்படுகிறது. ஸ்திதப் பிரக்ஞன், யோகி, ஞானி ஆவாயாக என்று வேதம் முரசறைகிறது. கடவுள் ஒருவரிடத்தி லேயே மனது முழுவதையும் ஈடுபடுத்துவாயாக என்று புராணம் பகருகிறது.

கனவு கண்டு கொண்டிருக்கும் நிலையில் கனவை எப்படிப் பொய் என்று தெரிந்து கொள்ள முடியாதோ அப்படி அவஸ்தாத்ரயத் தில் இருக்கும் பரியந்தம் இவற்றுக்கு விடை கிடைக்காது. ஆனால் ஆராயவும், புரிந்து கொள்ளவும் இயலும். இது கடவுளின் அருள் ஆகிறது. துரிய நிலையை மனது எட்டினால் அன்றி இதற்கு விடை கிடைக்காது. ஆயினும் இந்த மாயையிலும் ஒரு ஒழுங்குப்பாடு இருக் கிறது. ஜலத்தில் அலை உண்டாகிறது. அலை யில் நுரைதோன்றுகிறது. அதுபோலவே பாரமார்த்திக ஜீவனிடத்தில் வியவஹாரிக ஜீவனும், வியவஹாரிக ஜீவனிடத்தில் பிராதி பாசிகனும் கல்பிதம், தோன்றிக்கொண்டிருக் கிறது. ஜலமேதான் அலையாகவும் நுரையாக வும் தோன்றுகிறதேதவிர ஜலத்துக்கு அன் னியமாக அலையோ நுரையோ கிடையாது. பாரமார்த்திகப் பொருளுக்கு அன்னியமாக வியவஹாரிக ஜீவனும், பிராதிபாசிக ஜீவனும் இல்லை. பாரமார்த்திகப் பொருள்தான் மற்ற இரு ஜீவர்களாகவும் தோன்றுகிறது. சுவை, தண்மை ஆகிய நீரின் குணங்கள் அலையிலும் நுரையிலும் வெளிப்படுகின்றன. அது போலவே பாரமார்த்திகப் பொருளின் லக்ஷ ணங்களாகிய **சத்சித் ஆனந்தம்** வியவஹாரிக ஜீவனிடத்தும் பிராதிபாசிக ஜீவனிடத்தும் தென்படுகின்றன. ஆகையால் இத்தனை ஜீவ பேதங்களில் மிளிரும் ஜீவன் பரமாத்மாவே என்று உபநிஷதங்கள் தீர்மானிக்கின்றன. பிருஹதாரண்யக உபநிஷதத்தில் **நேதி,நேதி** (இதுவன்று, இதுவன்று) என்கிற நிவிருத்தி மார்க்கம் மூலம் ஆத்மா எத்தகையது என்று விளக்கப்படுகிறது, ஸ்தாபிக்கப்படுகிறது. இப்பிரபஞ்சப் பொருள்கள், ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், பஞ்சகோசங்கள் இவைகளை யெல்லாம் விலக்கிவிட்டு இவைகளையெல்லாம் உடைத்திருக்கிற, இவைகளுக்கெல்லாம் உயி ரூட்டுகிறபொருளை ஆத்மா என்று ஊர்ஜித மாக விளக்குகிறார்கள். ரமண மஹரிஷிகளின் 'நான் யார்' என்கிற ஆராய்ச்சி ஆத்மாவே நான் என்று நிலைநாட்டுகிறது. எல்லா உப நிஷதங்களின் முடிவும் இதுவே. ஆத்மாவே பிரபஞ்சமாக ஜீவகோடிகளாக, ஜடப்பொரு ளாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பிரம்மத் துக்கு அன்னியமானது ஒன்றுமில்லை. இதைச் சிந்தித்தலும், அனுபூதியில் உணர்தலும் மானுட வாழ்க்கையின் லக்ஷியமாகும். பிரம் மத்தை உணர்ந்தவன் பிரம்மமே ஆகிறான். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன் றும் சாதனத்தில் இடம் பெறவேண்டும். இறை வனுடைய மகிமையைக் கேட்டல் சிரவணம், அவனுடைய மகிமையைச் சிந்தித்தல் மனனம். அவனுடைய மகிமையைத் தெளிவாக உணர் தல் நிதித்தியாசனம். இம்மூன்றின் மூலமாக இறைவனோடு சாதகன் இணக்கம் வைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-103

627. त्रिजगद्वन्द्या த்ரிஜகத்வந்த்யா — மூன்று உலகங்களாலும் வணங்கப்பெறுபவள் என்பது இதன் பொருள்.

மூன்று உலகங்களாவன பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம். இம்மூன்று மண்ணுலகு என்றும், விண்ணுலகு, சுவர்க்கம் என்றும்அல்லது மறுமை என்றும் பெயர் பெறுகின்றன. இம்மூன்றுவிதஉலகங்களிலும் ஜீவாத்மாக்கள் அவரவர் படைத்துள்ள பரிபாகத்திற்கேற்றவாறு உடல் படைத்தவர்களாகிறார்கள். அந்தந்த உடலுக்குப் பொருத்தமான உலகிலும் வசித்து வருகிறார்கள். சரீர பரிபாகம் அடையப் பெறுகிற ஜீவர்கள் மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக்குப் போக வல்லார்களாகிறார்கள். விண்ணுலகில் இருப்பவர்கள் சொர்க்கத்துக்குப் போவது சாத்தியம். சொர்க்க வாசிகள் மூவுலகையும் நீத்துவிட்டுப் பரம்பொருளை அடையவும் முடியும். பரம் பொருளானது புருஷ தத்துவமாகவும், பிரகிருதி தத்துவமாகவும் இலங்கிக்கொண்டிருக்கிறது. இவ்விரண்டு தத்துவங்களுடைய சேர்க்கை நிலையிலிருப்பவள் அன்னை பராசக்தி. அத்தகையவளை மூவுலகிலும் எல்லாவித படித்தரங்களிலும் இருக்கின்ற ஜீவகோடிகள் அறிந்தும் அறியாமலும் அன்னை பராசக்தியையே வழுத்தி வருகின்றன.

கடவுள் வழிபாடு மானுடனுக்குத்தான் சாத்தியம் எனக் கருதுவது போதாது. பரம்பொருளை அடைகிற ஞானம் மானுடனுக்கே வாய்க்கிறது எனப் பகரலாம். ஆனால் பரம்பொருளைப் போற்றும் பாங்கு உயிர்களனைத்துக்கும் சொந்தமானது. உயிர் வாழும் மச்சம் ஒன்றைப் பிடித்து நிலத்தில் போட்டால் அது துள்ளிக் குதித்துப் படாதபாடுபடுகிறது. மீண்டும் நீருக்குள் செல்லுங்கால் அது பரமானந்தமடைகிறது. பொருத்தமான சூழ்நிலையை நாடுவது ஆனந்தத்தின் பொருட்டு. அந்த ஆனந்தத்தை நாடுவதே பரம்பொருள் நாட்டமாகிறது. பரம்பொருளிடத்திருக்கிற ஆனந்தம் மூவுலகங்களிலும்நிலையற்றதாயிருக்கிறது. நிலையற்ற ஆனந்தம் நிலையுற்ற ஆனந்தமாக மாறவேண்டும். அதற்காகவென்றே உயிர்களனைத்தும் சதா முயன்று வருகின்றன. ஆனந்தத்தை நாடுவதும், பரம்பொருளை நாடுவதும் ஒன்றேயாம். ஆனந்தத்தை நாடாத உயிர்வகை எவ்வுலகிலும் இல்லை. ஆனந்தத்தை நாடுவதே அம்பிகை வந்தனையென இயம்பப்பெறுகிறது.

அடுத்தபடியாக ஆங்காங்குள்ள உயிர்வகைகளனைத்தும் தாங்கள் பெற்றுள்ள அறிவைக் கொண்டு திருப்தியடைவதில்லை. தங்களுடைய அறிவைப் பெருக்க அவையாவும் தத்தம் பாங்கில் முயன்று வருகின்றன. அறிவானது பேரறிவாகப் பரிணமிக்குமிடத்து அது சித்சொரூபம் ஆகிறது. அம்பிகை சித்சொரூபம் அல்லது சின்மயீ ஆகவும் இலங்கிவருகிறாள். ஆதலால் அறிவு நாட்டம் படைத்து வருகிற உயிர்வகைகளும் அறிவு மயமான அம்பிகையை வழுத்தி வருகின்றன.

மூன்றாவதாக ஜீவகோடிகளனைத்தும் மரணத்தைத் தவிர்க்கவும் உயிர்வாழ்க்கையை நிலைநாட்டவும் சதா முயன்று வருகின்றன. அவைகள் தங்களை உடல் சொரூபமாக எண்ணிக்கொண்டு நிலையற்ற உடல் வாழ்க்கையில் நிலையுற்ற நித்திய வாழ்வை நாடுகின்றன. ஆனால் உடலோ அழியும் பாங்குடையது. உடல் அழியும்பொழுது தாங்கள் மடிந்து போவதாக எண்ணி வருந்துகின்றன. அந்த வருத்தத்தின் விளைவாக நெடிது நிலைத்திருக்கக் கூடியஉடல் வகைகளை அவைகள் நாடுகின்றன. அங்ஙனம் சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருகின்றன. அவையாவும் கொண்டுள்ள நோக்கம் மரணமில்லாப் பெருநிலையை எய்துதலேயாம். அத்தகைய அழிவற்ற நிலை சத்சொரூபமாகிய ஆத்மாவுக்கே உரியதாகிறது. ஆத்மாவே பரவஸ்து அல்லது பராசக்தி. ஆக உயிர் வாழ்க்கையை நிலைநாட்ட முயலுகிற ஜீவர்களனைவரும் அன்னை பராசக்தியை மறைமுகமாகப் போற்றி வருகின்றன. இங்ஙனம் மூவுலகங்களிலுமுள்ள ஜீவகோடிகள் சத்-சித்-ஆனந்த சொரூபிணியாயிருக்கின்ற அம்பிகையின் விளையாட்டையே அவ்வவைகளுக்கேற்ற முறைகளில் செய்து வருகின்றன. ஆகையால் அம்பிகையானவள் த்ரி ஜகத்வந்த்யா எனப் போற்றப் பெறுகிறாள்.

628. त्रिमूर्ती த்ரிமூர்த்தீ — மும்மூர்த்திகளாக இலங்குபவள் அம்பிகையே என்பது இதன் பொருள்.

பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகியவர்கள் த்ரிமூர்த்திகள் எனப் போற்றப் பெறுகிறார்கள். அத்தகைய திரிமூர்த்திகள் மயமாக இருப்பவள் அம்பிகை.

மும்மூர்த்திகளின் கிருத்தியங்கள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என இயம்பப் பெறுகின்றன. இயற்கையைத் துருவி ஆராய்ந்து பார்ப்போமானால் இந்த மூன்று கிருத்தியங்களும் எல்லாப் படித்தரங்களிலும் ஓயாது நிகழ்ந்து வருவதைக் காண்போம். சிற்றுயிர்கள் பேருயிர்கள் ஆகிய விதவிதமான உயிர் வகைகள் சதா பிறந்து கொண்டே இருக்கின்றன. அப்படி அவைகள் பிறப்பெடுப்பது நான்முகக் கடவுளாகிய பிரம்மதேவனுடைய செயல் எனப் பாகுபடுத்தப்படுகிறது. பிறப்பெடுத்துள்ள உயிர்வகைகள் உடல் வாழ்க்கையைப் பாதுகாத்து வைக்க முயலுகின்றன. உடல் வகைகளைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் உணவு இன்றியமையாதது. உணவோ அந்தந்த உடலுக்கேற்றவாறு பலதரப்பட்டதாக அமைந்திருக்கிறது. பிரபஞ்சத்தில் பூதங்கள் மயமாக அமைந்துள்ள யாவும் வெவ்வேறு உயிர் வகைகளுக்கு உணவாகப் பயன்பட்டு வருகின்றன. ஆக உணவு தேடி உடல் வாழ்க்கையைப் பேணுதல் உயிர்களனைத்துக்கும் பொதுவானது. இச்செயலுக்கு அதிஷ்டான மூர்த்தியாயிருப்பவர் விஷ்ணு. ஆதலால் ஸ்திதி கர்த்தாவென அவர் போற்றப்பெறுகிறார். வளர்ந்துவரும் உடல் நாளடைவில் தேய்கிறது. வாழ்க்கைக்குத் தகுதியற்றதாகிறது. அத்தகைய பழைய உடலங்களை ஒதுக்கித்தள்ளுவது மரணம் என்னும் பெயர் பெற்றுள்ளது. உயிர் வகைகள் அறியாமையினால் மரணத்தை வேண்டாமென்று ஒதுக்க முயன்றாலும் அவை யாவும் மரணத்துக்கே உட்பட்டாக வேண்டும். அச்செயலை இடையறாது நிகழ்த்தி வருபவர் ருத்ரமூர்த்தி. அவர் ஸம்ஹார கர்த்தாவெனப் போற்றப் பெறுகிறார். இயற்கையில் க்ஷணந்தோறும் ஸம்ஹாரம் நிகழ்ந்து வருவதையும் காண்கிறோம். இந்த த்ரிமூர்த்திகள் ஒரே பரம்பொருளின் மூவிதத் தோற்றங்களாம். மும்மூர்த்திகளின் செயல்கள் இயற்கையின் நடைமுறைக்கு இன்றியமையாதவைகள் ஆகின்றன. இந்த மூன்றுவிதக் கிருத்தியங்களின் வாயிலாகவே உயிர் வகைகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. அன்னை பராசக்தி தானே மும்மூர்த்திகள் மயமாக இலங்குகின்றாள். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய முத்தொழில்கள் அவளுடைய கிருத்தியங்களாகின்றன. இக்கோட்பாட்டை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் ஆத்ம சாதகர்கள் இம்மூவிதக் கிருத்தியங்களுக்கும் அவைகளை நடாத்தி வருகிற திரிமூர்த்திகளுக்கும் தக்க வந்தனை வழிபாடுகள் செய்கின்றார்கள். இந்த வழிபாட்டின் வாயிலாக அம்பிகையின் வழிபாடே நடைபெற்று வருகிறது என அவர்கள் உணர்ந்திருப்பது அவசியமாகிறது.

த்ரிமூர்த்தி என்னும் பெயருக்குத் தத்துவ ஆராய்ச்சி முறையில் வேறுபல வியாக்யானங்கள் கொடுப்பதும் அவசியமாகிறது. திரிமூர்த்தி என்னும் பெயர் படைத்துள்ள அம்பிகையானவள் மூன்று வயது படைத்துள்ள பாலாவாக இலங்குகிறாள் என்பது ஒரு பொருள். வழிபாட்டுக்கு அத்தகைய பாலா முழுதும் பொருத்தமானவள். நாம் உலகில் காண்கின்ற மூன்று வயதுச் சிறுமிகள் அகங்காரத்தைத் தோற்றத்துக்குக் கொண்டுவராத சித் சொரூபிணிகளாகவும் ஆனந்தமயிகளாகவும் இலங்குகின்றனர். அக்குழந்தைகளை அன்னையின் சொரூபங்களாகக் கருதி போற்றுவது நல்ல வழிபாடு ஆகிறது.

சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்கள் மயமாக இலங்குபவளும் அம்பிகையே. மூன்று குணங்களுக்கும் மூன்று நிறங்களிருக்கின்றன. சத்துவத்தின் நிறம் வெண்மை, ரஜஸின் நிறம் சிவப்பு, தமோகுணத்தின் நிறம் கருமை. உலகில் காண்கின்ற நிறங்களனைத்தும் இம்மூவித நிறங்களின் பலப்பல தோற்றங்களாம். சிருஷ்டிக்கு இன்றியமையாத குணம் ரஜஸ், ஸ்திதிக்கு இன்றியமையாத குணம் சத்வம். ஸம்ஹாரத்துக்குத் தேவையாயிருக்கிற குணம் கருப்பு. இந்த மூன்று குணங்களுக்கும் அதிஷ்டான தெய்வங்களாக இலங்கிக் கொண்டிருப்பவர்கள் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்பது கோட்பாடு.

இனி அம்பிகையின் சொருபங்களாகவே திரிமூர்த்தி என்னும் சொல் வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரி ஆகிய தேவிமார்கள் குறிக்கப் பெறுகிறார்கள். ஜீவாத்மாவினிடத்து இருக்கும் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி சொரு பிணியாகவும் அம்பிகை இலங்குகின்றாள்.

629. त्रिदशेश्वरी த்ரிதசேச்வரீ— தேவர்களுக்கெல்லாம் ஈசுவரியாக இருப்பவள் என்பது இதன் பொருள்.

வாழ்க்கைமுறையில் தேவர்களும் நரர்களும் பிரித்துப் பாகுபடுத்தப் படுகின்றனர். நரர்களுக்குத் தோன்றுதல், வளருதல், இருத்தல், தேய்தல், மறைதல் ஆகிய ஐந்து கூறுகள் இருக்கின்றன. தேவர்களுக்கோ தோன்றுதல், வளருதல், இருத்தல் ஆகிய மூன்று கூறுகள்தான் இருக்கின்றன. இக் காரணத்தை முன்னிட்டு த்ரிதஸர்கள் என்று தேவர்கள் அழைக்கப்பெறுகின்றனர். அம்பிகை அவர்களுக்கு ஈசுவரியாக இலங்குகின்றாள். தேவர்களுக்கு மடிதல் அல்லது மரணத்துக்கு உட்படுதல் இல்லையென்று உபசாரத்துக்காகச் சொல்லப்படுகிறது. நரர்களோடு சீர்தூக்கிப் பார்க்குமிடத்துத் தேவர்கள் பலயுகங்களாகத் திட்ப மாகவும், மரணமில்லாதவர்களாகவும் வாழ்ந்து வருகிறார்கள். மரணம் இல்லாது போவது முக்தர்களின் நிலையாகும். தேவர்கள் அந்நிலையை அடையப் பெற்றவர்கள் அல்லர். புண்ணிய கருமத்தின் விளைவாகிய இன்பத்தை நெடுநாள் அனுபவித்துக் கொண்டிருப்பதற்குத் தேவலோகம் அமைந்திருக்கிறது. மானுடனொருவனைக் குறித்துச் 'சிரஞ்சீவியாக வாழ்ந்திரு' என்று ஆசிர்வதிப்பது வழக்கம். நெடுங்காலம் உயிரோடு இருப்பாயாக என்பது இதன் பொருள். ஆனால் மனிதன் விரைவில் அல்லது நாளடைவில் மரணத்துக்கு ஆளாக வேண்டும். அதைத் தவிர்க்க முடியாது. நரர்கள் பல வருஷங்கள் வாழ்ந்திருப்பதுபோன்று தேவர்கள் பலயுகங்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஆதலால் அவர்கள் அமரர் அல்லது சாகாதவர்கள் என இயம்பப்பெறுகின்றனர். பலயுகங்களுக்குப் பிறகு த்ரிதஸையை நீத்து ஞானபரிபாகம்அடைதல் பொருட்டு அவர்கள் மக்களாகப் பிறக்கவேண்டும். சுகஜீவனம் பண்ணுகிற தேவர்கள் விஷயசுகத்துக்கே அருகதை உடையவர்களாகிறார்கள். ஆனால் ஞான விசாரமோ, பக்தியைப் பெருக்குதலோ அவர்களுக்கு வாய்ப்பதில்லை. அந்த அளவில் திரிதஸர்கள் அல்லது தேவர்கள் மானுடர்க்கு ஒப்பானவர்கள் ஆகமாட்டார்கள். தேவலோகத்திலிருக்கும் விண்ணவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று இயம்பப் பெறுகின்றனர். எண்ணிக்கையால் அவர்கள் கணக்கற்றவர்கள் என்பது அதன் பொருள். அத்தகைய தேவர்களுக்கு அம்பிகை ஈசுவரியாக இலங்கி வருகிறாள்.

த்ரிதஸா அல்லது மூன்று நிலை என்பது ஜாக்ரத, சொப்பன, சுஷுப்தியைக்குறிக்கிறது. இந்த மூன்று அவஸ்தை மானுடர் போன்ற ஜீவாத்மாக்களுக்குப் பொதுவானது. நனவு, கனவு, உறக்கம் என இந்த மூன்று நிலைகள் இயம்பப் பெறுகின்றன. இந்த மூன்று நிலைகளுக்கும் அதிஷ்டான தெய்வமாக அமைந்திருப்பவள் அம்பிகை. இம் மூன்று நிலைகள் அவஸ்தாத்ரயம் எனப் பெயர் பெறுகின்றன. மானுடன் ஒருவன் நனவில் அல்லது ஜாக்ரதாவஸ்தையில் இருக்கிறபொழுது உலகத்தோடு ஒரு போக்கில் இணக்கம் கொள்ளுகிறான். கனவு நிலையை அவன் அடைகிறபொழுது இவ்வுலகம் அவனைவிட்டு மறைந்து போகிறது. கனவிலே தன் தன்மைக்கு ஏற்றுள்ள உலகம் ஒன்றை அவன் தனக்குத்தானே சிருஷ்டித்துக் கொள்கிறான். நனவிலே செல்வந்தனாகவும், சுக ஜீவனம் பண்ணுபவனாகவும் இருப்பவன் கனவிலே ஏழையாகவும், துன்பத்துக்கு ஆளானவனாகவும் மாறமுடியும். ஒரு நிமிஷத்தில் நனவு உலகினின்று கனவு உலகுக்குப் போக மனிதனுக்குச் சாத்தியமாகிறது. பிறகு அயர்ந்த உறக்கத்தில் இவ்வித உலகும் இல்லை. ஒரே பிரளயத்தில் அவன் ஒடுங்கியிருக்கிறான். இந்த மூன்று அவஸ்தைகளைக் குறித்துத் தத்துவவிசாரம் செய்கிறவர்கள் ஆராய்ச்சி பண்ணுகின்றனர். அந்த ஆராய்ச்சியானது முறையாக நடைபெறுமிடத்து மூன்று அவஸ்தைகளில் மூன்று ஜீவர்கள் வடிவெடுப்பதில்லை. ஒரே ஜீவன் மூன்று அவஸ்தைகளிலும் நாள் தோறும் மாறியமைகின்றான். அங்ஙனம் த்ரிதஸைக்குட்பட்ட ஜீவர்களுக்கு இறைவி என்பதை த்ரிதசேச்வரீ என்னும் நாமம் குறிக்கிறது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (140) ***அவதார புருஷர்கள் நோய்க்கு ஆளாகிறார்களா ?***

நோய் எப்படி வருகிறது என்பதை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். பொருந்தாத உணவு, பொருந்தாத வாழ்க்கை முறை, பொருந்தாத சூழ்நிலை ஆகியவைகளை முன்னிட்டு உடல் நோய்க்கு ஆளாகிறது. பிராரப்த கர்மத்தை முன்னிட்டு மனிதனுக்கு நோய் வருகிறது. முதலில் சொல்லிய காரணங்களைத் தவிர்த்து மனிதன் நோய்வாய்ப்படாதிருக்கலாம். ஆனால் பழவினைப்பயனாக வருகிற நோயைத் தவிர்க்க முடியாது.

அவதார புருஷர்கள் வினைப்பயனின் விளைவாக உடல் எடுப்பவர்கள் அல்லர். பிறவிப் பிணியில் கட்டுண்டிருக்கிற ஜீவாத்மாக்களே பழவினைகளைப் பூர்த்தி பண்ணுவதற்கும் புதிய வினைகளைப் பெருக்குவதற்கும் பிறவி எடுக்கின்றனர். அவதார புருஷர்கள் ஈசுவரனுடைய தோற்றம். மாயாசக்தியின் துணைகொண்டு உடலை வேண்டுமென்றே அவர்கள் தங்களுக்குத் தாங்களே உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். மக்களை நல்வழியில் நடாத்திக் காட்டுவதற்கே அவர்கள் பிறப்பெடுக்கின்றனர். எவ்வினைக்கும் அவர்கள் அடிமைகளல்லர். வேண்டுமென்கின்ற அறச் செயல்களில் ஈடுபட்டு மக்களை நல்வழியில் நடாத்துகின்றனர். பிராரப்த கர்மம் அவதார மூர்த்திகளுக்கு இல்லை. அவர்கள் எடுத்துள்ள சரீரம் பஞ்ச பூதங்களால் ஆயிருப்பதால் சீதம் அல்லது உஷ்ணத்தை முன்னிட்டு அவர்களுடைய உடல் நோயால் பாதிக்கப்படலாம். ஆனால் அவர்கள் அதிவிரைவில் அந்நோயை மீளுகின்றனர். யோகபலத்தால் ஒரு சிலர்க்குச் சூழ்நிலையைக் கடந்த நிலையிலிருக்க முடியும். அன்னவர்களுக்கு நோய் வாராது தடுக்க இயலும். ஹடயோகத்தில் ஈடுபடுகிற சாதாரண ஜீவாத்மாக்களும் நோய் வாராது தடுக்க வல்லவர்களாகிறார்கள். பிராரப்த கர்மத்தின் வேகத்தையும் தணிக்க அவர்களுக்கு இயலுகிறது.

அவதாரபுருஷர்களுடைய மகிமையை அறிந்துகொள்ளுவதற்கு அவர்களுடைய சரீரத்தின் ஆரோக்கியநிலை முக்கியமான அறிகுறியாகாது. நல்லானொருவன் அணிந்திருக்கும் உடையின்மீது அழுக்குப்படிவது சாத்தியம். அப்படி உடை அழுக்குப் படிந்தாலும் நல்லானுடைய நலனுக்குக் கேடு ஒன்றுமில்லை. அதே விதத்தில் அவதாரமூர்த்திகளுடைய அறச் செயல் உடல் உபாதியை முன்னிட்டுத் தடைபடுவது இல்லை. ஏவலின் வாயிலாக எந்த மனிதன் மீதும் நோயைத் தோற்றுவிக்கலாம். அவதாரமூர்த்திகளுடைய உடல் அந்த விதிக்கு விலக்காகாது. ஆதிசங்கரர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் போன்றவர்கள் ஏவலின் வாயிலாக அவர்களின் மீது சுமத்தப்பெற்ற நோய்க்கு ஆளானார்கள். ஆனால் அதை முன்னிட்டுஅவர்களுடைய சொரூபமோ, தர்மத்தை நிலைநாட்டும் செயலோ எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. கேடு போன்று தென்பட்ட ஏவல் நோய்கள் அவர்களுக்கு மறைமுகமாக நலனை உண்டுபண்ணுபவைகள் ஆயின. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஒரு வேடனுடைய அம்புக்கு இலக்காகி யோகநிலையிலிருந்து உடலை உகுத்தார். அத்தகைய நிகழ்ச்சிக்கு அவர் ஆள் ஆனது எந்த விருஷ்ணிவம்சத்தில் அவர் பிறந்தாரோ அந்த விருஷ்ணி வம்சத்திற்கு வந்த சாபக்கேடாக மற்ற விருஷ்ணிகள் மடிந்து போனது போன்று அவரும் உடலை உகுத்தார். அத்தகையவினை எவ்விதத்திலும் அவருடைய அவதார மகிமையைப் பாதிக்கமாட்டாது.

தீவிரமாக ஆத்மசாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு உடலைப் பிணிக்கும் நோயை சகித்திருப்பதும் ஒரு சாதனமாகிறது. தீர்க்கதரிசிகளாக இருக்கிறவர்கள் உடலுக்கு உண்டாகிற நோய்களைப் பொருள்படுத்துவதில்லை. உலக இன்ப துன்பங்களில் கட்டுப்படாதிருப்பது போன்று உடலைப் பிடித்துள்ள நோய்க்கும் ஆத்ம சொரூபங்களாயுள்ள அவர்கள் ஆளாவதில்லை. உடலைப் பிடித்துள்ள நோயைச் சாட்சியாயிருந்துகொண்டு அவர்கள் பார்த்து வருகிறார்கள். ஆக நோயின் கொடுமையைப் பெருமிதப்படுத்துவது அவர்களுடைய செயலன்று. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச

ருக்கு வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் தொண்டையில் புற்றுநோய் உண்டாகி அவருடைய உடல் முடிவடைந்தது. ஆனல் அச் செயல் இரண்டு பெரிய கோட்பாடுகளுக்கு உறுதுணேயாயிற்று. நோய்வாய்ப்படுதலிலும் நலன் உண்டு என்னும் கோட்பாடு அவருடைய ஜீவிதத்தின்வாயிலாகவெளியாகிறது. நோய்வாய்ப்படுதலுக்கிடையில் உடல் உணர்வைத் தாண்டி சமாதி நிலே எய்துவது அவருக்கு வழக்கம்போல் இருந்து வந்தது. நல்ல நிலேயிலிருந்த உடலேத் தமது அறச் செயலுக்கு அவர் பயன்படுத்தியது போன்று நோய்வாய்ப்பட்டிருந்த அதே உடலேயும் கடைசி வரையில் அறச் செயலுக்கே பயன்படுத்தினர். நோய்வாய்ப்படுவது உடலின் கூறு என்றும், ஆத்ம சொரூபம் அதனல் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லே என்றும் அவர்களுடைய நோய்வாய்ப்பட்ட ஜீவிதம் உலகத்தவர்களுக்குப் புகட்டுவதாயிற்று, இரண்டாவதாக அவர்களுடைய ஆத்மீக இயக்கம் உருவெடுப்பதற்கு அவரைப் பிடித்திருந்த நோய் நன்கு பயன்பட்டது. அந்நிலேயிலிருந்த அவருக்குப் பணிவிடை செய்வதற்காகச் சிஷ்யர்கள் தங்களுக்கிடையிலே முறை வைத்துக்கொண்டு அல்லும் பகலும் பாடுபட்டனர். அவ்விதத்தில் தான் அவருடைய அடியார்கள் ஓர் அருள் சங்கமாக வடிவெடுக்கலாயினர். எனவே அவதார புருஷர்களும் பரஞானிகளும் நோய்வாய்ப்படுவது உடல் அளவிலேயாம். அவர்களுடைய சொருபத்தை நோய் எந்தவிதத்திலும் வந்து தாக்குவதில்லே. இதுவே நாம் அறிந்துகொள்ளவேண்டிய பாடமாகிறது.

கேள்வி: (141) **குருவிடமிருந்து தீட்சை பெற்றுக்கொண்டாலொழிய ஆத்ம சாதகனெருவன் சாதனத்தில் முன்னேற்றம் அடைவதில்லே என்னும் ஐதிகம் ஒன்று உள்ளது. அது உண்மைதானு?**

குரு சிஷ்ய இணக்கம் சிஷ்யனுக்குப் பெரு நன்மைஉண்டுபண்ணுகிறது என்பதுஉண்மை. பக்தி சாஸ்திரத்தில் ஒரு பகுதி தக்க குருவிடமிருந்து மந்திர தீட்சை பெறுவதை மிகவும் சிலாகித்துக் கூறுகிறது. ஆனல் உலகிலுள்ள மக்கள் எல்லார்க்கும் அருள்குரு ஒருவருடைய அனுக்கிரஹம் வாய்ப்பதில்லே. அதனல் அவர்கள் சாதனத்தில் முன்னேற்றமடைய மாட்டார்கள் என்னும் நம்பிக்கை ஆதரவற்றது.

கிறிஸ்தவ மதத்தில் கோட்பாடு ஒன்று இருக்கிறது.கிறிஸ்து மதத்தை ஏற்று கிறிஸ்து நாதரை ரட்சகர் என்று நம்பாதவர்களெல்லாம் செத்த பிறகு நரகத்தில் இடர்ப்படுவார்கள் என்பது அம்மதக் கோட்பாடுகளுள் ஒன்ருகும். தத்துவத்துக்கோ,யுக்திக்கோ அக்கோட்பாடு ஒவ்வாது. அதே விதத்தில் குரு ஒருவரிடமிருந்து சிஷ்யன் ஒருவன் தீட்சை பெருவிட்டால் அவன் சாதனத்தில் முன்னேற்றமடைவதில்லே என்னும் கொள்கையும் ஆதரவற்றது.

நல்ல கிருஷிகன் ஒருவன் ஒரு பூமியைப் பார்த்தால் அதில் இன்னதானியம் நன்கு வளரும் எனக் கண்டு கொள்ளுகிருன். அதே விதத்தில்குரு ஸ்தானத்துக்குத் தகுதி உடைய மூர்த்தி ஒருவர் தீட்சை பெறவிருக்கும் சாதகனுடைய மன அமைப்பைப் பற்றி முதலில் தியானம் பண்ணுகிருர்.அந்தத்தியானுவஸ்தையில் சாதகனுடைய மன அமைப்பு எத்தகையதென்பதை அறிய வருகிருர். அவனுக்கேற்ற மந்திரத்தை அவர் உபதேசம் செய்கிருர். இதுவே பொருத்தமான தீட்சை ஆகிறது. ஆனல் இத்தகைய அருள் வல்லமை வாய்த்துள்ள குருமார்கள் கிடைப்பது அரிதிலும் அரிது. சமயகுருமார்கள் அவரவர் சமயத்துக்குரிய மந்திரத்தையே தம்மிடம் வரும் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கிருர். பிரசார குருமார்களுள் சாதகர்களேச் சன்மார்க்கத்தில்செலுத்தும் நோக்க முடையவர்களாயிருக்கிருர்கள். அன்னவர்களிடம் தீட்சை பெறுவதில் தோஷமில்லே. இனிவருமானத்துக்காகவோ,கீர்த்திக்காகவோமுன்வருகிறபோலிகுருமார்களே குறித்துத் தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஆத்ம சாதகன் ஒருவன்பொதுவாகக்குருவை நாடிச் செல்லலாகாது. இறைவனுடைய அருளேயே அவன் நாடியிருக்கவேண்டும். யார் யாருக்குக் குரு? ஈசுவரன் ஒருவரே ஆத்ம சாதகர் அனேவருக்கும் குரு ஆகிருர் எனப் பரமஹம்சதேவர் பகர்ந்துள்ளார். இக்கோட்பாட்டுக்கு ஒப்ப ஆத்ம சாதகன் தெய்வத்தின் மீது விசுவாசம் வைத்து ஆழ்ந்து சாதனத்தில் ஈடுபடலாம். குரு ஒருவரின் துணேயில்லாமலேயே பலர் பரத்தினே அடைந்துள்ளனர்.

நல்வாழ்வுக்கான நெறிகள்

(சுவாமி ஆத்மானந்தர்)

நீ மற்றவர்களோடு இணங்கியும், ஒற்றுமையுடனும் இருந்து மனவமைதியோடு வாழ வேண்டுமாகில் உன்னை நீ தியாகம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். தியாகம்தான் மனிதனை மேலோனாக்குகிறது. சுயநலமுள்ளவன் பிறர் நலனைப்பற்றிக் கவலைப்பட மாட்டான். அறியாமையும், ஆசையும்தான் சுயநலத்திற்கு அடிப்படை. நீ சுயநலத்தினின்று விடுபட வேண்டுமாயின் உன்னிடத்துள்ள அறியாமையையும், ஆசையையும் அகற்ற வேண்டும். நான் எனது என்பனவற்றிலிருந்துதான்வேற்றுமைகளனைத்தும் வடிவெடுக்கின்றன. தன்னையும் பிறரையும் வேற்றுமைப்படுத்துவது அக்ஞானம். மற்றவர்களிடத்திருந்து நம்மைத் தனியாகப் பிரிக்கும்பொழுதெல்லாம் நாம் சிறுமையடைகின்றோம். நம் உள்ளம் சுருங்குகிறது. உயிர்கள் அனைத்துடனும் நம்மை இணைத்துப் பார்க்கும் பொழுதெல்லாம் நாம் பெருமையடைகின்றோம். நம்உள்ளம் விரிவடைகின்றது. சுருங்குதல் சாவுக்கு நிகர்; விரிவடைதல்தான் வாழ்வதற்கு அறிகுறி. உன்னிடத்துள்ள அக்ஞானத்தை அகற்று; மனத்தகத்துக் குடிகொண்டுள்ள ஆசையென்னும் பேயை ஓட்டு; நிராசையில் நிலைத்திரு; அனைவரையும் உன்னைப்போலவே நேசி; அனைவருடனும் சமாதானமாக வாழ். அமைதியும் பொறுமையும்தான் உன்னைப் பாரமார்த்திக வாழ்வில் மேல்நிலைக்கு இட்டுச் செல்லும். பரம்பொருள் நாட்டம் மனிதனுக்கு எளிதில் வந்து வாய்ப்பதில்லை. பாரமார்த்திக வாழ்வில் நிலைத்திருத்தல் என்பது அவ்வளவு எளிதானதன்று. உலகைத் துறந்து சந்நியாசம் மேற்கொள்வது சாதாரண செயலன்று. ஒரு ஆஸ்ரமத்தில் சேர்ந்து சந்நியாசம் மேற்கொண்டு வாழ்வு முழுதும் எந்தவிதமான குற்றம்குறைகளும் இன்றி நடந்துகொள்ளுவது எளிதானதன்று. வெட்ட வெட்டத் தளிர்த்து வருவது அரச மரத்தின் இயல்பு. அதுபோன்று அகங்காரமும் மனிதனிடத்து அடிக்கடி தலையெடுக்கின்றது. மற்றவர்களோடு ஒத்துப்போக அது மறுக்கிறது. பிறருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை இழிவென மனது கருதுகிறது. விழிப்புடனில்லாத ஆத்மசாதகன் இத்தகைய நேரங்களிலெல்லாம் அகங்காரத்தை வளரவிட்டுத் தவறுதல்களுக்கு உள்ளாகிவிடுவான். பெரியோர்களிடத்து முறைதவறி நடந்துகொள்ளுவான். நல்ல ஆஸ்ரமம் ஒன்றில் அதன் சட்டதிட்டங்களுக்குட்பட்டு ஆத்ம சாதனையில் ஈடுபட்டு வாழ்நாளைக் கழிப்பவன் பாக்கியவான். அவன் பாரமார்த்திக வாழ்வில் மேல்நிலையை எய்துவான். அத்தகைய ஆஸ்ரமம் ஒன்றில் நீவாழவேண்டுமெனில் உன் உள்ளத்திலிருந்து உலகப்பற்றை ஒழித்துவிட வேண்டும். இவ்வுலகில் நீ ஒரு வழிபோக்கனைப்போல வாழ்ந்திருக்க வேண்டும். நெடுந்தொலைவிலுள்ள ஒரு ஊருக்குப் போகும் வழிப்போக்கன் இராத்தங்குதற்பொருட்டும், இளைப்பாறுதல் பொருட்டும் இடையிடையே பல ஊர்களில் தங்கிச் செல்லுகிறான். ஆனால் அதற்கிடையில் அவன் எந்த ஊரிலும் பற்றுதல் வைப்பதில்லை. அவனுடைய குறியெல்லாம் சொந்த ஊரையே சார்ந்திருக்கிறது. சாதகன் ஒருவன் அந்த வழிப்போக்கனது மனநிலையைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வுலகம் என்பது நமக்கு நிலைத்த இடமன்று. இது நமக்கு ஒரு தங்குமிடம்தான். நாம் அடைய வேண்டியது பரம்பொருள். பரம்பொருளை நோக்கிச் செல்லும் பாதையில் கொஞ்ச நாட்கள் இவ்வுலகில் தங்கியிருக்கின்றோம். பின்னர் இவ்வுலகை விட்டுச் சென்றுவிடுகின்றோம். எனவே இவ்வுலகில் நாம் பற்றுதல் வைக்கலாகாது. ஆத்மசாதனைபுரிய விரும்பும் ஒருவன் துறவியைப் போன்று வாழவேண்டும். உலகப்பற்று அவனுள்ளத்தில் அணுவளவேனும் இருத்தலாகாது. உலகப்பற்றில் உழல்பவர்கள் பொன்னுக்கும், பொருளுக்கும், காமத்துக்கும் ஆசைப்பட்டுப் பைத்தியம்பிடித்து அலைவதைப் போன்று சாதகன் இறைவனுக்காகப் பைத்தியம் பிடித்தலையவேண்டும். "அமுதால் உன்னைப்பெறலாமே" என்பது ஆப்த வாக்கியம்.

மனிதன் அணிகின்ற ஆடை அணிகலன்களுக்கேற்ப அவனது மனநிலை மாறியமைகிறது. காலில் பூட்சு போட்டுக் கொள்கிறவன் மாடிப்படி ஏறுகையில் சீட்டியடித்துக் கொண்டு ஏறுகிருன். கையில் பேனு வைத்திருப்பவன் கண்ட கண்ட காகிதங்களிலெல்லாம் கிறுக்குகிருன். கருப்புநிற ஆடைகள் மனிதனுக்குக் காம விகாரங்களையும், சிவப்பு நிற ஆடைகள் அகங்காரத்தையும், வெள்ளை நிற ஆடைகள் சத்துவ குணத்தையும் வளர்க்கின்றன. இவையெல்லாம் ஓரளவுதான் உண்மையெனினும் இதில் உண்மையில்லாமலுமில்லை. ஆனல், அணிகின்ற ஆடையையே மனிதன் பெரிதாகக் கருதலாகாது. காவியுடை சந்நியாசிக்குரியது. ஆனல், காவியுடை அணிந்ததனல் மட்டும் ஒருவன் உண்மையான சந்நியாசியாகிவிட மாட்டான். பரிசுத்தமான வாழ்வும், பற்றற்ற பரிசுத்த இதயமும், ஒழுங்கான சாதனையும் உடையவனே உண்மையான சந்நியாசியாவான்.

கடவுள் நாட்டம் ஒன்றிலேயே முழுமனதையும் ஈடுபடுத்தி ஆத்மசாதனையில் ஈடுபடுபவன்தான் சாந்தியடைவான். அதற்குமாருக உலகப் பொருட்களை நாடித்திரிபவன் இடையூறும் துன்பமுமே அடையப்பெறுவான். அனைவரிடத்திலும் அன்பும் பணிவும் உடையவன் சாந்தியில் நிலைத்திருப்பான்.

ஆத்மசாதகனுகிய நீ பட்டம் பதவிகளையோ, பேர் புகழையோ விரும்பலாகாது. அதிகாரம் செலுத்தவேண்டும் என்ற ஆசை எல்லா மாந்தரது மனத்தகத்தும் மண்டிக்கிடக்கிறது. பதவிமோகம் பாரமார்த்திக வாழ்விற்குத் தகாது. ஆதலால், நீ அதிகார ஆசைகொள்ளாதே. ஆட்சிசெலுத்துவதற்கன்று, தொண்டு செய்யப் பிறந்துள்ளாய் என்று நினைத்துக் கொள். இடையருது தொண்டு செய். தொண்டும் துறவுமே உனது வாழ்வின் லக்ஷியமாகத் திகழட்டும். காலத்தை வீணுக்கலாகாது. வீண்பேச்சுப் பேசிப் பொழுதைப் போக்கடிக்காதே. ஆன்மீக வாழ்விற்குச் சோம்பல் அறவே உதவாது. மனிதவாழ்வின் முன்னேற்றத்திற்குப் பெரிய முட்டுக்கட்டையாய் இருப்பது சோம்பல்.

''குடியென்னும் குன்ரு விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்''

என்பது மறைமொழி. ''காணிச் சோம்பல் கோடி நஷ்டம்'' என்பது பழமொழி. சோம்பலை உதறிவிட்டுச் சிங்கம் போன்று வீறுகொண்டெழு. சோராது பாடுபடத்தயாராயிரு. உயிர் வாழ்வது உழைப்பதற்காகவே. செயல்புரியாதவன் பிணத்துக்கு நிகரானவன். ''வினையே ஆடவர்க்குயிரே'' என்பது கோட்பாடு. பொன்னை உலையிலிட்டுப் பரீக்ஷிப்பதுபோல் உன்னை நீ பரீக்ஷித்துப்பார். வாழ்வில் வருகின்ற துன்ப துயரங்கள் சோதனைகள் நம்மைப் பரீக்ஷிக்க வந்தவைகளேயாம். ஆண்டவன் பொருட்டு அனைத்தையும் தியாகம் செய்கிறவன் எல்லாவிதப் பரீக்ஷைகளிலும் வெற்றி பெறுகிருன். ஆண்டவனுக்காக அனைத்தையும் அர்ப்பணிப்பவன் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவனுகின்ருன்.

உண்மையான சாதகன் யாண்டும் கடவுள் நாட்டத்திலேயே ஊறியிருப்பான். ஆத்மசாதனை யென்பது ஜீவபோதத்தை ஒழிக்கமுயலுதலேயாம். யான்எனது என்னும் அகங்கார மமகாரங்களை அடியோடு அழித்துவிடவேண்டும். வாழ்ந்திருக்கும்போதே இறந்தவன்போன்று இருக்கவேண்டும். உடல் உணர்வை அறவே ஒழித்துவிடவேண்டும். இதில்தான் உண்மையான பாரமார்த்திக வாழ்வு அடங்கியிருக்கிறது. ஆண்டவன் தூய்மையே வடிவெடுத்தவன். அசுத்தமான இடத்தில் அவன் குடிகொள்ளமாட்டான். நமது இதயத்தை ஆண்டவன் உறையும் கோயிலாக்க வேண்டும். ஆண்டவனைப்போன்று நமது இதயமும் தூய்மையானலன்றி அதில் அவன் குடியிருக்கச் சம்மதியான். பரிசுத்தமான இதயத்தையும், மாருத பக்தியையும் அருளுமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்க வேண்டும். உனது பிரார்த்தனை எவ்வளவுக்கெவ்வளவு முழுமனதோடுகூடியதாக இருக்கிறதோ, அதற்கேற்ப ஆண்டவன் உனது பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பான். பிரார்த்தனையே உன்னை இறைவனேடு இணைத்து வைக்கும். ஆதலால், ஓயாத பிரார்த்தனைமயமாய் உனது வாழ்வு விளங்கட்டும். ஆண்டவன் உனக்கு அருளுவாராக.

சம்பந்தர் வாக்கு

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன்)

தீயபண்புகள் நிறைந்தவர்கள், தங்களைத் தாங்களே உணர்ந்து வருந்தக் கூடிய காலமும் வரும். அந்தக் காலத்தில் கடவுள் நினைப்பு கூடவே வரும். இதை உலக அனுபவத்தில் நாம் பார்க்கிறோம். யாராக இருந்தாலும், பஞ் சாட்சர மந்திரத்தை ஓதுபவர்கள் எல்லாத் தீங்குகளிலிருந்தும் விடுபடுவார்கள் என்ற நம் முன்னோர் கருத்தைச் சம்பந்தர் கூறுகிறார்.

"உயிர்கள் மலபந்தத்தோடு கட்டுப்பட்டுத் துன்புறும் காலத்தில், இறைவனை அடைக் கலம் எனச் சாருமானால், இறைவன் அவ்வுயிர் களைப் பாதுகாப்பான்; அவ்வுயிர்களுக்கு எவ் வித வினைத் தொடர்பும் இல்லாதவாறு ஆக்கு வான்; பேரா இயற்கைப் பெருவாழ்வு அளிப் பான்" என்பது சிவஞானபோதத் தத்துவக் கருத்தாகும்.

இதையே சம்பந்தர் வாக்கில் காண்கிறோம். திருவேடகம் மதுரைக்கு மேற்கே அமைந் துள்ள சிவஸ்தலம். திருஞானசம்பந்தர் பாடி யருளிய தேவார ஏடு, வையை ஆற்றைஎதிர்த் துச் சென்று கரை ஏறிய இடம். ஆகவே, திருவேடகம் என்ற பெயரைப்பெற்றது.

பாண்டிய நாட்டில் ஏற்பட்டுள்ள தீமை களைக் களையவேண்டும்; பாண்டிய மன்னனுக்கு நன்னெறி புகட்டவேண்டும்; பாண்டிய நாட்டு மக்களுக்கு நன்மைகள் மலியச் செய்தல் வேண் டும் என்ற எண்ணத்துடன் மதுரையம்பதிக்கு எழுந்தருளியவர் திருஞானசம்பந்தர்.

தமது வாக்குக்குச் சக்தி உண்டு என்ப தைச் சமணர்கள் முன்னிலையில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் சம்பந்தருக்கு ஏற்பட்டது. இறைவனே, உள் நின்று உணர்த்த, தாம் பாடிய தேவாரப் பதிகத்தை ஏட்டுச் சுவடியிலே எழுதி வையை ஆற்றின் போக்கிலே விட்டார். இவ்வேடு, ஆற்றின் போக்கை எதிர்த்து, எதிர் ஏறிச் சென்று கரையை அடைந்தது. ஏடு கரையில் ஏறிய இடம் திருவேடகம்.

ஏட்டிலே அமைந்த பொதுத் திருப்பதிகம்:

"வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே."

— அந்தணர், வானவர் வாழ்க; பசுக்கள் வாழ்க; மழைபொழிக; வேந்தன் சிறந்து விளங் குக; தீயவை எல்லாம் அழியட்டும்; இறைவன் திருநாமம் உலகம் எல்லாம் நிறையட்டும்; உல கத்தில் துன்பங்கள் எல்லாம் மறையட்டும்"— என்கிறார் சம்பந்தர்.

"அந்தணர் வாழ்க"— அந்தணர்கள் என்ப வர்கள் யார்? வேதத்தில் வல்லவர்கள் அந்த ணர்கள்; வைதிக தருமத்தைக் கடைப்பிடிப்ப வர்கள் அந்தணர்கள். வைதிக நெறியிலிருந்து சிறிதும் பிறழாமல், தீய சிந்தனைகளை மனத்தி லும் நினையாமல் அறநெறி வாழ்வு வாழ்பவர் களே அந்தணர்கள். எல்லா உயிர்களிடத்தும் கருணை உடையவர்களே அந்தணர்கள். "அந்த ணர் என்போர் அறவோர்; மற்று எவ்வுயிர்க் கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்" என்கி றார் வள்ளுவர். இப்பண்புகளை உடைய அனை வரும் அந்தணரே ஆவர்.

வேதம் பொதுவானது; வேத நெறிகள் பொதுவானவை. வேதக் கோட்பாடுகள் பொதுவாக அமைந்தவையே. வேத நெறி பாரதம் முழுவதும் பரவி இருந்தது. ஒருகாலத் தில் உலகம் முழுவதுமே வேதநெறி பரவியிருந் தது எனவும் கூறுவார்கள். சங்க நூல்களிலே வேத நெறிகளைப் பற்றிய 'பிரஸ்தாபம்' உண்டு. 'வலியுறுத்துதலைக் கூட மறைமுக மாகத் தான் புரிந்துகொள்ள முடியும்.

நாயன்மார்கள் காலத்தில் வேதநெறியாகிய வைதிக தருமத்துக்கு விசேஷ முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வேதக் கருத்துக்களைத் தமிழ் நாடு முழுவதும் பரப்பியவர்களும், வைதிக தருமத்தை எல்லாரும் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்று வலியுறுத்திக் கூறிய வர்களும் நாயன்மார்களே ஆவார்கள்.

"வேத நாயகன்", "வேதியர் நாயகன்", "வேதனே வேத கீதா", "வேத முதல்வன்" என்றெல்லாம் நாயன்மார்கள் சிவபெருமானைத் தேவாரங்களில் போற்றுகின்றார்கள். வேதக் கருத்துக்களைத் தம் பாடல்கள் மூலம் நாயன்

மார்கள் பரப்பினர்கள்.

வேதத்தை ஐயம் திரிபு இல்லாமல் கற்று, வேதநெறி ஒழுகி, வைதிக தருமத்தைக் கடைப் பிடிப்பவர்கள் அந்தணர்கள். வேதத்திற்கும் அந்தணர்களுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. ஆகவே சம்பந்தர் ''அந்தணர் வாழ்க'' என் கிருர். அந்தணர் வாழ்ந்தால் வைதிக தருமம் வாழும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந் தது.

'' வானவர் வாழ்க ''—வானவர்கள், தேவர் கள் ஆவார்கள். வேதங்கள் வானவர்களைப் பலவாறு போற்றித் துதிக்கின்றன. அக்கினி, வருணன் போன்ற தெய்வங்களை வேதங்கள் போற்றுகின்றன.

“ஆன் இனம் வாழ்க ''— பசுக் கூட்டங்கள் வாழ்க. விலங்குகளில், பசுக்களுக்குச் சிறப் பிடம் கொடுக்கப்படுகிறது. தமிழ் இலக்கணத் தில் புறத்திணை இலக்கணம் உண்டு. புறத் திணை இலக்கணத்தில் ''ஆநிரை கவர்தல்'' அதாவது பசுக் கூட்டங்களைக் கவர்தல்; கவர்ந்து சென்ற பசுக் கூட்டங்களை மீட்டுக் கொண்டு வருதல் என்ற பகுதிகள் உண்டு. போர் தொடங்குவதற்கு முன்னல், தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இயலாத பசுக் கூட்டங் களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்ற பிறகு தான், தமிழ் நாட்டில் போரைத் தொடங்குவார்கள். பசுவுக்குத் தீங்கு செய்த வர்களுக்குப் பிராயச் சித்தம் கிடையாது என் பதை ஒரு மரபாகக் கொண்டிருந்தார்கள். ''இக்கோவிலுக்குத் தீங்கு விளைவிப்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற்கு ஆளாவார்கள் '' என்று தென்காசிக் கோயில் கல்வெட்டு கூறு கிறது.

'' எங்கள் பசுக்களைக் காப்பாற்று '' என்று ரிக்வேதம் சிவபெருமானை வேண்டுகின்ற செய் தியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. பசு என் னும் சொல் ஆன்மாவாகிய உயிரைக் குறிக்கும். பதி என்ருல் தலைவன். உயிர்களுக்கெல்லாம் தலைவன் ஆகும் தகுதி பற்றிச் சிவபெருமானுக் குப் பசுபதி என்ற பெயர் உண்டு. சொல் அள வில் பார்க்கின்றபோது, பசு, பசுவாகிய விலங் கைக் குறிப்பதாக அமைகிறது. அந்த அளவில் பசுவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு தெரிகிறது.

இவ்வாறு பசுவுக்கும், பசுவைக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கைக்கும் தரப்பட் டுள்ள முக்கியத்துவம் தெரிகிறது.

மேலும், சிவ வழிபாட்டுக்கு இன்றியமை யாது வேண்டப்படுவன பசுவிலிருந்து கிடைக் கக்கூடிய பஞ்ச கௌவியங்கள். சிவார்ச்சனைக் கும், சிவ வழிபாட்டை நிறைவு செய்யவும் பசு உதவுகிறது. ஆகவே சம்பந்தர், '' வாழ்க... ஆன் இனம் '' என்ருர். பால் நல்ல உணவா கிறது. எல்லா வைட்டமின் சத்துக்களும் பாலில் நிறைந்துள்ளன. சத்துள்ள உணவு; எளிதில் ஜீரணிக்கக் கூடிய உணவு. குழந்தை கள், முதியோர், நோயாளர்கள் ஆகியோருக்கு ஏற்ற உணவாகப் பால் உதவுகிறது. இத்த கைய பாலைத் தருவதாலும் ஆன் இனம் வாழ வேண்டியது தானே !

'' வீழ்க தண்புனல் '' — நாடெல்லாம் மழை பொழிக என்கிருர் சம்பந்தர். மழையின்றி மாநிலத்தார்க்கு எதுவும் இல்லை என்பது வள்ளுவர் வாக்கு. கடவுள் வாழ்த்துக்கு அடுத்தாற்போன்று வள்ளுவர் வான்சிறப்பை அதாவது மழையின் சிறப்பை இயம்பு கின்ருர். உலகம் முழுவதும் சுபிட்சமாக வாழச் செய்வது மழை. பிரதிபலன்கருதா மல் உதவி செய்வதும் மழை : சுருக்கமாகச் சொன்னல், எல்லா உயிர்களும் வாழவும், இந்த உலகமே இயங்கவும் மழை இன்றி யமையாததாகிறது. வேதங்களிலும் மழைக் கடவுளான வருணனைப் பற்றிய செய்திகள் சொல்லப்படுகின்றன.

'' வேந்தனும் ஓங்குக '' அரசன் நீடுழி வாழ்வானுக. செங்கோல் வழுவாது அரசை நடத்த வேண்டும்; திருக்கோவில் பூஜை முறைகளை வழுவாது நிறைவேற்ற வேண்டும் ; குடிமக்களுக்கு யாதொரு குறையும் வாராத வாறு பாதுகாக்க வேண்டும். இவையெல் லாம் அரசனுக்கு உரிய கடமைகள் ஆகின்றன. இக்கடமைகளைத் தவருது நிறைவேற்றுபவன் அரசன். ஆகவே, வேந்தன் நீடுழி வாழ வேண்டும் என்ருர் சம்பந்தர்.

இல்லறதர்மங்கள் எல்லாம் இனிதாக நடை பெறவும், பூஜா கைங்கர்யங்கள் செவ்வனே நடைபெற்று வரவும் நல்லவர் அரசாட்சி

இன்றியமையாததுதானே! நெடுமாறபாண்டியன் நல்லவன்; அவன் நீடு வாழ்ந்து வைதிக தருமத்தைக் காப்பாற்றவேண்டும் என எண்ணுகிறார் சம்பந்தர்.

“ஆழ்க தீயதெல்லாம்” உயிர்களுக்குத்தீமை தருகின்ற அனைத்தும் அழிந்து போகட்டும் என்கிறார் அவர். தீமைகள் எல்லாம் விலகி நன்மையோடு வாழவே நாம் அனைவரும் விரும்புகின்றோம். நம்மைச் சுற்றிலும் நன்மைகளும் இருக்கின்றன; தீமைகளும் இருக்கின்றன. இது உலக இயற்கை. ஆனால் தீமைகள் எல்லாம் விலகிப் போகவே நாம் விழைகின்றோம்.

மனித வாழ்க்கை உயர்ந்தது; சந்தேகம் இல்லை. இந்த வாழ்க்கையின் முடிவு எங்கே இருக்கிறது? உடலைவிட்டு உயிர் பிரிந்து போவது வாழ்க்கையின் முடிவு ஆகாது. கடவுளோடு ஒன்றுதலே—ஐக்கியமாதலே—வாழ்க்கையின் முடிவு ஆகும் என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள்.

கடவுளே பல உயிர்களாகப் பரிணமிக்கிறான் என்பது முன்னோர் கொள்கை. அவனே பல உயிர்களாகப் பரிணமிக்கும்போது, பிரிந்து பல உயிர் வடிவங்களாகப் பிறப்பதும் பிறகு அவனோடு ஐக்கியமாதலும் எவ்வாறு நிகழும்? என்ற கேள்வி எழக்கூடும். “இறைவனோடு ஐக்கியமாதல்” என்ற ஒன்று எல்லாரும் ஏற்றுக்கொண்ட கொள்கை. அப்படியானால், இறைவனோடு ‘ஐக்கியமாதல்’என்ற நிலை வரும்போது, அவனைவிட்டுப் பிரிந்து வந்தால் தானே சாத்தியமாகும். எனவே, கடவுளே, அவ்வாறு மானிடர்களைக் குறைபாடு உடையவர்களாகப் படைத்து, தன்னிடமிருந்து பிரித்து அனுப்புகிறான்.

குறைபாடு உடைய மானிடனாக வடிவெடுத்தவன் எப்போது நிறைநிலை எய்துகிறான்? நல்லவற்றை எப்போது செய்கிறானோ அப்போது அவன் முழு மனிதன் ஆகிறான். நல்லவற்றைச் செய்வதே மனிதனுக்குப் பெருமை தருவதாகும்.

குறைபாடு உடைய ஒரு பொருள் எவ்வாறு நிறைபொருளாக ஆகமுடியும்? குறைபாடு உடைய மனிதன், தனது குறைகளை எல்லாம் நீக்கி, எப்படி நிறை மனிதனாக ஆகமுடியும்? அவனுடைய பகுத்தறிவு உபகாரம் செய்யும் என்று நினைக்கலாம். அப்பகுத்தறிவும் குறைபாடு உடையதுதானே. இறைவன் ஒருவன் தான் நிறை அறிவுடையவன். இறைவனுடைய எட்டுக் குணங்களில் ஒன்று நிறை அறிவுடைமை. நிறை அறிவு உடைய இறைவனுடைய அருள்தான், மனிதனுடைய குறைபாடுகளைக் களைந்து முழு மனிதனாக ஆக்க உதவுகிறது.

‘ஆழ்க தீயதெல்லாம்’ என்றார் சம்பந்தர். மனிதனுடைய தீமையாகிய குற்றங்கள் எல்லாம் திருவருளால் தீர்ந்துவிடும். அப்படித் தீர்வதற்கான திருவருளைப் பெறுவதற்கு உற்ற உபாயம் யாது?

தன் தவறுகளை ஒப்புக்கொண்டு, வருந்தி வாழ்த்தி வணங்குவதே இறையருளைப் பெறுவதற்குரிய உபாயமாகும். தனது குற்ற வரலாற்றைக் கூறித் திருந்துவதே பிராயச்சித்தமாகும்.“ஆனால்,வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே!” என்கிறார் மணிவாசகர். பொய் அழுகையா? பொய் அழுகையும், மெய் அழுகையும் இறைவன் அறிந்துகொள்ளுவான். குற்றத்தை உணர்ந்து அழுது, இறைவனைப் போற்றினால் அவன் திருவருளைப் பெறலாம்.

“அரன் நாமமே சூழ்க; வையகமும் துயர் தீர்கவே”— உலகம் முழுவதும் இறைவன் திருநாமமே சூழ்ந்திலங்க வேண்டும். வேறு எதுவும் சூழமுடியாது; சூழ்ந்தும் பயன் இல்லை. நல்லது சூழ்ந்தால்தானே நலன் பயக்கும். எல்லாரும் இன்புற்று வாழும் எண்ணம் உடையவர் சம்பந்தர். ஆகவே நல்லார் நாமம் சூழவேண்டும் என்கிறார். அவ்வாறு சூழ்ந்தால், இவ்வையகத்தில் எவ்விதத் துயரும் இருக்காது.

இறைவன் திருநாமந்தான் இந்த வையகத்தை வாழவைக்கும். இதில் உறுதியான நம்பிக்கை உடையவர் சம்பந்தப் பெருமான். காரணம் என்ன? அவர் வாயிலிருந்து வருகின்றவை அவருடைய வாக்குகள் அல்ல. இறைவன் திருவருள் வாக்குகள் அவை. திருவருள் சக்தியின் ஞானப்பால் உண்ட போதத்தால் வெளிவந்த இறை வாக்குகளே அவை. “எனது உரை தனது உரையாக நீறு அணிந்து” என்று சம்பந்தரே, தமது உரை

யைச் சிவபிரான் உரையாகக் கூறுகிறார். எனவே உண்மையில் அவர் சொல்லவில்லை. ஏதோ ஓர் உள்சக்தி, உள்ளத்துக்குள்ளே இருந்து உணர்த்த, அந்த உணர்வு வெளிப்பாடே அருள் வாக்காக வெளிவருகிறது.

''நம் உள்ளத்தில் உறையும் இறைமை எல்லை இல்லா ஆற்றல் உடையது; இந்த ஆற்றல் நம் வழியாக வெளிப்பட்டு உலகுக்கு உதவும்'' என்கிறார் அறிஞர் ஒருவர்.

சம்பந்தர் உள்ளத்தில் உறையும் எல்லை இல்லா இறைமையாற்றல், சம்பந்தர் வழியாக, வாக்காக வெளிப்பட்டுப் பாண்டிய நாட்டுக்கு உதவுகிறது.

''எள் அளவு நம்பிக்கை நமக்கு இருந்தாலும் போதும். 'மலையே! நீ இங்கிருந்து நகர்ந்து போ' என்றால் மலை நகர்ந்து விடும்'' என்கிறார் ஏசுநாதர். எனவே இறை நம்பிக்கை எல்லாரையும் வாழ வைக்கும்.

''என்னால் முடியாதது என்ன இருக்கிறது! இறைமையாற்றலை இதயத்துக்குள்ளே வைத்திருக்கிற எனக்கு இயலாதது எதுவுமே இல்லை'' — ''முடியாதது என் எனக்கேல் இனி! முழு ஏழுலகும் உண்டான் உகந்து வந்து அடியேன் உள் புகுந்தான் அகல்வானும் அல்லன் இனி'' — என்கிறார் நம்மாழ்வார்.

''தன்னை நன்றாகத் தமிழால் பாடிப் போற்றுவதற்காகவே என்னை இறைவன் படைத்துள்ளான்''—''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்கிறார் திருமூலர்.

''நான் எழுதியவை எல்லாம் என்னுடையவை அல்ல, ஏதோ ஓர் ஆற்றல் என் உள்ளத்தில் புகுந்து காட்டிய கருத்துக்களே என் எழுத்தில் இடம் பெற்றுள்ளன'' என்கிறார் பிரபல சிந்தனையாளர் எமர்ஸன்.

''நான் எந்தச் சித்திரத்தை வரையத் தொடங்கினாலும், ஏதோ ஓர் அற்புதச் சக்தி என்னுடன் சேர்ந்து வரைந்துகொண்டே இருக்கும்'' என்று அனுபவத்தை உணர்ந்து கூறுகிறார் உலகப் பிரசித்திபெற்ற ஓவியக் கலைஞர் பிகாசோ.

நீராவியின் சக்தியைக் கண்டறிந்தவர் ஜேம்ஸ்வாட் என்ற அறிவியலறிஞர். ''நான இச்சக்தியைக் கண்டுபிடித்தேன்; கணத்திலே தோன்றி மறைந்த ஓர் உள் உணர்வுதான் எனக்கு இதை உணர்த்தியது'' என்கிறார்.

எனவே, சான்றோர்கள் இறைவன் திருவருள் உணர்த்த, அதனையே உலகுக்கு உணர்த்துகிறார்கள். ''இறைவாக்கினர்'' என்று இவர்களை ஒரு சாரார் குறிப்பிடுவார்கள்.

அதேபாங்கில்தான் சம்பந்தப் பெருமான் திருவருள் உள் நின்று உணர்த்த, இறைவன் திருநாமம் உலகம் முழுவதும் நிறைந்து, துன்பம் எல்லாம் தீரவேண்டும் என்று பாடுகிறார்.

நல்ல மனம் படைத்தவர்கள் நல்லனவற்றையே எண்ணுவார்கள்; நல்லனவற்றையே செய்வார்கள். அதனால் உலகம் முழுவதும் நன்மையே நிறையும்.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.''

— சிவபெருமான் ஒப்பு உயர்வு இல்லாதவன். அவன் காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டவன். அவனுக்கு இணையாக எடுத்துக்காட்டு அதாவது உதாரணம் சொல்ல முடியாது. யார் அவனைக் காண முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்குச் சோதி வடிவமாகக் கண்ணுக்குப் புலப்படுகிறான். அவனை மனத்திலே தியானித்து வாழ்ந்து, உங்கள் துக்கம் எல்லாம் நீங்கும்படி வாழுங்கள். எங்கள் விருப்பம் எல்லாம் இறைவன் திருவடியே என்று எண்ணுகிறவர்களே! கணப்பொழுதாவது எம்பெருமான் திருவடிகளை வந்து சேருங்கள் என்கிறார் சம்பந்தர்.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா''— உலகத்தில் ஒருபொருளை நிச்சயப்படுத்திக்கொள்ள மூன்று வகைப் பிரமாணங்களைக் கூறுவார்கள். அவை பிரத்தியட்சப் பிரமாணம், ஆகமப் பிரமாணம், அனுமானப் பிரமாணம் என்பவை. இங்கே ஏதுக்களால் என்றது அனுமானப் பிரமாணங்களால். நம்முடைய அனுமானங்களுக்கு அப்பாற்பட்டவன் இறைவன். 'எடுத்த மொழியில் சோதித்துப்பார்த்தல்' என்பது ஆகமப் பிரமாணத்தால் அறிய முயலுதல். ஆகமப் பிரமாணங்களுக்கும் அப்பாற்பட்டவன் இறைவன்.

ராமராஜ்யம்

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தேசிய இலட்சியம் உண்டு. இந்தியாவின் தேசிய இலட்சியம் ஆத்மீக வாழ்வு வாழ்தல். இதைப் புறக்கணித்துவிட்டு நம் நாடு லௌகிகத்தையோ, வியாபாரத்தையோ, ராணுவத்தையோ, அரசியல் வாதத்தையோ இலட்சியமாகக்கொள்ளுமாகில் இந்நாடு அதிவேகம் சீர்குலைந்துபோம். ஆத்மீக வாழ்வை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு இலௌகிகத்தையும், பொருளீட்டுதலையும், வாணிபத்தையும் ஏனைய எதை வேண்டுமானாலும் வளர்த்துவரலாம். ஆத்மீக வாழ்வு நிலைகுலையாதிருக்கும் பரியந்தம் இந்நாட்டுக்குக் கேடு ஒன்றுமில்லை என சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். இந்நாடு புற ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. அதற்காக வென்று அரசியல் போராட்டம் ஒன்றை மகாத்மா காந்தி துவக்கி வைத்தார். அந்த அரசியல் போராட்டத்தையே ஆத்மீக வாழ்வு மயமாக அவர் திருத்தியமைத்தார். ஆத்மீக வாழ்வு முழுதும் ஸத்யம் வத, தர்மம் சர என்னும் இரண்டு கோட்பாடுகளில் அடங்கியிருக்கிறது. இந்த இரண்டு கோட்பாடுகளையும் அஹிம்ஸை, ஸத்யம் என மகாத்மா காந்தி அமைத்துக்கொண்டார். அந்த இரண்டு கோட்பாடுகளின் வாயிலாகவே நாட்டு மக்களுக்கிடையில் விழிப்பை உண்டாக்கினர். அரசியல்துறையில் நாட்டின் விடுதலைக்காக ஒரு பேரியக்கத்தை அமைத்து வைத்தார். அதன் விளைவாக அத்துறையிலே விடுதலையடையும் பெருநிலைக்கு நாடு பக்குவப்பட்டது. அஹிம்ஸையையோ, ஸத்யத்தையோ புறக்கணித்து விட்டுப்பெறும்விடுதலை நமக்கு வேண்டாம் என வற்புறுத்தினர். ஆத்மீக வாழ்வை அடிப்படையாகக் கொண்டு அவர் முயற்சி செய்ததினாலேயே நாட்டுக்கு விடுதலை வாய்த்தது.

மேல் நாட்டு வாழ்க்கை முறையை அடிப்படையாக வைத்துக்கொண்டு விடுதலையடைந்துள்ள நம் நாடு தனக்காகவென்று ஒருவித ஆட்சிமுறையை அமைத்துக்கொண்டது. அது சமயச்சார்பற்றது எனவும் உலகுக்கு உறுதி கூறப்பட்டது. ஸத்யத்தையும் தர்மத்தையும் புறக்கணித்துவிட்டால் அது சமய நெறியினின்று வழுவியது ஆகும். விடுதலைபெற்று இப்பொழுது முப்பது வருஷங்களாகின்றன. இந்த முப்பது வருஷங்களுக்குள் தர்மத்தையும், ஸத்யத்தையும் நாம் அடியோடு இழந்தவர்களாயிருக்கிறோம். நாட்டில் எங்குத் திரும்பிப் பார்த்தாலும் அரசியல் பிணக்கே நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஸத்யமும், தர்மமும் அறவே புறக்கணிக்கப்பட்டவைகளாயிருக்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக அமைதியான சமுதாய வாழ்வு வாழ்ந்து வந்த இந்நாடு இன்றைக்கு கட்சி பிரதி கட்சி போராட்டமாக வடிவெடுத்திருக்கிறது. ஒரு குடும்பத்திற்குள் இணக்கமில்லை. குடும்பத்தில் உள்ள தந்தையும், மக்களும் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். அதை முன்னிட்டு அவர்களுக்கிடையில் சண்டை சச்சரவும் பிளவும் ஏராளமாக உண்டாகியிருக்கின்றன. ஒரு கிராமத்து மக்களுக்கிடையில் ஒற்றுமையில்லை. வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக அவர்களுக்கிடையில் வேற்றுமையும் வெறுப்புமே அதிகரித்து வருகின்றன. ஒரு மாகாணத்துக்கும், மற்றொரு மாகாணத்துக்குமிடையில் இணக்கம் கிடையாது. வாழ்க்கை முறையில் ஒவ்வொரு மாகாணமும் சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஒவ்வோர் அரசியல் கட்சியும் தன்னிடத்துள்ள சிறப்புகளை விளம்பரப்படுத்துதற்கும், எதிர்க்கட்சிகளிலுள்ள குறை நிலைகளைப்பொது மக்களுக்கிடையில் புகட்டுதற் பொருட்டும் ஏராளமாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அப்படிப் பிரச்சாரம் செய்கிறவர்கள் ஸத்யத்தில் சிறிதேனும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களா? தந்தையை ஸத்ய சங்கல்பனுக்குதல் பொருட்டுத் தசரதராமன் பதினான்கு வருஷங்கள் வனவாசம் ஏற்றுக்கொண்டான். நாடு தம்பிக்குரியது என்று அத்தனை வருஷங்கள் அந்நாட்டினுள் பிரவேசிக்க அறவே மறுத்து விட்டான். தம்பியாகிய பரதனும்

அயோத்தி வாசிகளும் ஒன்றுகூடி ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவனிடம் போய்ப் பரிந்து விண்ணப்பித்தார்கள். ஸத்ய விரதத்தைக் காப்பது நாடாளுவதைவிட பன்மடங்கு மேலானது. ஸத்யத்தை நிலைநாட்டுதலே தன்னுடைய இலட்சியம் என அவன் நிரூபித்துக் காட்டினன். அத்தகைய தியாக மூர்த்தியாக அவன் இலங்கினன். அரசியல் வாழ்க்கையினும் மேலானது ஸத்யம் காத்தல் என்னும் அறநெறி வாழ்வு என்பதைத் தன்னுடைய ஜீவிதத்தின் வாயிலாக அவன் விளக்கிக் காட்டியுள்ளான். அதற்கு நேர் மாருக இன்றைக்கு நாட்டினுள்ளே உருவெடுத்திருக்கிற அரசியல் கட்சிகள் தாங்களே நாடாளத் தகுதியுடையவர்கள்; மற்றவர்கள் நாட்டைப் பாழ்படுத்தி வருகிருர்கள் என்கின்றனர். அதற்காகவென்றே அல்லும் பகலும் ஓயாது பிரச்சாரம் செய்து வருகிருர்கள். பிரசங்க மேடைகளும், சமாச்சாரப் பத்திரிகைகளும், அதற்காகவென்றே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தங்கள் கட்சியின் சிறப்புக்களைப்பற்றி சண்டமாருதம் போன்று மக்களுக்கிடையில் பேசிவருகிறவர்கள் ஸத்யவிரதம் காப்பவர்களா? தியாக வாழ்வு வாழுகிறவர்களா? ஸத்யத்தை அறவே மறந்துவிட்டுப் பொய்யையும், புளுகையும் ஏராளமாகப் பரப்புவதே அவர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோளாயிருந்து வருகிறது. தியாகத்தை வளர்ப்பதற்கு மாருக ஆதிக்கத்தையும் அரசியல் கௌரவத்தையும் வளர்ப்பதற்கென்றே அல்லும் பகலும் பாடுபட்டு வருகின்றனர். பொதுமக்களுக்கிடையில் தாங்கள் புகட்டுவது ஸத்யமா அல்லது அஸத்தியமா என்று பாகுபடுத்தும் விவேகம் அவர்களிடத்திருந்து அறவே மறைந்து வருகிறது. ஸத்யத்தைப் பேசினல் தான் அரசியல் தேர்தலில் ஒருபொழுதும் வெற்றியடையமாட்டான் என்று ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கூட்டாளிகளிடம் பெருமை பாராட்டிப் பேசுகிருன். ஸத்யத்துக்கு இன்று மதிப்புப் போய்விட்டது. பித்தலாட்ட மயமான பேச்சுக்களும் வாழ்க்கை முறைகளும் நாளுக்கு நாள் அதிவேகமாக வளர்ந்து வருகின்றன.

பண்டைக்காலத்து அரசியலமைப்பு பணச் செலவை அடிப்படையாகக் கொண்டதன்று. பண்பாட்டையே அது அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆதலால் பணச் செலவு ஏதுமின்றி அமைதியான ஆட்சி முறை சமுதாயங்களுக்கிடையிலும் பலப்பல அரசாங்கங்களுக்கிடையிலும் நிகழ்ந்து வந்தது. இக்காலத்தில் நடைபெற்று வருகிற அரசியல் தேர்தல்களில்பணச்செலவு எவ்வளவு ஆகிறது? பொருளற்ற உழைப்பும், அலைச்சலும் அல்லும் பகலும் நிகழ்ந்து வருகிறது. பணத்தைத் திரட்டுவதற்காக ஒவ்வோர் அரசியல் கட்சிகளும் பலப்பல முறைகளைக் கையாண்டு வருகின்றன. அவர்கள் அங்ஙனம் பணம் திரட்டுவது தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதா அல்லது பேராசையை அடிப்படையாகக் கொண்டதா என்பதை அவர்கள் ஆராய்ந்து பார்ப்பதில்லை. அப்படித் தாங்கள் திரட்டிய செல்வம் எவ்வளவு என்பதற்குக் கணக்கில்லை. தேர்தலின் பொருட்டுக் குடும்பச் சொத்தை அடியோடு உருட்டிவிட்ட பிரமுகர்கள் நாடெங்கும் இருக்கின்றனர். ஏதேனும் ஓர் அரசியல் கட்சி ஆதிக்கத்தைப் பெற்றிருக்கிற பொழுது தங்களுடைய அதிகாரம் முழுவதையும் கட்சியைப் பலப்படுத்துவதற்கே பயன்படுத்துகிறது. நாட்டுக்கு இன்னின்ன நலன்களைச் செய்திருக்கிறோம் என்னும் பிரச்சாரத்தில் பொய்யும் மெய்யும் கலந்தே அமைத்திருக்கின்றன. தாங்கள் கைப்பற்றிய ஆதிக்கத்தைக் கைவிடலாகாது என்று அதற்குப் பாதுகாப்புப் போடுதற்கு என்னென்ன முறைகளையோ கையாளுகிருர்கள். தர்மம் அல்லது அறநெறிக்கும், அவர்கள் கையாளுகிற முறைக்கும் இடையில் பொருத்தம் எதையும் காண முடியாது.

முதியோர் தொகுதி அல்லது Adult Franchise என்பதைப்புதியதாகப்புகுத்தியிருப்பதாகப் பெருமையடித்துக் கொள்கிருர்கள். வயது வந்துள்ள மானுடன் ஒவ்வொருவனுக்கும் வாக்குரிமை உண்டு என்று பாராட்டுகின்றனர். பிறகு தேர்தலில் பொது மக்களுடைய ஆதரவைத் தேடும்பொழுது அந்தந்த மனிதனுக்கு ஏற்ற பேச்சு; அந்தந்த ஜாதிக்கேற்ற பேச்சு ஆகியவைகளைச் சரமாரியாகப் பொழிகின்றனர். அதில் எவ்வளவு தூரம் ஸத்யம் இருக்கிறதென்று ஆராய்ந்து பார்க்க அவர்களுக்கு

நேரம் இல்லை. ஏதேனும் ஒரு ஜாதி நிறைந்திருக்கிற தொகுதியில் அந்த ஜாதியைச் சேர்ந்த பிரமுகனையே தேர்தலுக்காக நிற்க வைக்கிறார்கள். அதன் விளைவாக ஜாதிப் பிணக்கு அதிகரித்து வருகிறது. மறைந்துபட்டுப்போம் நிலையிலிருந்த ஜாதி வேற்றுமை இன்று அரசியல் வாதத்தை முன்னிட்டு வளர்ச்சியடைந்து வருகிறது. ஜாதி வேற்றுமையை வளர்ப்பது தர்மமா என்று அரசியல் வாதிகள் எண்ணிப் பார்ப்பதில்லை.

முதியோர் அனைவருக்கும் தேர்தலில் வாக்குரிமை தரப்பட்டிருப்பது இந்நாட்டுச்சரித்திரத்தில் புதியதோர் அத்தியாயமாகிறது.இதன் விளைவாகவே சமுதாயத்தில் கேடுகள் பல அதிவிரைவில் புகுந்துள்ளன. பாமரர்களில் பெரும்பான்மையோருக்கு அரசியல் கட்சி என்றால் என்ன? தேர்தலில் வாக்குக் கொடுப்பது யாது என்பது விளங்குவதில்லை. பிறர் சொற்படி கேட்டு அவர்கள் வாக்குக் கொடுக்கிறார்கள். அந்த நிலையும் மோசமானதன்று. பண்பாட்டில் மிகக் கீழ்த்தரத்திலிருக்கும் பொது மக்களுக்குக் கைக்கூலி (லஞ்சம்) கொடுத்து அவர்கள் வாக்கை விலைக்கு வாங்குகிறார்கள். இப் பொருந்தாத செயலில் அரசியல் கட்சிகளனைத்தும் முதல் தேர்தலிலேயே ஈடுபட்டார்கள். நாளடைவில் பணம் கொடுத்து வாக்கு வாங்குவது சர்வ சாதாரணமாகிவிட்டது. எந்தக் கட்சி அதிகம் பணம் தருகிறதோ அந்தக்கட்சிக்கு வாக்குக்கொடுப்பது என்ற கோட்பாட்டில் துவங்கியது. இப்பொழுது எல்லாக் கட்சிக்காரர்களிடத்தும் கைக்கூலி வாங்கும் பொது மக்கள் லஞ்சத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். பிறகு தங்களின் இஷ்டமான கட்சிக்கு அவர்கள் வாக்குக் கொடுக்கிறார்கள். நாளடைவில் மற்றும் ஓர் முறை அமுலுக்கு வந்துள்ளது. ஒரு கூட்டத்துக்கு ஏஜென்டாக ஒருவன் இருக்கிறான். அவன் கைவசத்தில் நூறு வாக்காளர், இருநூறு வாக்காளர் இருக்கிறார்கள் என்று அவன் உறுதி கூறுகிறான். அவனிடம் பெருந்தொகையாக அரசியல் கட்சிகள் லஞ்சம் கொடுக்கிறார்கள். தொகை முழுதையும் அவன் செலவழிப்பதில்லை. தனக்கு வேண்டிய தொகையை எடுத்துக்கொள்ளுகிறான். வாக்காளர்களுக்குச் சற்றுக் குறைந்த பங்கீடு செலுத்துகிறான். ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு சிலர் வாக்குக் கொடுக்கவேண்டுமென்றும் அவன் நியமிக்கிறான். இதுவே முதியோர் வாக்குரிமை என்னும் திட்டத்தினின்று தோன்றியுள்ள கேடு ஆகும்.

ஆட்சிக்கு ஏதுவான மந்திரிமார் ஸ்தானங்களை ஏற்றவர்கள் தாங்களே முறை தவறிய போக்கில் பணம் சேகரித்தனர். தங்கு தடையின்றி வாக்காளர்களுக்குக் கைக்கூலி கொடுத்துப் பதவியைப் பெற்றிருக்கிறார்கள். ஆதலால் நாங்கள் ஏன் சந்தர்ப்பம் கிடைக்கிற பொழுதெல்லாம் கைக்கூலி சம்பாதிக்கலாகாது என உத்தியோகஸ்தர்களும் குமாஸ்தாமார்களும் எண்ணினர். தங்களுடைய சேவையை நாடி வந்தவர்களிடத்திலெல்லாம் கொஞ்ச கொஞ்சமாக இலஞ்சம் வாங்க ஆரம்பித்தனர். இந்த முப்பது வருஷங்களுக்குள் லஞ்சம் வாங்குவது மாமூல் ஆகிவிட்டது. லஞ்சம் கொடுக்கிறவர்கள் எந்தப் படித்தரத்தில் வேண்டுமானாலும் வைத்துத் தாங்கள் விரும்புகிற எந்தக் காரியத்தையும் அந்தந்த உத்தியோகஸ்தர்களுக்குப் பணம் கொடுத்துக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர். இந்தச் சீர்கேட்டைத் தடுக்க யாருக்குமே இயலாது. அத்தகைய பரிதாபகரமான நிலைக்கு நாடு வந்திருப்பதைக் குறித்து யாருமே எண்ணிப் பார்க்கவில்லை.

தயங்காது பொய் பேசுவது, முறை தவறிப் பணம் ஈட்டுவது, முறை தவறி அதைச் செலவிடுவது ஆகிய செயல்கள்மேலாம்வாழ்வுக்குப் பொருந்தாதவைகள் என்று யாருமே எண்ணிப் பார்ப்பதில்லை. ஸத்யம் வத, தர்மம் சர என்னும் வேத வாக்குகள் சமுதாயத்தினின்று பறந்தோடி விட்டன. மனிதன் பண்பாட்டிலே பாதாளத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறான். தொழிற்சாலைகள் அமைப்பதும், பொருளாதாரத்தைப் பெருக்குவதும் வேண்டியவாறு நிகழ்ந்திருக்கின்றன என்று அரசியல் வாதிகள் பெருமை அடித்துக் கொள்கின்றனர். மனிதனுடைய பண்பைப் பறிகொடுத்துப் பொருளைப் பெருக்குவதால் எந்தவித நலனும் ஏற்படாது. இந்தச் சீர்கேட்டுக்கு விமோசனம் தேடியாகவேண்டும். (தொடரும்)

இனி நாம் செய்யக்கிடப்பது யாது?

(சுவாமி துருவானந்தர்)

'நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்'

என்று வேதனைப்பட்டுப் பாடினான் பாரதி. மனிதன் என்ற சொல்லுக்கு மாண்புகளனைத்தும் அமையப்பெற்றவன் என்று பொருள். உயிரினங்களிலெல்லாம் மானுடனே மேலாம் உயிராக ஏன் மதிக்கப்பெறுகிறான்? விலங்குகளும் உண்கின்றன; உறங்குகின்றன. குட்டிகளை ஈன்றெடுத்துக் குடும்ப வாழ்வு வாழ்கின்றன. மனிதனும் விரும்பியதை உண்கிறான். உறங்குகிறான். உற்றார் உறவினரோடு குடும்ப வாழ்வு வாழுகின்றான். அப்படியானால் விலங்கைப் போன்ற வாழ்வுதானே இதுவும்! மானுடப் பிறவிக்குள்ள உயர்ந்த சிறப்புதான் என்ன? எல்லா உயிர்களும் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றன. ஆனால் மானுட நிலையில் .அறிவு வளர்ச்சி அதிகம். சிந்தனா சக்தி செயல்படுவது மானுடப்பிறவிக்கு மட்டுமே உண்டான சிறப்பான அம்சம். மானுடப் பிறவியில் மட்டுமே இறைவனை அடையமுடியும். அத்தகைய உயர்ந்த மானுடப் பிறவியிலிருப்பவனை ஏன் நிலைகெட்ட மனிதன் என்று பாரதி பாடவேண்டும்? பண்புகளனைத்துக்கும் உறைவிடமாகத் திகழவேண்டியவன் மனிதன். ஆனால் அத்தகைய பண்புகளை இக்கால மனிதனிடம் காண்கின்றோமா? நாட்டில் அறிவியல் முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம் இன்னும் எத்தனையோ முன்னேற்றங்கள் வந்து விட்டனவென்று பேசுகிறார்களே பலர். முன்னேற்றம் எங்கே? பண்பாட்டில் சிறிதும் முன்னேற்றத்தைக் காண முடியவில்லையே! சிறுமைத்தனம், ஒருவனை ஒருவன் வஞ்சித்து சுயநலத்தை வளர்த்தல், நம்பிக்கை துரோகம், பணம் கொடுத்து வேண்டியவர்களைக் கைக்குள் போட்டுக்கொள்வது, ஆடம்பர வாழ்வு வாழ விரும்பும் போலி வாழ்வு இதைத்தானே நாடு முழுவதும் காண்கிறோம். மனிதனுடைய உண்மையான பண்பு எங்கே போனது? ஆகாயத்தில் பறவை போன்று பறக்கக் கற்றுக்கொண்டான்; நீரில் மீன்போன்று நீந்தக் கற்றுக் கொண்டான்; ஆனால் மண்ணில் மனிதன் போன்று வாழக் கற்றுக் கொள்ளவில்லையே. இந்நிலையையறிந்த பாரதி நெஞ்சு பொறுக்குதிலையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால் என்கிறான்.

வண்டுகள் அழகான பூக்களில் அமர்ந்துமது அருந்தி ஆனந்தமாக வாழுகின்றன. பறவைகளும், விலங்குகளும் அடுத்தவேளை உணவைப் பற்றி நினையாது வாழ்வு வாழுகின்றன. இந்த நம்பிக்கையற்ற மனிதன் அடுத்த வேளைக்கு எதை உண்போம்; எதைப் பருகுவோம் என ஏங்கிச் சாகிறான் என்கிறார் இயேசுநாதர். நம்பிக்கையற்றதனால் இவன் நாஸ்திகனானான். வாழுகிற முறைப்படி வாழ்ந்தால் மாதம் மும்மாரி பிழையாது பெய்யும். வளம் கொழிக்கும். மக்களின் அகமும் முகமும் ஆனந்தத்தால் நிறையும். மனிதனின் மனம் சுருங்கவே வானமும் சுருங்கியது. மனித உள்ளத்தில் கயமை புகுந்தது. கருமித்தனம் தலைவிரித்தாடியது. நாத்திக வாதம் தலையெடுத்தது. தனி மனிதனாக இருந்தால் பாதகமில்லை. சமுதாயமே இப்படி யிருந்தால் என்செய்வது! இருளைப் போக்க ஒளி விளக்கு ஒன்றுபோதுமே. நல் வாழ்வினின்று நாட்டை ஆள நல்லவர்கள் வந்தால் அவரைப் பின்பற்றி மானுட சமுதாயம் நல்ல நிலைக்கு வரலாம் அல்லவா? கொற்றவன் எவ்வழி குடிகள் அவ்வழி. அந்தக் கொற்றவனைத் தேர்ந்தெடுப்பவர்கள் யார்? குடிமக்கள்தான். அக்கால மாந்தர் தர்மத்துக்குப் பயந்து நடந்தார்கள். ஆகவே, சத்தியத்திலிருந்தும், தர்மத்திலிருந்தும் பிசக மறுத்தனர். தர்ம வழியில் சென்றவர்களுக்குப் பிறந்த புத்திரர்களும் தர்ம புத்திரர்களாகவே இருந்தனர். ஆகவே, அவர்கள் தேர்ந்தெடுத்த அரசன் தர்மவானாகவே இருந்தான். பிறர் நலன் பொருட்டுத் தன்னுயிர் தந்த அறவள்ளல்களையும், சத்தியத்தின் பொருட்டு நாட்டைத் துறந்து காடு ஏகிய அரசப் பெருமக்களையும் முன்னோராகப் பெற்றமைக்குப் பெருமையுறுகிறோம். சிறிதும் ஆராயாது கோவலனைக் ,கள்வன் எனக் கொலைக் குற்றம் சாட்

டிய பாண்டிய மன்னன் தன் தவறை உணர்ந்ததும் உயிர் துறந்தான் என்பதையும் படிக்கிறோம். ஆனால் இன்றோ தர்மம் நலிந்து அதர்மம் ஆட்சி புரிகிறது. அதர்மத்தில் வளர்ந்து வருகிற சமுதாயம் திருந்தியமையும் காலம் வரவேண்டும். நல் அமைச்சன் ஒருவன் இன்றைய சூழ்நிலையில் மட்டமான திரைப் படங்களைத் திரையிடத் தடை விதித்து, லஞ்ச ஊழலுக்குக் கடுங்காவல் சிறைவாசம் கொடுத்து, கள்ளநோட்டுத் தயாரிப்பவரையும், கள்ளக்கடத்தல்காரர்களையும், கலப்படக்காரர்களையும், உணவு தானியங்களைப் பதுக்கி வைத்து மக்களைப் பட்டினி போடுபவர்களையும் உலகில் வாழவிடாது கொன்று தள்ள நல்ல சட்டங்களை இயற்றினால் அந்த அமைச்சன் ஆட்சியில் நீடிக்கமுடியுமா? ஜனநாயகம் என்று பெயர் சொல்லி அவனைக் கீழிறக்க முயலுகிற காலமல்லவா? அக்கால மாந்தர் தர்மத்திற்குப் பயந்து நெறியாக வாழ்ந்ததுபோன்று இக்கால மக்கள் அரசாங்கம் விதித்த சட்டத்திற்குப் பயந்து நல்லவர்கள் போல வாழ்வதாகக் காட்டிக்கொள்கிறார்கள். அரசாங்கம் தன்னுடைய சட்டத்தை அகற்றி, யாரும் எதுவும் பண்ணலாம், தவறு பண்ணினாலும் கண்டிக்க மாட்டார்கள் என்ற நிலை ஒன்று உருவானால் நாம் மனிதர்களாகத்தான் இருப்போமா? நாட்டில் என்ன நடக்கும்? ஆகவே, சட்டங்களைப் போட்டு எத்தனை நாட்களுக்கு அமைதியான வாழ்வு ஓடிக்கொண்டிருக்கும்? அப்படியானால் ஆட்சியே இருக்கக் கூடாது என்று சொல்லி விட முடியுமா? தனி மனிதன் என்று தன்னைத் திருத்தி பண்பாளனாக மாற்றியமைக்கிறானோ அன்றுதான் சமுதாயத்தில் தர்மத்தைக்காண முடியும். நாட்டில் அங்கொருவர் இங்கொருவர் நல்லவராக இருந்தாலும் நாம் எதிர்பார்க்கிற நிலை ஏற்படாது. சமுதாயம் அனைத்தும் தெய்விகப் பண்புகளில் ஊறி வளரவேண்டும். ராணுவத்துக்கும், குடும்பக் கட்டுப்பாடு போன்ற காரியத்தில் ஏராளமாகப் பொருள் செலவிடும் அரசு மனிதனுடைய பண்பை வளர்ப்பதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் அது நிச்சயம் பயன்படக்கூடியதாகவிருக்கும். நாட்டிலுள்ள அறியாமை நீங்க நல்லறிவு புகட்டும் ஏராளமான நூல்களை வெளியிட்டு ஏராளமான இலவச நூலகங்களைத் திறந்து அனைவரும் படிக்க வகை செய்ய வேண்டும். மனதைக் கீழே கொண்டு செல்லும் தீண்டத்தகாத நூல்களுக்கும் திரைப் படங்களுக்கும் தடைவிதிக்க வேண்டும். மனதைக் கெடுத்துப் பாழாக்கும் திரையரங்கம் ஊருக்கு ஊர் தவறாது இருக்கிறது. நல்வழி காட்டும், பண்பாட்டை வளர்க்கும் நல்ல ஆஸ்ரமங்கள் ஊர்தோறும் இருக்கின்றனவா? மட்டமான நூல்களும் புற்றீசல் போல குவிந்து வருகின்றனவே. நம்மை மேலோர்களாக்கும் சமய சம்பந்தமான நூல்கள் அந்த அளவுக்குஎழுதப்படுகின்றனவா? அல்லது அரசுதான் ஊக்குவிக்கிறதா? சச்சரவை உண்டுபண்ணும் அரசியல் பேச்சுகள் ஊர்தோறும், மேடைதோறும் பேசுகிறார்களே. மனிதனைத் தெய்வமாக்கும் ஞானக் கருத்துக்களை அந்த முறையில் மக்களுக்குப் பரப்ப ஆர்வம் கொள்ள யாராவது முன் வருகிறார்களா? தவறு செய்பவனைத் திருத்தியமைத்திருந்தால் அவன் தவறு செய்திருப்பானா? ஆகவே, சென்றதை முன் அனுபவமாக வைத்து எதிர்காலச் சமுதாயமாவது உய்வு பெற்றுத் தெய்விக வாழ்க்கை வாழவும், சமுதாயம் சச்சரவின்றி சுபிட்சமாக வாழவும் பெரியோர்கள் காட்டிச் சென்ற வழியில் நாம் செல்ல வேண்டும்.

செய்திகள்

நிகழ்பவை

மார்ச்சு மாதம் 29ஆம் தேதி செவ்வாய்க் கிழமையன்று ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்டநாம பஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணிவரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

*ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி வியாழக்கிழமையன்று ஈரோடு தாலுகா காளமங்களம் கணபதிபாளையத்திலுள்ள ஸ்ரீ வாகீசர் சைவ சித்தாந்த சன்மார்க்க சபையில் மாலை 3-00 மணியிலிருந்து 5-30 மணிவரையில் சிறு அந்தர் யோகம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** நடத்துவார்கள்.*

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம்-மூன்றும் பதிப்பு
பிரசார விலை ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை-பதினைன்றும் பதிப்பு
பிரசார விலை ... 12-00
ஞானயோக விளக்கம் ... 8-00
ராஜயோக விளக்கம் ... 8-00
கர்மயோக விளக்கம் ... 7-00
பக்தியோக விளக்கம் ... 6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ... 4-00
விவேகானந்த உபநிஷதம் ... 4-00
கடவுளின் வடிவங்கள் ... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II ... 3-50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரி
ஆறும் பதிப்பு-பிரசார விலை ... 2-75
தினசரி தியானம்-பதிமூன்றும் பதிப்பு
(பிளாஸ்டிக் உறையுடன்) பிரசாரவிலை ... 2-75
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம் ... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் ... 2-00
கண்ணன் என்னும் கடவுள் ... 2-00

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக்கடவுள் ஷை ... 2-00
மௌனகுரு வணக்கம் ஷை ... 1·50
பரசிவ வணக்கம் ஷை ... 0-50
சந்நியாசி ... 1-25
பஜனைப் பாடல்கள் ... 1-25
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
இராவணத் தத்துவம் ... 1-00
சகோதரி நிவேதிதை ... 1-00
ஹரிச்சந்திரன் (நாடகம்) ... 1-00
காயத்ரீ ... 1-00
வாலிமோக்ஷம் (நாடகம்) ... 1-00
அறம் வளர்த்த நம்பி ... 0-95
நோய்க்கு இடம் கொடேல் ... 0-80
நன்மக்களைப் பெறுதல் ... 0-80
தானவீரன் கர்ணன் (நாடகம்) ... 0-80
பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்)... 0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) ... 0-75
இறை வணக்கம் ... 0-75

*ஆத்ம சக்தி ரூ. 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?... 0-75
*மனிதனது நிஜசொரூபம் ... 0-70
*சக்தி தத்துவம் ... 0-70
*சிவ தத்துவம் ... 0-70
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி
கர்வபங்கம் (நாடகம்) ... 0-65
பிரஹ்லாதன் (நாடகம்) ... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ... 0-60
இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் ... 0-60
*ஆலய வழிபாடு ... 0-60
ஸ்ரீ ராமகிருஷ்ணஷ்டோத்தர சத
நாமாவளி: ... 0-50
சைவன் யார்? ... 0-50
*சூரிய நாராயணன் ... 0-50
*முருகக் கடவுள் ... 0-50
*விஷ்ணு தத்துவம் ... 0-50
மார்க்கண்டேயன் (நாடகம்) ... 0-40
தபோபலன் (நாடகம்) ... 0-40
*கணபதி ... 0-40
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து 1 முதல் 18 வரை
ஒவ்வொன்றும் ... 0-30
பரசுராமர் கர்வ பங்கம் (நாடகம்) ... 0-15

The Bhagavad Gita (8th Imp.) ... 15-00
The Indian National Education ... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram ...8-00
Ramakrishna Lives Vedanta ... 5-00
Facets of Brahman or The Hindu Gods... 5-00
Daily Divine Digest (with plastic-
cover) ... 4-50
Mahabharata (with plastic cover) ... 4-50
Ramayana (do) ... 4-00
The Man Making Message of
Vivekananda (with plastic cover) ... 3-00
The Bhagavad Gita (Small Size)
(With plastic cover) ... 3-00
Sri Vishnu Sahasranama Stotram ... 2-50
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
*Introducing the Gita ... 1-50
*Key to Higher Life ... 0-75
*The Teacher ... 0-60
*The Student ... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபாற் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-00ம் மஞ்ஜரீக்கு ரூ. 2-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை–639 115, திருச்சி Dt.

DHARMA CHAKRAM Regd. No. M. 6022

திருவாசகம்

விளக்கியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



பதவுரை—கருத்துரை—விளக்கமான விரிவுரையுடன், ஏற்ற இடங்களில் உபநிஷத் மந்த்ரங்களும் இணைக்கப்பெற்றிருக்கின்றன.

எல்லோரும் அறிந்துகொள்ளக்கூடிய இனிய தமிழ்நடை. டெம்மி 1க்கு 8ல் 993 பக்கங்களையுடையது. உயர்ந்த தடிப்பான இந்தியன் பிரிண்டிங் கிளேஸ் காகிதம்-சுத்தமான பதிப்பு-அழகிய பிளாஸ்டிக் காலிகோ பைண்டு. ரூ 20-00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தைக்கொண்டு மிக மிகக் குறைந்த

விலை ரூ. 14-00க்கு விற்கப்படுகிறது.

(தபால் செலவு ரூ. 3-00)

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

Edited by SWAMI NITHYANANDA,
Printed&Published by Swami Yogananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.